விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 பங்குனி 17 சனிக்கிழமை (31.03.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 102

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

## யாழ்ப்பாணத்திற்கு இன்று விஜயம்

(யாழ்ப்பாணம்)
முன்னாள் ஜனாதிபதியும் நல்லிணக்க செயலணியின் தலைவருமான சந்திரிகா பண்டாரநாயக்க நான்கு நாள் பயணமாக இன்று வடக்கு மாகாணத்துக்கு வருகை தருகிறார். 23

மோட்டார் சைக்கிளில் சென்றவேளை


## ஆசிரியையின் சங்கிலி அறுப்பு

பருத்தித்துறை வீதியில் சம்பவம்

(பருத்தித்துறை)
மோட்டர் சைக்கிளில் வீதியில் சென்று கொண்டிருந்த ஆசிரியையின் இரண்டரைப் பவுண் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் சென்ற கொள்ளையர்கள் 23

# அதிகார பரவலாக்கலை செயலில் காட்ட வேண்டும்

## அரசுக்கும் இதையே தெரிவித்தேன் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)
அதிகாரப் பரவலாக்கம் என்பது இருந்தால் அதனை அரசு செயலில் காட்டவேண்டும் என தெரிவித்த முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மாகாண செயற்றிட்டங்களை தயாரிக்கும்போது அதற்குள் எம்மையும் உள்வாங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலை காப்பாற்றுவது கூட்டமைப்புக்கு தேவையற்றது

சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணையின் போது ரணிலை காப்பாற்றுவதற்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வாக்களிப்பதென்பது தேவையற்றது என தெரிவித்துள்ள தமிழ்த் 23


## பேரினவாத கட்சிகளுக்கு ஆதரவாக வாக்களித்த

காங்கிரஸ் உறுப்பினர் மீது நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)
அம்பாறை திருக்கோவில் பிரதேச சபையில் தவிசாளர் மற்றும் உப தவிசாளர் தெரிவில் பேரினவாத கட்சிக்கு ஆதரவாக வாக்களித்த அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சின்னத்தில் போட்டியிட்ட உறுப்பினர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை 23

## பிரதமர் ரணிலை காப்பாற்ற கூட்டமைப்பு முயற்சிக்கக் கூடாது

அத்துரலிய ரதன தேரர் எச்சரிக்கை



(கொழும்பு)
பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிப்பதற்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கக்கூடாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரதன தேரர் 23

நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில்

## பிரதமருடன் உடன்பாடு இல்லை ஜனாதிபதி அலுவலகம் மறுப்பு

(கொழும்பு)
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை தோற்கடிப்பதற்கு ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையே எவ்வித உடன்பாடும் எட்டப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.
அதன்படி நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எதிராக ஜனாதிபதி - பிரதமர் இடையே உடன்பாடு எட்டப்பட்டதாக வெளியாகிய தகவல்களுக்கு ஜனாதிபதி அலுவலக பேச்சாளர் மறுப்பு தெரிவித் 23

## 50 ஆயிரத்துக்கு உட்பட்ட கடன்களை ஆறு மாதங்களுக்கு செலுத்தத்தேவையில்லை

மத்திய வங்கி ஆளுநர்

(யாழ்ப்பாணம்)
மத்திய வங்கியின் கீழ் உள்ள வங்கி மற்றும் நிதிநிறுவனங்களில் பெற்றுக்கொண்ட சிறு கடன்களை மீளக்கட்டமைப்பதற்கு மத்திய வங்கி ஆளுநர் குமாரசுவாமி இந்திரஜித் அறிவித்துள்ளார். 04

எதிர்வரும் சித்திரை புத்தாண்டுக்கு முன்

## வடக்கில் இராணுவம் வசமுள்ள 500 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படும்

### இராணுவத்தளபதி உறுதி

(யாழ்ப்பாணம்)
வடக்கில் இராணுவம் வசமுள்ள 500 ஏக்கருக்கு அதிகமான காணிகள் எதிர்வரும் புத்தாண்டு மாதத்தில் விடுவிக்கப்படும் என இராணுவ தளபதி மகேஸ் சேனாநாயக்க உறுதியளித்துள்ளார்.
நல்லிணக்கபுரம் வீடமைப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக 25 வீடுகளை பொதுமக்களிடம் கையளித்து உரையாற்றுகை 23

## அரசாங்கத்திற்கு மாத்திரம் சம்பந்தன் உதவுகின்றார்

யாழில் தெரிவித்தார் வாசுதேவ



(யாழ்ப்பாணம்)
அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட இரா.சம்பந்தன் அரசாங்கத்திற்கு மாத்திரமே உதவிக் கொண்டிருக்கின்றார் என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார 23

## அப்பாவை ஜனாதிபதி மாமா எங்களிடம் சேர்ப்பிப்பார்

ஆனந்தசுதாகரனின் பிள்ளைகள் நம்பிக்கை



(யாழ்ப்பாணம்)
தமது அப்பா சித்திரை புத்தாண்டுக்கு முன்னர் விடுதலையாகி தம்மிடம் வருவார் என அரசி 23

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வடக்கு மாகாண சபை முன் போராட்டம்

(யாழ்ப்பாணம்)
வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வடக்கு மாகாண சபையின் முன்பாக நேற்றையதினம் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றில் ஈடுபட்டிருந்தனர்.




இந்த போராட்டம் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்றுள்ளது. வவுனியாவில் ஒரு வருடத்திற்கும் மேலாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களே கவனயீர்ப்பில் ஈடுபட்டிருந்தனர். 24

## வடக்குக்கு முன்மொழியப்பட்ட பாதீட்டு யோசனை நடைமுறைப்படுத்தப்படும்

யாழில் அமைச்சர் மங்கள சமரவீர



(யாழ்ப்பாணம்)
கடந்த வரவு - செலவுத்திட்டத்தில் வடக்கு மாகாணத்திற்கு முன்மொழியப்பட்ட யோசனைகள் விரைவில் நடைமுறைப்படுத்தப்படுமென நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். 23

# மரண அறிவித்தல்



## திருமதி சண்முகநாதன் பாக்கியரெத்தினம்

கொக்குவில் மேற்கு, மணியர்பதி வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியரெத்தினம் சண்முகநாதன் அவர்கள் நேற்று (30.03.2018) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்த்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் -சோதிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகளும், சண்முகநாதன் அவர்களின் அன்பு மனைவியும், கலைச்செல்வி (யசோ-சுவிஸ்), அருட்செல்வன் (பாபு- நோர்வே), ராஜ்மோகன் (ரமேஸ் - சுவிஸ்), சிவபாலன் (வியாஸ் - லண்டன்), பாலாம்பிகை (அபிராமி - வருகைதரு விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்), நடனகுமரன் (பாக்யா புத்தகசாலை உரிமையாளர்) ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி மற்றும் சிவசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமிர்தலிங்கம், யசோதா, மனுஎலா, அனுஷா, சிவாஜினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ரம்யா, ரித்யா, மிஷா, சிவனுஜன், கனிஸ்கா, காருண்யா, லாவண்யா, திராஜ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.04.2018) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மணியர்பதி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (3463)

தகவல்:
குடும்பத்தினர்

# பிரேரணை விவாதம் 12 மணித்தியாலம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பான விவாதத்தினை 12 மணித்தியாலங்கள் நடத்துவதற்கு பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

ஒருநாள் விவாதமொன்றிற்காக கூடிய அளவு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளமை வரலாற்றில் இதுவே முதற்தடவையாகும் என பாராளுமன்ற தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி குறித்த விவாதம் எதிர்வரும் 4ஆம் திகதி காலை 9.30 மணி தொடக்கம் இரவு 9.30 வரை இடம்பெறவுள்ளது. (ம)


**Personal, Group Classes**

இரசாயனவியல் (A/L) 2018, 2019, 2020, Repeat Batch
38 வருட Past Papers கற்பிக்கப்படும்.
சி.அங்கதன் (B.Sc [chem.spl])
தொடர்பு: 0779208945
(3459)

**English Personal Classes**
**ஆங்கிலம் பிரத்தியேக வகுப்புகள்**

அனுபவம் மிக்க ஆசிரியரினால் உங்கள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.
தொ.பே: 077 658 9443
யாழ்ப்பாணம்
(3461)

**ஆசிரியர்கள் தேவை**

யாழ் நகரிலும் அதையண்டிய பகுதியிலும் ஒரே நிர்வாகத்தின் கீழ் பெருத்த எடுப்பில் நடத்தப்படவுள்ள தனியார் கல்வி நிறுவனத்திற்கு உயர்தர கலை, வர்த்தக பிரிவு (Arts & Commerce) ஆசிரியர்கள் உடனடியாக தேவை. 0773515678

**வாகனங்கள் வாடகைக்கு தேவை**

கார்கள், வான்கள் மாதாந்த வாடகைக்குத் தேவை.
071 040 4978
(3463)

**அனுமதிப் பத்திரமுள்ள சாரதிப் பயிற்றுநர் தேவை**



புதிதாக தொடக்கப்படவுள்ள சாரதிப் பயிற்சிப் பாடசாலை ஒன்றுக்கு "Driving Instructor" உடனடியாக தேவை.
0784811026/0214332851
(3457)


# கல்யாண் அடைவு கடை

கல்யாண் நகை மாடம்
இல.65, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
பதிவு இல: A007879

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2017 ஆம் ஆண்டு 27.12.2017 இற்கும், 30.12.2017 இற்கும் உட்பட்ட திகதிகளில் வைத்த அடைவு நகைகள் யாவற்றையும் 2018 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 07 ஆம் திகதி (07.04.2018) இற்கு முன்னர் மீட்கவும், மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தை கட்டி புதுப்பித்துக் கொள்ளவும், புதுப்பிக்கத் தவறின் 07.04.2018 ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்: T.Raguna,
கல்யாண் அடைவு கடை,
இல.65, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 077 754 5768,
077 449 5605
(3460)

# நன்றி நவிலலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



## திருமதி இராசம்மா நாகலிங்கம்

கடந்த 27.02.2018 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது தாயார் திருமதி இராசம்மா நாகலிங்கம் அவர்களின் மரணச் செய்தி கேட்டு நேரில் வருகை தந்தும் தொலைபேசி ஊடாகவும் கண்ணீர் அஞ்சலிகள், பதாகைகள் மூலமும் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எமது தாயாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (31.03.2018) சனிக்கிழமை காலை 10 மணிக்கு அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் தாங்களும் கலந்து கொள்வதோடு மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

செட்டிச்சோலை,
அளவெட்டி. (3458)

அமரர் பண்டிதர் நாகலிங்கம்
அவர்களின் குடும்பத்தினர்.

# தேவை

20 வயதுடைய மாணவர் ஒருவருக்கு சிறுநீரகம் செயலிழந்தமையால் O+ அல்லது O- இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடன் தேவை.
தொடர்பு: 0768053789, 0769633987, 0212227263
(3446)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


# நூல் வெளியீட்டு விழாவும் நினைவுகூரலும்



பண்டிதர், வித்துவான், சைவப்புலவர்,
ஆன்மீக சொற்பொழிவாளர்

## இராமுப்பிள்ளை திருநாவுக்கரசு

(முன்னாள் அதிபர்)
அவர்களின் பெருமை கூறும்
"நாவுக்கினியன்"
நூல் வெளியீட்டு விழாவும் நினைவுகூரலும்

**தலைமை:**
பேராசிரியர் க.தேவராஜா
(யாழ். பல்கலைக்கழகம்)

**காலம்:**
இன்று (31.03.2018) சனிக்கிழமை காலை 9 மணி

**இடம்:**
இணுவில் அறிவாலயம்
(இணுவில் கந்தசுவாமி கோயில் முன்பாக)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

# “இனியும் குற்றவாளியாக நிற்க முடியாது”

# ஜெனிவாவில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய அவசியமில்லை

## இலங்கை அரசு திட்டவட்டம்; நீதியை நிலை நாட்டுவதில் அலட்சியப் போக்கு

(கொழும்பு)

ஜெனிவா மனித உரிமை பேரவையிலும் சர்வதேச அமைப்புகளுக்கும் கொடுத்த வாக்குறுதிகளை முழுமையாக நாட்டில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற அவசியம் எமக்கு இல்லை. அரசியல் அமைப்பின் பிரகாரமே எமது நகர்வுகளை நாம் முன்னெடுப்போம்.

அத்துடன் சர்வதேச புலி ஆதரவு அமைப்புகளுடன் எந்தப் பேச்சுவார்த்தைக்கும் இடமில்லை என அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

ஜெனிவாவில் குற்றவாளியாக இலங்கை நிற்கும் இறுதி விஜயம் இதுவாகவே இருக்க வேண்டும். இனியொருபோதும் சாட்சிக்கூண்டில் நிற்கும் பயணங்களுக்கு இடமில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கட்சி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 37 ஆவது கூட்டம் இடம்பெற்றுள்ளது. இதில் இலங்கை விவகாரங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இம்முறை இலங்கை பிரதிநிதிகள் குழாமில் வெளிவிவகார அமைச்சின் குழுவுடன் நாமும் கலந்து கொண்டிருந்தோம். கடந்த 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் கொண்டு வரப்பட்ட தீர்மானங்கள் இலங்கை அரசாங்கத்தினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கமையவே தொடர்ச்சியாக இலங்கை விவகாரங்கள் குறித்து ஆராயப்பட்டும் வருகின்றது. இதில் மனித உரிமை பேரவையின் நிலைப்பாடு, அங்கத்துவ நாடுகளின் நிலைப்பாடு, இலங்கை அரசாங்க பிரதிநிதிகளின் நிலைப்பாடு மற்றும் சிவில், அரச சார்பற்ற நிறுவனங்களின் நிலைப்பாடுகள் என்பன ஆராயப்படும்.

நாம் கடந்த காலங்களில் கொடுத்த வாக்குறுதிகளுக்கு அமைய சில முக்கியமான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். குறிப்பாக காணாமற்போனோர் குறித்த காரியாலயம் அமைக்கப்பட்டது. வலுக்கட்டாயமாக காணாமற்போனோர் குறித்த சர்வதேச சமவாய சட்ட மூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கான நட்ட ஈடு வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான நிலையில் இலங்கையின் செயற்பாடுகளில் மந்தகதியான போக்கே முன்னெடுக்கப்பட்டு வருவதாக மனித உரிமைகள் பேரவையும் சர்வதேச நாடுகளும் குற்றம் சுமத்தியுள்ளன. அதனை நாம் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. அத்துடன் மனித உரிமைகள் பேரவையின் அவசரத்திற்காகவோ அல்லது சர்வதேச சிவில் அமைப்புகளின் தேவைக்காகவோ எம்மால் துரிதமாக எந்த நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியாது. இது ஜனநாயக நாடு. எனினும் தீர்வுகள் குறித்து தீர்மானங்கள் எடுக்கும் போது ஆழமாக சிந்தித்து மெதுவாகவே தீர்மானங்களை முன்னெடுக்க வேண்டும்.

அதேபோல் இதற்கு முன்னர் ஜெனிவாவில் என்ன தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தாலும், என்ன வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டிருந்தாலும் அவற்றையெல்லாம் இலங்கையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற அவசியம் எமக்கு இல்லை. நாம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளை இலங்கை அரசியல் அமைப்பின் பிரகாரமே முன்னெடுப்போம். சர்வதேசம் கூறியதற்காக எம்மால் இங்கு தீர்மானங்களை நடைமுறைப்படுத்த முடியாது. இம்முறை ஜெனிவா கூட்டத் தொடரில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டினை தெளிவாக முன்வைத்துள்ளோம்.



மேலும் சர்வதேச நீதிமன்ற கட்டமைப்புகளை அனுமதித்து அதன்மூலமாக உண்மைகளை கண்டறியும் செயற்பாடுகளை முன்னெடுப்பதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. உண்மைகளை கண்டறிய உள்ளக பொறிமுறை செயற்பாடுகளை கையாள முடியும். சர்வதேச தொழில்நுட்ப உதவிகளை நாம் மறுக்கவும் இல்லை. எனினும் நீதி விசாரணைகளை இலங்கையை மூலமாக மட்டுமே இடம் பெற முடியும். இதில் சர்வதேச நீதிபதிகளுக்கு இடமில்லை. இந்த விடயத்தில் சிவில் அமைப்புகளும், சர்வதேச அமைப்புகளும் தமது கருத்துக்களை கூறி எம்மை விமர்சிக்க முடியும். எனினும் அரசாங்கமாக நாம் இந்தக் கருத்துக்களை செவிமடுக்க தயாராக இல்லை. இதில் வாத விவாதங்களுக்கும் ஒருபோதும் இடமில்லை.

அதேபோல் இந்த நாட்டில் பயங்கரவாதம் நிலவிய காலத்தில் பல நெருக்கடிகளுக்கு நாம் முகங்கொடுக்க நேர்ந்தது.

இலங்கையின் பயங்கரவாதமே சர்வதேச பயங்கரவாத வளர்ச்சிக்கு கூட துணை நின்றது எனலாம். அவ்வாறான ஒரு நிலையில் எமது இராணுவம் பயங்கரவாதத்தை தோற்கடித்து இன்று யுத்தம் நிறைவடைந்து பத்து ஆண்டுகளாகின்றன. மக்கள் அமைதியாக வாழ்கின்றனர்.

இன ரீதியிலான நெருக்கடிகள் எவையும் இல்லாது நாடு அமைதியான பயணத்தினை முன்னெடுத்து செல்கின்றது.

அவ்வாறு இருக்கையில் சர்வதேச நாடுகளில் உள்ள பயங்கரவாத ஆதரவு அமைப்புகள் இலங்கையை நெருக்கடிக்குள் தள்ளும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. இந்த பயங்கரவாத அமைப்புகள் எம்மை பேச்சுவார்த்தைகளுக்கு அழைக்கின்றன. எமக்கு அவர்களுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க எந்த அவசியமும் இல்லை. தமிழ் பயங்கரவாத ஆதரவு அமைப்புகளை சந்திக்க நாம் தயாராகவும் இல்லை. அவர்களுடன் பேச்சு வார்த்தையும் இல்லை.

மேலும் இம்முறை இலங்கை அரசாங்கமாக நாம் மிகமுக்கிய தீர்மானம் ஒன்றை முன்னெடுத்துள்ளோம். இலங்கையில் யுத்தம் முடிவுக்கு வந்து 10 ஆண்டுகள் ஆகின்றன. இந்த பத்து ஆண்டுகளில் பல்வேறு மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. யுத்த மனோநிலையில் இருந்து மக்கள் விடுபட்டு இன்று அமைதியான நாட்டுக்குள் இணைந்து வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் நாம் தொடர்ந்தும் மனித உரிமைகள் பேரவையில் குற்றவாளியாக நிற்க முடியாது. மனித உரிமைகள் குறித்து ஜெனிவாவில் நாம் குற்றவாளியாக நிற்கும் இறுதி சந்தர்ப்பம் இதுவாக அமைய வேண்டும். நாம் இன்று பொறுப்புக் கூறவும் நெருக்கடிகளை சந்திக்கவும் பயங்கரவாதிகளே காரணமாகும். அவர்கள் முன்னிலையில் குற்றவாளிகளாக நாம் நிற்கவேண்டிய அவசியம் இல்லை. இலங்கையை ஒரு சாட்டாக வைத்துக் கொண்டு சர்வதேச அமைப்புகளும் மனித உரிமைகள் பேரவையும் அவர்களின் இருப்பினை தக்கவைக்க முயற்சித்து வருகின்றன. ஆகவே இனியும் நாம் மனித உரிமைகள் பேரவையில் சாட்சியாளர்களாக நிற்க வேண்டிய நிலைமையினை இந்தத் தடவையுடன் நிறுத்திக்கொள்ள வேண்டும். வெளிவிவகார அமைச்சின் ஊடாக அதற்கான பரந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். சர்வதேச நாடுகளில் இருக்கும் எமது நாட்டின் தூதுவர்கள் மூலமாக எமது நிலைப்பாட்டினை வெளிப்படுத்த வேண்டும். சர்வதேச நாடுகளை எம் பக்கம் ஈர்க்கும் நடவடிக்கைகளை கையாள வேண்டும் அதை விடுத்து நாம் தொடர்ந்தும் குற்றவாளியாக நிற்க முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# உலக வல்லரசுகளின் கோரப்பிடியில் இலங்கை

## அமரசேகர அச்சம்

(கொழும்பு)

“தேசிய அரசாங்கத்தின் முறையற்ற நிர்வாகத்தின் காரணமாக நாட்டின் பொருளாதாரம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கு ஐக்கிய தேசிய கட்சியே பொறுப்புக் கூற வேண்டும்” எனப் பேராசிரியர் குணதாச அமரசேகர தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார நிலை தொடர்பில் ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தும் நிகழ்வு நேற்று கொழும்பில் இடம்பெற்றது. இதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,



கடந்த கால அரசாங்கத்தினை விட தேசிய அரசாங்கத்தில் கடந்த மூன்று வருடங்களில் அதிகமான கடன்கள் பெறப்பட்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தில் 30 வருட கால யுத்தத்தினை முடிவுக்கு கொண்டு வந்ததுடன் குறுகிய காலகட்டத்தினுள் நாடு பாரிய அபிவிருத்தினையும் அடைந்தது.

ஆனால் தற்போது அபிவிருத்தி நடவடிக்கைகளை எங்கும் தேடிக் காணமுடியவில்லை. மாறாக இலங்கையின் உள்ளூர் மற்றும் சர்வதேச விடயங்களில் மேற்குலக வல்லரசு நாடுகளின் ஆதிக்கம் மித மிஞ்சியதாக காணப்படுகிறது.

உலகை வல்லரசு நாடுகளின் பிடியிலிருக்கும் வரை இலங்கை பொருளாதார ரீதியில் முன்னேற்றமடையாது.

இலங்கை முழுமையாக மேற்குலகத்தவர்களின் நிர்வாகத்தில் செயற்படுவது எதிர்காலத்தில் அபாயங்களை தோற்றுவிக்கும்” என அவர் மேலும் எச்சரித்தார். (இ)

# ரணிலுக்கு எதிரான பிரேரணை விவாதத்தைக் கண்காணிக்க இராஜதந்திரிகள் அதிக ஆர்வம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது விவாதம் நடத்தப்படும். எதிர்வரும் 4ஆம் திகதி நாடாளுமன்றம் வருகை தந்து சபை நடவடிக்கையைப் பார்வையிடுவதற்கு மேற்குலக நாடுகளில் இராஜதந்திரிகள் பலரும் ஆர்வம் காட்டி வருகின்றனர் என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த செய்தியில், “இதற்கான அனுமதியை வழங்குமாறு சபாநாயகரிடம் முக்கிய சில இராஜதந்திரிகள் கோரியுள்ளனர் என்று தெரியவருகின்றது.

அத்துடன், மாகாண மட்டத்திலுள்ள அரசியல் பிரமுகர்களும் அன்றைய தினம் அவைக்கு வருவதற்கு விருப்பம் கொண்டுள்ளனர்.

முக்கிய அரசியல் பிரமுகர்கள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள், வெளிநாட்டுத் தூதுவர்கள் ஆகியோர் நாடாளுமன்றத்துக்கு வருகை தந்தால் சபாநாயகர் கலரியில் இருந்தவாறே சபை நடவடிக்கைகளை அவதானிப்பார்கள்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் கூட்டு எதிரணியால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது எதிர்வரும் 4ஆம் திகதி முற்பகல் 10 மணிமுதல் 12 மணி நேரம் விவாதம் நடத்தப்பட்டு இரவு 9.30 மணியளவிலேயே வாக்கெடுப்பு நடத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# ஜோகன்னஸ்பேர்க் டெஸ்ட்

# மார்க்ரம் சதம்: தென்னாபிரிக்கா வலுவான ஆரம்பம்

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக ஜொகனஸ்பேர்க்கில் நடக்கும் 4ஆவது டெஸ்டில் தென்னாபிரிக்கா வின மார்க்ரம் சதம் கடந்து அசத்தினார்.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி, அங்கு 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் மூன்று போட்டிகளின் முடிவில் தென்னாபிரிக்க அணி 2-1 என முன்னிலையில் உள்ள நிலையில், நேற்று நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் ஜொகனஸ்பேர்க் நகரில் ஆரம்பமானது.

**பெய்ன் தலைவர்**

கேப் டவுண் டெஸ்டில் பந்தை சேதப்படுத்திய விவகாரத்தில் தடை விதிக்கப்பட்டுள்ள ஸ்ரீவ் ஸ்மித், டேவிட் வோர்னர், பான் கிராப்ட் ஆகியோருக்கு பதிலாக ஜோ பேர்ன்ஸ், மட் ரென்ஷா, பீற்றர் ஹேண்ட்ஸ்கோம்ப் சேர்க்கப்பட்டனர். அணித் தலைவராக விக்கெட் காப்பாளர் ரிம் பெய்ன் நியமிக்கப்பட்டார். காயத்தால் விலகிய மிட்சல் ஸ்ரார்க்கிற்கு பதிலாக சேயர்ஸ் தேர்வானார்.

நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணித் தலைவர் டு பிளசி, முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

**மார்க்ரம் அபாரம்**

தென்னாபிரிக்க அணிக்கு டீன் எல்கர் (19) சுமாரான ஆரம்பம் கொடுத்தார். அம்லா (27) நிலைக்கவில்லை. அபாரமாக ஆடிய மார்க்ரம், 4ஆவது டெஸ்ட் சதமடித்தார். கம்மின்ஸ் பந்தை பவுண்டரிக்கு விரட்டி, டெஸ்ட் அரங்கில் முதன்முறையாக 150 ஓட்டங்களைக் கடந்தார். இவர், 152 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது ஆட்டமிழந்தார்.

அணித் தலைவர் டு பிளசி, 'டக்-அவுட்' ஆனார். பொறுப்பாக ஆடிய டி வில்லியர்ஸ் (69) அரைச்சதம் கடந்தார். ரபாடா (0) ஏமாற்றினார்.

இந்நிலையில் முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தபோது, தமது முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடி வரும் தென்னாபிரிக்க அணி, 6 விக்கெட்டுக்களை இழந்து 313 ஓட்டங்களை எடுத்திருந்தது.

களத்தில் பாவுமா (25), குயின்ரன் (7) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலியா சார்பில் கம்மின்ஸ் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.





மியாமி ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி அமெரிக்காவில் நடந்து வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் அமெரிக்காவின் ஸ்டென்டீஸ் 3-6, 6-2, 6-1 என்ற செட் கணக்கில் அசெரன்காவை (பெலாரஸ்) வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

## ஆறு மாதங்களுக்கு...

அதனடிப்படையில் 50 ஆயிரத்துக்கு உட்பட்ட கடன்களை பெற்றவர்கள் ஆறு மாதங்களுக்கு மீளளிக்க தேவையில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரவு செலவுத் திட்டத்தில் வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட விசேட நிதி தொடர்பில் கலந்துரையாடுவதற்காக நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர, மத்திய வங்கி ஆளுநர் குமாரசாமி இந்திரஜித் உள்ளிட்ட குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தனர்.

யாழ்.மாவட்ட செயலகம் மற்றும் தனியார் விடுதிகளில் பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தனர். குறிப்பாக நிதி நிறுவனங்களின் நடவடிக்கைகள் தொடர்பான முன்னேற்றங்களை அறிந்து கொள்வதற்கான கலந்துரையாடலின் போது மேற்குறித்த விசேட அறிவிப்பினை ஆளுநர் வழங்கியிருந்தார்.

மத்திய வங்கி ஆளுநர் கடந்த முறை வடக்குக்கு வருகை தந்திருந்ததுடன், நிதி நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களுடன் கலந்துரையாடியிருந்தார்.

அந்த வகையில் பல்வேறு கோரிக்கைகள் பொதுமக்களால் விடுக்கப்பட்டிருந்தது. குறிப்பாக நுண்கடன் திட்டங்கள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

குறிப்பாக நுண்கடன்கள் பொதுமக்களுக்கு பாரிய பிரச்சினையாக இருப்பதுடன் கடன்களை மீள செலுத்துவதில் சிக்கல் நிலை இருப்பதால் கடன் அறவிடுவதில் மாற்று வழிகளை ஏற்படுத்துமாறு பொதுமக்களால் கோரிக்கை விடப்பட்டது.

அதற்கமைய மத்திய வங்கியின் கீழ் உள்ள வங்கி மற்றும் நிதிநிறுவனங்களில் சிறுகடன்கள் பெற்றவர்கள் அதாவது 50 ஆயிரத்துக்கு உட்பட்ட கடன்களை பெற்றவர்கள் 6 மாதங்களுக்கு அதை மீள செலுத்தாமல் விட முடியும். ஆறு மாதங்கள் நிறைவில், முதலும் வட்டியும் மீண்டும் ஒரு முதலாகும். பின்னர் அதற்குரிய வட்டியுடன் கடன அறவிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அனைத்து நிதி நிறுவனங்களுக்கும் வாடிக்கையாளர் சாசம் கடந்த ஜனவரி மாதம் 16ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளது. அதில் பொதுமக்களின் பிரச்சினைகள் உள்ளடக்கப்பட்டு பல பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 18ஆம் திகதிக்கு முன்னர் அவை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அனைத்து மாவட்ட செயலகங்களிலும் உதவிக்கரும பீடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அங்கு நிதி தொடர்பான விடயங்களை யாரும் சென்று முறையிட முடியும் என்பதுடன் அதற்கான தீர்வும் வழங்கப்படும். புதிய வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் அமைப்பதற்கு கடந்த நான்கு மாதங்களாக மத்திய வங்கியால் அனுமதி வழங்கப்படவில்லை என்பதுடன் வங்கிகள் நிதி நிறுவனங்கள் அல்லாத பகுதிகளுக்கு ஏற்கெனவே உள்ள நிதி நிறுவனங்களை விஸ்தரிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக பல விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதன் முன்னேற்றங்கள் தொடர்பாக பல்வேறு தரப்பினருடன் நேற்று ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் ஊடாக வருமானத்தை ஏற்படுத்துவது தொடர்பிலும் அதற்கு ஏற்ற வகையில் நிதி கட்டமைப்புக்களை ஏற்படுத்துவது தொடர்பாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் மேற்குறித்த குழுவினர் கலந்துரையாடியுள்ளனர். (ம-9)




வண்ணை

ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்

பங்குனி குளிர்த்தி தேரோட்ட

மஞ்சள் பால்குட பவனி விழா

**01.04.2018 (ஞாயிற்றுக்கிழமை)**

| | |
|---|---|
| கும்ப பூஜை | - அதிகாலை 4.30 மணி |
| மூலஸ்தான பூஜை | - அதிகாலை 5.30 மணி |
| வசந்த மண்டப பூஜை | - காலை 6.00 மணி |

ஒன்பது சிவாச்சாரியர்கள் தீபாராதனை செய்கின்ற உத்தம வழிபாடாக நடைபெறும்.

| | |
|---|---|
| இரதரோகணம் | - காலை 6.45 மணி |
| இரத புறப்பாடு | - காலை 7.00 மணி |

கைலாசப் பிள்ளையார் ஆலயத்தை அடைதல் 8.00 மணி

கைலாசப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து மஞ்சள் பால்குட பவனி ஆரம்பம் காலை 8.45 மணி

பழம் றோட் பிள்ளையார் ஆலயத்தை அடைதல் பகல் 10.30 மணி

இருப்பை அடைதல் பகல் 11.15 மணி, மஹா குளிர்த்தி அபிஷேக ஆரம்பம் பகல் 11.30 மணி

குறிப்பு:- ஆலயத்திலிருந்து வெள்ளி ரதம் புறப்பட்டு நல்லூர் ஆலயத்தை அடையும் வரை சிவாச்சாரியர்களின் வேதபராயணத்துடன் நல்லூர் ஆலயத்திலிருந்து கைலாச பிள்ளையார் ஆலயத்தை அடையும்வரை ஓதுவார்களின் திருமுறை பாராயணமும் கைலாச பிள்ளையார் ஆலயத்திலிருந்து மஞ்சள் பால்குடப் பவனி மற்றும் மங்கல வாத்தியத்துடன் பழம் றோட், பிள்ளையார் ஆலயத்தை அடையும். அவ்விடத்திலிருந்து தமிழர் தம் பாரம்பரிய கலை நடனங்களான மயிலாட்டம், குயிலாட்டம், குதிரையாட்டம், பாம்பாட்டம், கரகாட்டம், பொய்காலாட்டம், பெண் நடனம் என்பன தேரோட்டத்துடன் இணைந்து கொள்ளும். அரசடி பிள்ளையார் ஆலயத்தை அடைந்ததும் பறை வாத்தியம் பேரொலிக்க அடியார்களின் கற்பூரசட்டி ஆராதனையுடன் அம்பாள் ஆலயத்தை வந்தடைவாள்.

விசேட குறிப்பு:- பங்குனி குளிர்த்தி தேரோட்டத்தில் மணியோசை பேரொலிக்க யானை பால்குடம் சுமந்துவர இடபங்கள் தேரிழுக்க ரிஷப சகடம் (மாட்டுவண்டில்) அபிஷேக திரவியங்களை சுமந்து பாரம்பரிய வாத்திய கலை நடனங்களுடன் அடியார்களின் பால்குட கற்பூரசட்டி ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற அம்பாள் திருவருள் பாலித்துள்ளாள். அம்பாள் கிராம பிரவேசம் செய்கின்ற வீதிகளை அடியார்கள் வாழை, தோரணம், வேப்பிலை கொண்டு அலங்காரம் செய்து அம்பாளை வரவேற்றும் அபிஷேக திரவியங்களான பால், தயிர், இளநீர், பழவகை போன்றவற்றை அதற்கென பிரத்தியேகமாக வருகின்ற ரிஷப சகடத்தில் (மாட்டுவண்டியில்) சமர்ப்பணம் செய்து அம்பாளின் அருளை பெற்றுய்வீர்களாக.

*அன்னையின் அருட்காட்சியைக் காண அலைகடலென திரண்டு வாரீர்! வாரீர்! வாரீர்!*

அனுசரணை:- கிருபா லேணர்ஸ் (C-2063) இங்ஙனம்:- தேவஸ்தானமும் திருவிழா உபயகாரர்களும்





பாராட்டு விழா

கோண்டாவில் மக்கள், K.T.C கல்வி நிறுவனம், கைகொடுப்போம் அமையம், நலன்விரும்பிகள் இணைந்து நடத்தும்

நல்லூர் பிரதேச சபை உறுப்பினர்

திரு.கு. மதுசூதன்

அவர்களின்

பாராட்டு விழா

காலம்: 01.04.2018 ஞாயிற்றுக்கிழமை

நேரம்: பி.ப 3.00 மணி

இடம்: சிவநேசன் திறந்த அரங்கம் புகையிரத நிலைய வீதி, கோண்டாவில். (கோண்டாவில் புகையிரத கடவைக்கு அருகாமை)

தலைமை

திரு.ஞான.திருக்கேதீஸ்வரன் (ஆசிரியர், நிர்வாக இயக்குநர் K.T.C போசகர் - "கைகொடுப்போம் அமையம்")

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

(C-2062)

# ரணிலின் கூட்டத்தை புறக்கணித்த ஹக்கீம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிப்பது தொடர்பாக ஆராய்வதற்காக நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஐக்கிய தேசிய முன்னணியின் கூட்டத்தில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரான அமைச்சர் ரவூப் ஹக்கீம் பங்கேற்கவில்லை.

கூட்டு எதிரணியினால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை எதிர்வரும் 4ஆம் திகதி விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இதனை எதிர்கொள்வது தொடர்பாக நேற்று முன்தினம் ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுடன் ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை நடத்தினார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் மாலை 4 மணிக்கு ஆரம்பமாகி சுமார் 3 மணி நேரம் இந்தச் சந்திப்பு நடந்தது. ஊடகங்கள் இந்தச் சந்திப்புக்கு அனுமதிக்கப்படவில்லை.

இந்தக் கூட்டத்தில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான அமைச்சர் ரவூப் ஹக்கீம் பங்கேற்கவில்லை.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு 8 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் இருக்கும் நிலையில், ஹக்கீம் இந்தக் கூட்டத்துக்கு வராதமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையைக் கட்டுப்படுத்தத் தவறியதாக ஹக்கீம் குற்றம்சாட்டியிருந்தார்.

அத்துடன், உள்ளூராட்சி சபைகளில் ஐ.தே.க தமக்கு துரோகம் இழைப்பதாகவும், அது தொடர்ந்தால் பாடம் கற்பிக்க வேண்டிய நிலை வரும் என்றும் ஹக்கீம் சில நாட்களுக்கு முன்னர் எச்சரித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## பங்குனி குளிர்த்தி தேரோட்டம் நாளை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய பங்குனிகுளிர்த்தி தேரோட்ட பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை சிறப்பாக நடைபெறும். காவடி நடனம், பறை வாத்திய நிகழ்வுகளும் வேதபாராயணம், திருமுறை பாராயணம் சிறப்பாக இடம்பெறும். (இ)

## நூலகமும் தகவல் விஞ்ஞானமும் தரம் 1 இற்கான ஆரம்ப நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப்ளோமா பாடநெறி தரம் 1 இற்கான ஆரம்ப நிகழ்வு நாளை முதலாம் திகதி காலை 9 மணிக்கு யாழ். பொது நூலகத்தில் இடம்பெறும்.

இப் பயிற்சிநெறியில் சேர்ந்தவர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு இலங்கை நூலகச் சங்கத்தின் யாழ்ப்பாண நிலைய இணைப்பாளர் திருமதி பொற்செல்வி ஸ்ரீரஞ்சன் அறிவித்துள்ளார். (இ)

## 4துப்பாக்கிகளுடன் நான்கு பேர் கைது

(கொழும்பு)

மொனராகலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புத்தள, மெதகம மற்றும் சியம்பலாண்டுவ ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட விஷேட பொலிஸ் நடவடிக்கைகளின் போது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட நான்கு துப்பாக்கிகளுடன் நான்கு சந்தேகநபர்கள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

என்ன காரணத்திற்காக இவர்கள் துப்பாக்கியை வைத்திருந்தார்கள் என்பது இதுவரை தெரியவில்லை என்று கூறிய பொலிஸார், கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 21, 45 மற்றும் 55 வயதுடையவர்கள் என்று தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)


"Ammanai Saran Addainthal Athika Varamperalam"
SHRI KANAGATHURRKAI AMMAN (HINDU) TEMPLE TRUST
5, CHAPEL ROAD, LONDON. W13 9AE. TEL: 0208 - 810 0835
Founded on 10-08-1991 Charity No: 1014409 0208 - 840 0485
www.ammanealing.org Email: info@ammanealing.org



எமது ஆலயத்தில் கீழ்வரும் பணிநிலைகளுக்கான தகுதியான விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன. தங்கள் பற்றிய முழு விபரங்களுடன் மேல் உள்ள மின்அஞ்சல் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

பணிநிலை: 1 மகோற்சவ சிவாச்சாரியார்
Hindu religious workers with non-pastoral role

தகமைகள்: விண்ணப்பதாரி மகோற்சவ குருவாக தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு குறையாமல் பிரபல்யமான ஆலயங்களில் பணியாற்றி இருக்க வேண்டும்

கடமைகள்: ஆகம விதிமுறைப்படி ஆலயத்தில் மகோற்சவ பூசைகள் செய்தல்

வேதனம்: பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது. விண்ணப்பதாரிகளின் சிறப்புத் தகமைகளை கவனத்தில் கொண்டு நிர்ணயம் செய்வதுடன் அடியார்கள் வழங்கும் தட்சணை பங்கிட்டு வழங்கப்படும்
விண்ணப்ப முடிவு திகதி: 30.04.2018

பணிநிலை: 2 ஆலய சிவாச்சாரியார்
Hindu religious workers with non-pastoral role

தகமைகள்: விண்ணப்பதாரி குருக்கள பட்டம் பெற்றிருக்க வேண்டும். தமது பணிக்காலங்களில் சிவாச்சாரியாராகப் பணியாற்றியிருக்க வேண்டும். இறுதி 5 வருடங்கள் ஆலயக் குருக்களாகப் பணி செய்திருக்க வேண்டும்.

கடமைகள்: ஆகம விதிமுறைப்படி ஆலயத்தில் பூசைகள் செய்தல்

வேதனம்: பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது. விண்ணப்பதாரிகளின் சிறப்புத் தகமைகளை கவனத்தில் கொண்டு நிர்ணயம் செய்வதுடன் அடியார்கள் வழங்கும் தட்சணை பங்கிட்டு வழங்கப்படும்.
விண்ணப்ப முடிவு திகதி: 30.04.2018

பணிநிலை 3 நாதஸ்வர, தவில் கலைஞர்கள்
Hindu religious (Musicians) workers

தகமைகள்: நாதஸ்வர, தவில் மேதைகளுக்கான சான்றிதழ்களைக் கொண்டிருப்பதுடன் தமது பிராய காலத்திலிருந்து இப்பணியைச் செய்து கொண்டிருப்பவராக இருக்கவேண்டும்.

கடமைகள்: ஆலய பூசைக்காலங்களில் மங்கள இசை இசைத்தல்.
வேதனம்: பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது
விண்ணப்ப முடிவு திகதி: 30.04.2018

பணிநிலை ஸ்தபதி
Hindu religious sculpture

தகமைகள்: தமது பிராய காலத்திலிருந்து இப்பணியைச் செய்து கொண்டிருப்பவராக இருக்கவேண்டும்.. ஆலயங்களில் சிற்ப வேலை செய்தமைக்கான சான்றிதழ்களுடன் தங்கள் பற்றிய முழு விபரங்களுடன் மேல் உள்ள முகவரிக்கு 30.04.2018 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்

கடமைகள்:. ஆலயத்தில் சிற்ப வேலைகள்

வேதனம்: பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது
விண்ணப்ப முடிவு திகதி: 30.04.2018 (3391)



# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையின் சிறந்த பெறுபேறுகள்



இ.பிரதீபன் 9ஏ | வி.கம்சியா 9ஏ | சி.நிதுர்ஷா 5ஏ4பி | செ.குகபாலினி 6ஏ2பிசி | த.சிந்துஜா 5ஏ3பி

2017 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் மு/முள்ளிவாய்க்கால் மேற்கு கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.
க.பொ.த. உயர்தரத்திற்கு தகுதி பெற்றோர் 08 பேர் ஆகும்.




அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலைச் சமூகம்.
மு/முள்ளிவாய்க்கால் மேற்கு கனிஷ்ட உயர்தர வித்தியாலயம்.

(சி-2060)


## இராசி பலன்

**31.03.2018**

பங்குனி 17, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.16 மணிக்கு
பூரணை மாலை 6.32 மணிவரை
உத்தரம் காலை 6.34 மணிவரை
சுபநேரம் 3.12-4.42 மணிவரை
இராகுகாலம் 9.12-10.42 மணிவரை
பூரணை விரதம், பெரிய சனி

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சூரி, புத | சுக் | | |
| | இராசி பலன் | | ராகு. |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சதயம் | | |
| சனி, செவ் | குரு | | சந் |

**மேடம்:** விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், போசன சுகமுண்டு.

**இடபம்:** சுற்றத்தினர் வரவால் சுகம் கூடும் நாள், எதிர்கால நலன் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், தன வரவு திருத்திகரமாக அமையும்.

**மிதுனம்:** பிரியமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், வாகன சுகமுண்டு, சந்தோசமான அனுபவங்கள் ஏற்படலாம்.

**கடகம்:** புதிய முயற்சிகள் கைகூடும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், சகோதர ஒற்றுமை மேலோங்கும் நாள், பிற இனத்தவரால் பெருமை சேரும் நாள்.

**சிம்மம்:** நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், ஆடம்பர பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி:** பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம், குடும்பத்தில் சுமைகளும், பொறுப்புக்களும் கூடும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்:** குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, பயணத்தில் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், சுப விரயங்கள் ஏற்படும் நாள்.


**விருச்சிகம்:** மதிப்பும், மரியாதையும் உயரும் நாள், வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**தனுசு:** எடுத்த காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், போசன சுகமுண்டு, தன வரவுகள் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மகரம்:** நீண்ட நாளைய பிணக்குகளில் திருப்பங்கள் ஏற்படலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு.

**கும்பம்:** நண்பர்கள் மனம் கோணாது நடந்து கொள்வது நல்லது, தேகநலனில் கவனம் தேவை, தேவையற்ற அலைச்சல்கள் ஏற்படலாம்.

**மீனம்:** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வழிபாடு ஆனந்தம் தரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



ஈழத்தின் பிரசித்தி பெற்ற சிவத்தலங்களில் ஒன்றான யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் பஞ்சரத பவனி நேற்று முன்தினம் வெகு விமர்சையாக நடைபெற்றது. (படங்கள்:- ஐ.சிவசாந்தன்)

# க.பொ.த.சா/த பரீட்சைப் பெறுபேறுகள்-யாழ்.மாவட்டம்

### யா/இமையாணன் அ.த.க.வித்தியாலயம்

ரி.மதுமிதா-7ஏபிசி, எஸ்.சயந்தினி- 7ஏ2சி, ஆர்.தசானா-6ஏபி2சி, கே.சரண்-6ஏபி2சி, எஸ்.கம்சரூபன்-4ஏ3பி2சி, எஸ். செந்தாழினி- 4ஏ2பி2சிஎஸ், ரி.தேனுஜன்-4ஏபி4சி, ஆர்.லிதுசனா-3ஏ3பி 3சி, வி.அபிஷா- 3ஏ2பிசி2எஸ், ஏ.அன்ரன் டேவிற் விதுஷா- 3ஏ3சி2எஸ், ஆர்.சதுர்சன்- 2ஏ3பி4சி, செ.அபிராந்தன்- 2ஏ5சி2எஸ்.

### யா/ இணுவில் இந்துக் கல்லூரி

வி.அபிராமி-3ஏ4பி2சி, ஜெ.டனுஷிக்கா-3ஏ4பிசிஎஸ், ஏ.மதுயா-2ஏ3பி2சி2எஸ், எஸ்.எழில்வாணன் -2ஏ3பி3சி, கே.விதுசுஜா- ஏ3பி3சி2எஸ், ரி.டிசாலினி-ஏபி3சி 3எஸ்.

### யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்

எம்.மிதுர்சன்- 7ஏபிசி, ஜீ. ஜஸ்மினி- 6ஏ2பிஎஸ்,எம்.மேகரூபன்-6ஏ2பிஎஸ், ரி.புகழினி- 5ஏபி2சிஎஸ், ஜே.ஜெனு-2ஏ3பி2சி2எஸ், வி.பர்சிகா-2ஏ4பி2சி, ச.கிரிகேயன்-2ஏ4சி2எஸ், எஸ்.பிறைன்ரன்-ஏ2பி4சி2எஸ், பி.புவீந்திரன்-ஏ2பிசி4எஸ், சி.கஜலக்சன்-ஏபி2சி5எஸ், ஆர்.கருணி-ஏபி2சி5எஸ், எம்.கம்சிகா-ஏ4சி3எஸ்.

### யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி

எம்.வினோஜன்-8ஏஎஸ், எஸ். நிதர்சன்-8ஏ,எஸ்.கிருசாலினி-7ஏ2சி, எம்.திலக்ஷன்- 7ஏசிஎஸ், ரி. பவிதா-6ஏ2பிஜ.விதுர்சா-5ஏ3பி சி,எஸ். மிதுசியா-5ஏ2பிசிஎஸ், கே.வர்ணிகா-5ஏபி2சிஎஸ்,ரி.வைஸ்ணவி-5ஏ2பிசி.

### யா/அத்தியார் இந்துக் கல்லூரி

எம்.பிரணவன்-8ஏசி, வி. கவிதாஸன்-8ஏஎஸ், கே.நிறோஜன்-8ஏ, கே.மதுரா-5ஏ2பிசிஎஸ், ரி. சுமிர்தன்-5ஏபி3சி, கே. திருமாறன்-5ஏபிசிஎஸ், ரி.கோபிராம்-4ஏ4பிசி, எஸ்.லயன்சிகா-3ஏ3பி2சி, பி.கிருஷாயினி-3ஏ3பி2சி, கே. கஜீனா-3ஏபி3சி2எஸ், ஆர். கஜானி-3ஏ4சி2எஸ், எஸ்.மதுசனா-2ஏபி4சி2எஸ், ஆர்.சங்கவி-2ஏ2பி2சி2எஸ், ஜே.ஜதுர்சன்-2ஏ3பி2சி2எஸ், இ.லவன்-2ஏ3பி2சி2எஸ், வை.சுகந்தன்-2ஏ3பி3சி

### யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

ரி.கோபிகன்-9ஏ, கே.சுகிகரன்-9ஏ,கே.ஜனார்த்தன்-9ஏ, கே. ஜெயகுமரன்-9ஏ, ரி.சுனேகா-9ஏ, ஏ. பானுஷா-9ஏ, பி.கிஷானி-9ஏ, என். மைவிழி-9ஏ, ரி.சுந்தரேஸ்வரி-9ஏ, ஏ.அருண்-8ஏபி, எஸ்.சுதர்சிகா-8ஏபி, எஸ்.கனுசிகன்-8ஏபி, ஐ.சங்கீர்த்தனன்-8ஏபி, எஸ்.விமர்சன்-8ஏபி, பி.சரண்யா-8ஏபி, கே.அபினயன்-8ஏபி, பி.அயுந்தன்-8ஏபி, எஸ்.செந்தமிழ்செல்வி-8ஏபி, கே. ரகுராம்-8ஏபி, ஆர்.பிரணிவா-8ஏபி, எஸ்.பிரிந்திகா-8ஏபி, ஜே. டினோஜா-8ஏபி, பி.கார்திகாயினி-8ஏபி, எஸ். கீர்த்திகா-8ஏபி, ஆர்.லக்சாயினி-8ஏபி, எஸ்.லக்சிகா-8ஏபி, பி.சாலினி-8ஏபி, எஸ்.மதுசன்-8ஏசி, எம்.ஜனுசியா-8ஏசி, எஸ்.கமலரூஜா-7ஏ2பி, எம்.கௌரிதாஸ்-7ஏ2பி, ஆர். பவித்தனன்-7ஏ2பி, கே.பிரவீனயா-7ஏ2பி, எஸ்.லோகராஜ்-7ஏபிசி, ஆர். விஸ்வசந்துருஐயர்-7ஏபிசி, எஸ். கம்ஷாயினி-7ஏபிசி, பி.பிரகாஸ்-7ஏபிசி, எஸ்.சஞ்சிகா-7ஏபிசி, எஸ். ஆதித்தன்-7ஏபிசி, கே.மதுஜா-7ஏபிஎஸ், ஆர்.நிதர்சனா-7ஏபிஎஸ், கே. சாயுகன்-7ஏபிஎஸ், வி.தாரகா-7ஏ2சி, கே.றஞ்சனி-7ஏ2பி, எஸ். லினோஜன்- 6ஏ3சி, எஸ்.சாரங்கன்-6ஏ2பிசி, கே.விதுசன்-6ஏ2பிசி, பி.கவிராம்-6ஏ2பிசி, பி.நிவேதன்-6ஏ2பிசி, பி.ஜெருசன்-6ஏ2பிசி, ரி.ஆரணி-6ஏ2பிசி, ரி.டினேஷ்-6ஏ2பிசி, எம். திவ்யா-6ஏ2பிசி, எஸ்.குபேந்தினி-6ஏ2பிசி, எம்.மதுர்ஷனா-6ஏபி2சி, எஸ்.பிரியதர்ஷினி-6ஏபி2சி, ஜி. ஜெஸ்மினி-6ஏபி2சி, என். அபிநயா-6ஏபி2சி, ரி.நிவேதனா-6ஏபிசிஎஸ், ஆர்.சாலினி-6ஏபிசிஎஸ், யூ.கம்சினி-6ஏபிசிஎஸ், எஸ்.ரஜீவ்-6ஏ2பிஎஸ், கே.சங்கவி-6ஏ2பி எஸ், ஏ.விதுசனா-6ஏ2சிஎஸ், வி.மதுரன்தகி-6ஏ2சிஎஸ், எஸ்.பகலவன்-6ஏபிசி, எஸ்.தரன்ஜா-5ஏ4பி, என். விதுசனா-5ஏ4பி, ரி.துபாகரன்-5ஏ3பிசி, ஆர்.துவாரகன்-5ஏ3பிசி, ரி.டிஷாந்த்-5ஏ3பிசி, ரி.கம்ஷாயினி-5ஏ3பிசி, எஸ்.டினேசன்-5ஏ3பிசி, வி.சுமித்திரா-5ஏ3பிஎஸ், ஐ.சதுர்சனா-5ஏ3பி, ஆர்.தர்மினி-5ஏ2பி2சி, எஸ்.தர்சிகா-5ஏபி3சி, கே.மதுதர்சன்-5ஏபி3சி, எஸ். நிலுதிகா-5ஏ2பிசிஎஸ், பி.ரதான்ஜலி-5ஏ2பிசிஎஸ், எஸ்.சுருதிசாகரன்-5ஏ2பிசிஎஸ்.

### யா/இராமநாதன் கல்லூரி

எஸ்.ஜானுஜா-8ஏபி, பி.யாழ்விழி-8ஏசி, ஏ.அமுதினி-7ஏ2பி, ரி.வைஸ்ணவி-7ஏபிசி, ஜே. வினுசியா-6ஏபிசிஎஸ், என்.துளசிகா-6ஏ2பிஎஸ், ரி.வைஸ்ணவி-6ஏசி2எஸ், வி.தேசாஜினி-5ஏ2பிசிஎஸ், ஆர்.அபிதா-5ஏபி2சிஎஸ், வி. தனலக்ஷி-5ஏபி2சி, ரி.அபிராஜினி-4ஏபி3சி, ஜே.ஜெனுசா-4ஏ4சி, எம்.சரணியா-4ஏபிசி2எஸ், வி. விதுஷா-4ஏ4சிஎஸ், பி.மவிழினி-4ஏ2பிசிஎஸ், எல்.கஜானி-3ஏ 3பிசிஎஸ், எஸ்.பவித்திரா-3ஏ4பிசி, எஸ்.பிரியா-3ஏபி3சிஎஸ், ஜே. லோகேஸ்வரி-3ஏ3பிசி2எஸ்.

### யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

ரி.சுந்தர்பவன்-9ஏ, ஆர்.அருசன்-9ஏ, எஸ்.சஜீதன்-9ஏ, கே.சுதர்சன்-9ஏ, எஸ்.சங்கீத்-9ஏ, யூ.பவலக்சன்-9ஏ, ஆர்.லக்ஷாயினி-9ஏ, எஸ்.அபிராமி-9ஏ, கே.ஆதிகா-9ஏ, பி.ஸ்ரீராம்-8ஏபி, எஸ்.அஜந்தன்-8ஏசி, எஸ்.நிரோசன்-8ஏசி, ரி.குபேரன்-8ஏஎஸ், இ.அகலிசன்-8ஏசி, எஸ். சாருஜன்-8ஏஎஸ், ரி.யதுசன்-8ஏ எஸ், எஸ்.பிருந்தன்-8ஏஎஸ், எம். துளசிகா-8ஏசி, எம்.கீதாஞ்சலி-8ஏசி, பி.சஞ்சிகா-8ஏபி, எஸ். அஜித்தா-8ஏசி, கே.கம்சிகா-8ஏபி, இ. பாதுஷா-8ஏசி, எஸ்.சங்கவி-8ஏசி, கே.சுபாங்கி-8ஏசி, கே.சேனுஜா-8ஏசி, வி.சிந்துஜா-7ஏபிசி, எஸ். லிலக்சன்-7ஏபிஎஸ், எஸ்.ப்கீதன்-7ஏபிசி, கே.கிந்துசன்-7ஏ2பி, இ. பக்சிகா-7ஏபிஎஸ், கே.கம்சாயினி-7ஏபி, எஸ்.கேனுஜா-7ஏ2பி, எஸ். சாருஜா-7ஏபிசி, கே.கௌதினி-7ஏ2சி, கே.மகிழினி-7ஏ2பி, எஸ். தனுஜா-7ஏபிசி, கே.அனுசியா-7ஏபிசி, ஏ.சுரேக்கா-7ஏபிசி, வி. அபிராம்-6ஏ3பி, ரி.சாகித்தியன்-6ஏ2பிசி, எஸ்.இளங்கதிர்-6ஏ3பி, என்.அருண்சங்கர்-6ஏ2பிசி, எஸ். லக்சன்-6ஏ2பி, என்.ஜீவராஜ்-6ஏ2பி, பி.நர்மதன்-6ஏ3பி, என். சங்கீதா-6ஏ3பி, என்.துஷாயினி-6ஏபிசி, ஏ.யதுர்சனா-6ஏ2பிசி, வி.தமய ந்தி-6ஏபிசிஎஸ், எம். செந்தூரி-6ஏ 2பிசி, வி.மதிநிலா-6ஏ2பிசி, எஸ். சந்தியா-6ஏ2பிசி, என்.சங்கவிதன்-5ஏ3பிஎஸ், எஸ்.இளங்குமரன்-5ஏ 2பிசிஎஸ், எஸ்.சிந்துஜன்-5ஏ2பி 2சி, ஏ.றோகுலன்-5ஏ3பிஎஸ், கே. பிரதீபன்-5ஏ3பிஎஸ், இ.கஜந்தன்-5ஏ3பிஎஸ், கே.கலைமொழி-5ஏ2பிசிஎஸ், ஜே.விதுர்சிகா-5ஏபி2சிஎஸ், என்.நிருஷா-5ஏ2பிசிஎஸ், எம்.ஆதித்தனா-5ஏ2பி2சி, எம். தேனுஜா-5ஏபி3சி, ஏ.சர்மிளா-5ஏபி2சிஎஸ், கே.சஞ்சிகா-5ஏபி3சி, பி.குயின்சா-5ஏ4பி, பி.அகீபன்-4ஏ2பி2சிஎஸ், இ.ரவிராஜ்-4ஏ3பிசி, என்.கிஷாந்-4ஏ4பிஎஸ், எஸ். நிலக்ஷன்-4ஏ2பி3சி, ரி.தனுசியன்- 4ஏ2பி3சி, எஸ்.சகானா-4ஏ4பிஎஸ், எஸ்.கனுஜா-4ஏ3பிசிஎஸ், எல்.சகானா-4ஏ3பிசிஎஸ், எஸ். நிலக்சனா-4ஏ3பி2சி, கே. மிதுஷா-4ஏ3பி2சி, கே.தரணிகா-4ஏ3சிஎஸ், ரி.உசா-4ஏ2பி3சி, கே. வைஸ்ணவி-4ஏ3பி2சி, ஜே.பானுஜா-4ஏ2பி3சி, ஜே.வினு-4ஏ5பி, எஸ். திலக்சன்-4ஏ3பி2சி.

ஆங்கில மொழி மூலம்

எம்.சௌமியா-8ஏசி, எஸ். சைந்தவி-8ஏசி, எம். பானுகா-7ஏ2பி

### யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி

ஏ.துளசிகன்-8ஏபி, எஸ். கலைக்ஷன்-7ஏ2பி, கே.நேயன்-6ஏ3பி, எஸ்.பிரகாஸ்-6ஏ2பிசி, ஆர். றெபின்சன்-6ஏ2பிசி, ரி.டிபேடன்-6ஏபி சிஎஸ், ஜீ. ஹரிதரன்-5ஏ2பிசி, ரி.பகீரதன்- 4ஏ4பிசி, வி.விதுஷன்-4ஏ3சி2எஸ், ஜே.கபில்ராஜ் 3ஏ3பி 3எஸ், ஜே.சானுஜன்- 2ஏ6பிசி, ச.சனுசாந்த் - 2ஏ3பி2சி2எஸ், ஜே.யதுசன்- 2ஏ3பி2சி2எஸ், ரி. தனுஜன்- 3ஏ4பி2சி. (இ-105)

## முதலமைச்சர் விருதுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பண்பா ட்லுவல்கள் திணைக்களத் தால் வழங்கப்படும் விருதான முதலமைச்சர் விருது - 2018 இற்கு விண்ணப்பங்கள் கோர ப்பட்டுள்ளன. யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் நிரந் தரமாக வசித்து வரும் 2017. 12.31இல் 60 வயதினைப் பூர்த்தி செய்த கலைஞர்கள் விண்ணப்பிக்க முடியும்.மேலும்இளம் கலைஞர்கள் ஊக்குவிப்புப் பரிசு -2018 இற்கான விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன. 2017.12.31 இல் 40 வயதினைப் பூர்த்தி யாகாத யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் நிரந்தரமாக வசித்து வரும் இளம் கலைஞர்கள் விண்ணப்பிக்க முடி யும். விண்ணப்பப்படிவம் மற் றும் விபரங்களை பிரதேச செய லக கலாசார பிரிவில் பெற்றுக் கொண்டு 10.04.2018 இற்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும் என உதவி பிரதேச செய லர் திருமதி வினோஜிதா கணேசானந்தன் அறிவித்துள் ளார்.

♦♦♦♦♦♦♦♦♦♦♦♦

வடமாகாண பண்பாட்ட லுவல்கள் திணைக்களத்தி னால் வழங்கப்பட்டுவரும்“ முதலமைச்சர்விருது2018” இற்கானவிண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள நிலையில் வலி. தெற்கு , சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவிற்குட் பட்ட அறுபது வயதிற்கு மேற் பட்ட துறைசார் கலைஞர்கள் எதிர்வரும் 2018. 04.09 ஆம் திகதிக்கு முன்னர் வலி. தென்மேற்கு பிரதேச செய லக கலாசார உத்தியோகத்த ருடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (இ

## விசேட நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம்

(யாழ்ப்பாணம்)

விசேட டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் எதிர்வரும் 3-9 ஆம் திகதிகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. டெங்கு நுளம்பு பெருகக்கூடிய சூழலை அகற்றி டெங்குத் தாக்கத்திலிருந்து எம்மை பாதுகாக்குமுகமாக தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் இதன்மூலமே அதிகரித்து வரும் டெங்கு நோய்த் தாக்கத்திலிருந்து விடுபட முடியும். இந்த தேசிய நிகழ்வு, அதன் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் அமைந்திட சகலரும் ஒத்துழைப்புக்கள் வழங்கி தங்கள் தங்கள் வாழிடங்கள், சமய நிறுவனங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுச் சந்தைகள், மயானங்களின் சுற்றுச் சூழலை துப்புரவாகப் பேணுமாறு கேட்டுக்கொள்கின்றோம் இம்முறை டெங்கு பெருக்கத்திற்கு சாதகமான நிலைமைகள் காணப்படும் அனைத்து அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள், வீடுகள், மண்டபங்கள், ஆலயங்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். எனவே அனைவரும் தங்கள் சூழலை டெங்கு பெருகாதவாறு சுத்தமாக வைத்திருப்பதுடன் அன்றையதினம் தங்கள் வீடுகளில் தரித்திருந்து களத்தரிசிப்பிற்கு வருபவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.(இ)

## கணனி வள நிலையம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

பலாலி கணனிவள நிலையத் திறப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆசிரியர் பலாலி கணனி வள நிலைய நிர்வாகி வ.ஜெகநாதன் தலைமை யில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், சிறப்பு விருந் தினர்களாக வலி. வடக்கு பிர தேச செயலா ளர் எஸ். சண்முகராஜா, வலிகாமம் திட்ட மிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தேவ மனோகரன், கௌரவ விருந்தினர்களாக பலாலி சமூக கூட்டமைப்பின் அறக்கட்டளைத் தலைவர் நடராஜா லோகேஸ் வரன், பலாலி கிழக்கு கிராம சேவையாளர் றம்சியா றஜீவன், பலாலி கிழக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சி.மதனரூபன், பலாலி கிழக்கு வாழ்வின் எழுச்சித் திட்ட உத்தியோகத்தர் சி.றாகு லன், பலாலி தெற்கு கிராம சேவையாளர் அன்ரன் பிரான் சிஸ் டொறின் சைலுஜா ஆகியோர் கலந்து கொள்வர். (இ

## சிறந்த நூற் பரிசுத் தேர்வுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வடமாகாண எழுத்தாளர் களை ஊக்குவிக்கும் நோக்கில் சிறந்தநூற்பரிசுத்தேர்வுப் போட்டியினை நடத்தி வருகின்றது.

2017 இல் அச்சில் வெளிவந்தவையாகவும் முதல் பதிப்பாகவும் தங்கள் நூல்களை வெளியிட்ட யாழ்ப்பாண பிரதேச செய லர் பிரி வினை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட எழு த்தாளர் கள் இப்போட்டிக்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப் படிவம் மற்றும் விபரங்களை பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்றுக் கொண்டு 15.04. 2018 இற்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும் என அறிவிக் கப்பட்டுள்ளது. (இ

## வீடு வாடகைக்கு விடப்படும்

திருநெல்வேலி பலாலி வீதியில் அம்மாச்சி உணவுசாலைக்கு அருகில் மூன்று அறைகள் Hall, Kitchen,Toilet, Varanda வசதிகளுடன் Tiles இடப்பட்ட வீட்டின் மேல் தளம் (1ஆம் மாடி) வீடு. மாதம் ரூபாய். 25000/= வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு: 077 378 7380
(3455) 077 735 3720

## மனதிலே மருதடியான் புகழ்பாடும் இறுவெட்டு

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் இந்துமா மன்றத்தினால் "மனதிலே மருதடியான் புகழ் பாடும் இறுவெட்டு" வெளியீட்டு விழா இன்று சனிக்கழமை பிற்பகல் 8.15 மணியளவில் மருதடி ஆலயத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் மே.இந்திரபால தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் இறுவெட்டு வெளியீட்டுரையினை யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈஸ்வரநாதபிள்ளை குமரன் வழங்க இறுவெட்டு வெளியீட்டினை சுப்பிரமணியம் சத்தியமூர்த்தி வெளியிட முதற் பிரதியினை தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் பெற்றுக் கொள்வார். (இ)

## நம்பிக்கை இழக்க வேண்டாம்.

**உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம்.**
எந்தத் துயரமாயினும், அழையுங்கள். அல்லது நேரில் வாருங்கள்.

மதசார்பற்ற, இலவச சேவை. ரகசியமானது.

**கை கொடுக்கும் நண்பர்கள்**

யாழ்ப்பாணம்: 077 900 8776
(தினமும் மு.ப. 9.00 - பி.ப. 1.00)
வவுனியா: 024 324 4444
(சனி, ஞாயிறு மு.ப. 9.00 - பி.ப. 1.00)



### அகில இலங்கைக் கம்பன் கழகம் நடாத்தும்

# கம்பன் விழா-2018

**2018 மார்ச் 29, 30, 31, ஏப்ரல் 1ஆம் திகதிகளில் கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் தினமும் காலை 9.30, மாலை 5.30.**

## மூன்றாம் நாள் நிகழ்வுகள்

**சிறப்பு விருந்தினர்கள்**

முனைவர் பால. இராமணி தமிழ்நாடு
பேராசிரியர். ரி. ரெங்கராஜா தமிழ்நாடு
கம்பவாரிதி இ. ஜெயராஜ்
கலாநிதி ஆறு. திருமுருகன்
சொல்லின் செல்வர். இரா. செல்வவடிவேல்

**31.03.2018 சனி காலை 9.30 மணி**

**மங்கல விளக்கேற்றல்**
திரு. சி. பாஸ்கரா தம்பதியர் (கொழும்பு மாநகர சபை உறுப்பினர்)

**கடவுள் வாழ்த்து**
செல்வி. லோ. சாய்லக்ஷ்மி

**தலைமையுரை**
கௌரவ செல்வம் அடைக்கலநாதன்(குழுக்களின் பிரதித் தலைவர், இலங்கைப் பாராளுமன்றம்)

**தொடக்கவுரை**
திரு. எஸ். பாலசிங்கம் (பட்டயக் கணக்காளர், லண்டன்)

### விவாத அரங்கு

நடுவர். திரு. பாரதி. கிருஷ்ணகுமார்
**பொருள்: இடித்தற் பொருட்டால் பெரிதும் ஏற்றம் பெறுபவர் எவர்?**

**இராவணனுக்கு உரைத்த ....**
மாரீசனே! - ந. விஜயசுந்தரம், அங்கதனே!- பால இரமணி, வீடணனே!- பிரியா இராமச்சந்திரன், சடாயுவே!- ரி.ரெங்கராஜா, கும்பகர்ணனே!- முகமட் ரேலா, இந்திரஜித்தனே!- மா. இராமலிங்கம், சீதையே!-இரெ. சண்முகவடிவேல்

**மாலை 5.30 மணி**

**மங்கல விளக்கேற்றல்**
திரு. சண். குகவரதன் தம்பதியர் (உறுப்பினர், மேல் மாகாண சபை)
**கடவுள் வாழ்த்து:** திரு. அ. ஆரூரன்
**தலைமையுரை:** கௌரவ எம். ஏ. சுமந்திரன் (பாராளுமன்ற உறுப்பினர்)
**தொடக்கவுரை**
கௌரவ ஆறுமுகம் தொண்டமான் பா.உ(தலைவர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்)

### பரிசளிப்பு

அமரர்கள் துரை விஸ்வநாதன், பொன், பாலசுந்தரம்,இ. நமசிவாய தேசிகர் நினைவு பேச்சு. கவிதை, மனனப் போட்டிகளில் வெற்றி பெற்றோர்க்கு பரிசில்கள் வழங்கல்

### கவியரங்கம்

**தலைவர்:கவிஞர் சிதம்பரப்பிள்ளை சிவகுமார்**
பொருள் : கம்பனிடம் நிகழ்காலம் கடனாகக் கேட்பது...?
சீதை போல் ஒரு பெண்-த. ஜெயசீலன், விசுவாமித்திரர் போல் ஒரு குரு - இலந்தை சு. ராமசாமி (சிங்கப்பூர்),இலக்குவனை போல் ஒரு தொண்டன்-அ.கி.வரதராஜன் (சிங்கப்பூர்),அனுமன் போல் ஒரு அமைச்சன்- த.சிவசங்கர், இராமன் போல் ஓர் அரசன்- சோலைக்கிளி.கோசலம் போல் ஒரு நாடு-ஸ்ரீ. பிரசாந்தன்

### கோலம் உரையாடல்

நடுவர்கள்: ஆறு.திருமுருகன்., மு.இராமச்சந்திரன், இ.ஜெயராஜ்
இ.சர் வேஸ்வரா (வீடணன்) ந.ஐங்கரன் (கும்பகர்ணன்)- அறம் உணர்ந்தும் அணிசேராதது ஏன்?
கு. புரந்தரன் (பரதன்),எஸ்.கஜன் (கைகேயி)-பழிபெயற்றிப் பாவம் விளைந்தது ஏன்?
செ. ஜொசின் (இந்திரஜித்), செ.மதுரகன் (இலக்குவன்)-வெற்றிக்காக நீங்களுமா சூழ்ச்சியில்?
வ.வாசுதேவா (தாரை) லோ.பிரசன்னவருண் (இராமன்)- என் மாங்கல்யம் பறித்தது நியாயமா?

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## தவறிவிட்டது

3ம் கட்டை ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகக் கொண்ட வசந்தகுமார் சுரேஸ் என்பவருடைய தேசிய அடையாள அட்டை, வாகன அனுமதிப்பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் மருதனார்மடத்திற்கும் ஆனைக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழக்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். 077 216 7614

## வேலைக்கு ஆள் தேவை

முல்லைத்தீவு பகுதியில் தோட்ட வேலைக்கு ஆள் தேவை. கால்நடை வளர்ப்பில் ஆர்வமும் அனுபவமும் இருப்பதுடன் தங்கியிருந்து வேலை செய்யக்கூடியவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். ஆரம்ப சம்பளம் மாதம் வழங்குவதுடன் பிற சலுகைகளும் உண்டு.

தொ.பே:0771681697, 0766205322

(A-1986)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




**மிருதி சுரேஸ்குமார் கிருஷிகா கிருபாகரன்**

2017ஆம் ஆண்டு கா.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் 8A,B சித்தியைப் பெற்று அகில இலங்கை ரீதியில் முதலாமிடத்தைப் பெற்ற மிருதி சுரேஸ்குமார் மற்றும் 8A,B சித்தியைப் பெற்ற கிருஷிகா கிருபாகரன் ஆகிய இரு செல்வங்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு இருவரும் இன்னும் பல சாதனைகளைப் பெற்று சிறந்து விளங்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புடன் வாழ்த்தும் மாமா குடும்பம் மற்றும் பெற்றோர் (கிருபாகரன்)
பிளாக் வீதி, சுங்கானை.

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:BSc Eng/தனியார் தொழில்<br>தொ.இ: B/7411 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 54 செவ் 8 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/3992 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:BSc/தனியார் தொழில்<br>தொ.இ: B/7412 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 60 செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: பட்டதாரி கனடா<br>தொ.இ: G/3988 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்:சித்திரை<br>கி.பா: 43 செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:பட்டதாரி பொறியியலாளர்<br>தொ.இ: B/7416 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 30<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA, MA/ அரசதொழில்<br>தொ.இ G/3990 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 13<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/வியாபாரம்<br>தொ.இ: B/7417 | பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 22 செவ் 12 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/3993 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 222 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.

# க.பொ.த.சா/த பரீட்சை பெறுபேறுகள்-2017

**கிளி/கோணாவில் ம.வி**

ம.ஜனனி-5ஏ4சி, இ. தமிழினி-3ஏ3பிசிஎஸ், ர.டெனசிகா- 2ஏ6பிசி, க.லிவின்சிகா-2ஏ2பி3சி2எஸ், சு.டிலான்சிகா-2ஏ3பி4எஸ், ந.தணிகை-2ஏ3சிஎஸ், ப.சுவேதன்-2ஏ3பி2சி3எஸ்.

**மு/விசுவமடு மகா வித்தியாலயம்**

ப.சேதுராகவன்-9ஏ, க.விதுர்ஷியா-7ஏ2பி, சு.தமிழ்ப்பரியன்-5ஏ3பிசி, ந.கிருஷாந்தன்-5ஏ2பிசிஎஸ், இ.பிரசாந்தி-5ஏபி2சிஎஸ், வி. டிதுர்சா-5ஏபி3சி, கை.சானுஜா-5ஏ3பிசி, மு.புவன்ராஜ்-4ஏ2பிசிஎஸ், சு.தனுசியா-4ஏ2பி3சி.

**வவு/வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி**

ம.சிவேகா-9ஏ, ச.சர்மிகா-9ஏ,சி.பிரணவி-9ஏ, ம.சண்முகநாதன்-9ஏ, ந.தர்சிகா-9ஏ, சி.விதுசா-9ஏ, அ.வர்ஷாயினி-9ஏ, ச. ஹரினி-9ஏ, லோ.விஸ்ணுகா-9ஏ, ர.பாத்திமா-9ஏ, ந.கிவிதா-9ஏ, த.அபினா-9ஏ, இ.வானதி-9ஏ, செ.பிரேமி-9ஏ, சூ.தாரண்யா-9ஏ, ந.மாதுமை-8ஏபி, தி.வினுஜா-8ஏபி, ந.நர்ஜிகா-8ஏபி, கா.கிறிஸ்ரிகா-8ஏபி, த.சப்திகா-8ஏபி, அ.யூலியட் மேரின்ஷா-8ஏபி, உ.ஹிபா-8ஏபி, ச.அக்ஷயா-8ஏபி, ப.அமிர்தவர்ஷினி மதுரா-8ஏபி, அ.ஜானுஸா-8ஏசி.

**வவு/வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரி**

சு.ருகாசிகா-9ஏ, த.அட்சயா-9ஏ,செ.சியானுகா-9ஏ, வி.விதுஷா-9ஏ, க.கஜேந்தினி-8ஏபி, செ.சரணிகா-8ஏபி, உ.மயூரபி-8ஏபி, இ.கிசாலினி-8ஏபி, ச.பிரேதிகா- 8ஏபி, கு.நிஷா-8ஏபி, க.டிலக்சிகா-8ஏபி, ஜெ.தீபிகா-7ஏ2பி, இ.ஆரணி -7ஏ2பி, சு.லக்சனா- 7ஏ2பி, த.கம்சிகா-7ஏ2பி, நி.பாத்திமா நிக்சா-7ஏ2பி, அ.கர்சா-7ஏபிசி, ர.துளசிகா-7ஏ2சி, தே.திலக்சிகா-7ஏ2சி, ரா. கோசலா-7ஏ2சி, ச.அபர்ணா-7ஏ2சி.

**வவு/ வவுனியா கோவில்குளம் இந்துக் கல்லூரி**


வி. ரஜீபன்-6ஏ2பிசி, நி.சரண்ணியா-6ஏபி2சி, சி.சோபிகா-6ஏ2பிஎஸ்.

**வவு/வவுனியா விபுலானந்த கல்லூரி**

ஜெ.அகிலன்-9ஏ, ர.மதுமிதன்-9ஏ, வி.லோ.விஷாளன்-9ஏ, ர.தர்சிகா-9ஏ,சி.சுவேதிகா-9ஏ,வா. யுசிகா-8ஏபி, ச.சிவதர்சனா-8ஏபி, லோ. லஜனிகா-8ஏபி, ஜெ.ஜதுசா- 8ஏபி, இ.நிலானி-8ஏபி, தி. சாருஜன்- 8ஏபி, பி.ஜெ.ரெஜிஸ்-8ஏபி, ஜெ.தனுஜன்-8ஏசி, ஜெ.டிலக்சி-7ஏ2பி, இ.கிளைக்ஸ்ரன்-7ஏ2சி,த. திலோத்மன் -7ஏபிஎஸ், த.லதுர்சன்-7ஏ2பி.

**கிளி/வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம்**

ந.தமிழினி-7ஏசிஎஸ், வி.வர்மிலா-4ஏ2பி2சி, யோ.கேதீபன்-3ஏ3பி2சி, ம.தாரகன்-4பி3சிஎஸ், த.வெண்ணிலா-2ஏ2பி3சிஎஸ், இ. சாலினி-2ஏ2பி3சிஎஸ், க.யேனுகான்-5சி3எஸ், யோ.கஜீபன்-பி6சிஎஸ், வை.திகழிசை-ஏபி4சி2எஸ், ச.சாமினி-2பி2சி4எஸ், ப. மதிலா-4சி4எஸ்.(2-271-281-250)



## ஆனந்த சுதாகரனின் விடுதலைக்காக
# மன்னாரில் சேகரித்த கையெழுத்துக்கள் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டன

(பனிக்கன்குளம்)

மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதி ஆனந்த சுதாகரனை விடுதலை செய்யக்கோரி மன்னாரில் சமூக அமைப்புக்கள் ஒன்றிணைந்து மேற்கொண்ட கையெழுத்துப் போராட்டம் நிறைவடைந்துள்ள நிலையில் கோரிக்கை அடங்கிய கையெழுத்துக்கள் ஜனாதிபதியிடம் கையளிக்கும் வகையில் கடந்த 29 ஆம் திகதி வியாழக்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளினால் கையளிக்கப் பட்டுள்ளன.

மன்னாரில் கடந்த 24 ஆம் திகதி சனிக்கிழமை சமூக அமைப்புக்கள் ஒன்றிணைந்து ஆரம்பித்த கையெழுத்து போராட்டம் கடந்த 29 ஆம் திகதி வியாழக்கிழமை காலையுடன் நிறைவடைந்துள்ள நிலையில், கோரிக்கை அடங்கிய கையெழுத்துக்கள் ஜனாதிபதியிடம் கையளிக்கும் வகையில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளினால் கையளிக்கப்பட்டுள்ளன.

கடந்த 24 ஆம் திகதி வைபவ ரீதியாக மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன்பாகவும் மன்னார்



பொது வைத்தியசாலை பிரதான வீதியிலும் கையெழுத்துப் போராட்டம் இடம் பெற்றன.

அதனைத் தொடர்ந்தும் மாவட்டத்தில் உள்ள பல்வேறு கிராமங்களிலும் ஆனந்த சுதாகரனின் விடுதலைக்காக கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்ற நிலையில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# தீப ஆராதனையின் போது அம்மனின் சொரூபத்தில் நாக சர்ப்பம் காட்சியளிப்பு



ஆலயத்தில் வைக்கப்பட்ட நாகபூஷணி அம்மனின் திருவுருவ சிலைக்கு ஆராதனை செய்யும் பொழுது திடீரென அங்கு தோன்றிய நாக சர்ப்பம் அம்மனின் சொரூபத்தில் ஏறி ஆராதனை முடியும் மட்டும் காட்சியளித்துள்ளது. மேலும் ஆராதனை முடிந்தவுடன் அவ்விடத்தை விட்டு அகன்று சென்றுவிட்டது

(பனிக்கன்குளம்)

வவுனியா செட்டிகுளம் முகத்தான் குளம் பகுதியில் உள்ள விநாயகர் ஆலயத்தின் வருடாந்த கும்பாபிஷேக நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந்நிலையில் குறித்த

இச்சம்பவத்தை கேள்விப்பட்ட மக்கள் குறித்த அதிசயத்தை காண்பதற்கு கோவிலுக்கு படையெடுத்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (2-281)

# ஆத்மீக போராட்ட களத்தில் நேற்றும் மதகுருமார் இணைவு



(பனிக்கன்குளம்)

ஆத்மீக ரீதியில் 6 ஆவது நாளாகத் தொடரும் கேப்பாபிலவு மக்களின் போராட்டம் நேற்று 395 நாளைக் கடந்து தொடர்கின்றது.

இராணுவத்தினர் வசமுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி ஒரு வருடத்தைத் தாண்டிய நிலையில் 395 ஆவது நாளாக நேற்றும் ஆத்மீக போராட்டம் இராணுவ முகாமிற்கு முன்பாக தொடர்கின்றது.

இந்நிலையில்நேற்றைய தினமும் மக்களின் போராட்ட இடத்துக்கு வருகைதந்த கத்தோலிக்க மதகுருக்கள் வழிபாடுகளை நடத்தினர். (2-281)

# வெற்றி நாயகி ஆலயத்தில் பெரியவெள்ளி சிலுவைப்பாதை



(பனிக்கன்குளம்)

புனித வார பெரிய வெள்ளி சிலுவைப்பாதை மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள அனைத்து கத்தோலிக்க தேவாலயங்களிலும் நேற்று இடம்பெற்றது.

மன்னார் மறைமாவட்டத்தின் பேசாலை புனித வெற்றி நாயகி ஆலயத்தில் புனித வார பெரிய வெள்ளி சிலுவைப்பாதை நேற்றுக் காலை 6.30 மணியளவில் இடம்பெற்றது.

பேசாலை இணை பங்குத்தந்தை அருட்திரு சாந்தன் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற சிலுவைப் பாதையில் குறித்த கிராமத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பொது மக்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# முழு நிலாக் கலைவிழா இன்று

(கிளிநொச்சி)

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகம் நடத்தும் முழு நிலாக் கலை விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கிளி/ வட்டக்கச்சி மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி பிராந்திய பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி. நவரட்ணம் சுதாகரன், கௌரவ விருந்தினராக ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர் கந்தசாமி முருகவேள், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண (அழகியல்) உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவபாதரத்தினம் சிவசிவா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2)

# மக்களுக்காக பாடுபடுபவர்களாக பிரதேசசபை உறுப்பினர்கள் இயங்க வேண்டும்

## தலைவர் பிரேமகாந் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

இன்றைய கால கட்டத்தில் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு, உயர் கல்வி போன்ற விடயங்களில் மக்கள் பல்வேறு தடைகளையும் சவால்களையும் எதிர்நோக்கி வருகின்றார்கள். இவற்றை சிந்தித்து பாதிக்கப்பட்ட மக்களுக்காக பாடுபடுபவர்களாக பிரதேச சபை உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் இயங்க வேண்டும் என புதுக்குடியிருப்பு பிரதேச சபைத் தலைவர் செ. பிரேமகாந் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் கன்னி அமர்வு கடந்த 28 ஆம் திகதகி முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றது.

இதில் தலைமையுரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், மக்களுக்கான தேவைகள் இங்கு அதிகமாக காணப்படுகின்றன. கடந்த கால சூழ்நிலைகள் இந்த மக்களை தங்களின் அடிப்படை கட்டுமான அபிவிருத்தி அற்றவர்களாக மாற்றியுள்ளது. அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிவகைகளை பிரதேச சபை ஊடாக உறுப்பினர்கள் சிந்தித்து செயற்பட வேண்டும்.

பிரதேச சபை உறுப்பினர்கள் அனைவரும் மக்கள் சேவையை மையமாகக் கொண்டு வெளிப்படைத் தன்மையுடன் கூடிய மக்களின் பிரதிநிதிகளாக இந்த சபையில் காணப்படவேண்டும்.

மக்களுக்கான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கு எப்போதும் தயாராக நிக்கவேண்டும் இந்நிலையில் கடந்த கால போர் மக்கள் மத்தியில் அதிகளவான மாற்றுத் திறனாளிகளையும் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களையும் உருவாக்கியுள்ளது. மக்களின் வாழ்வாதாரத்தின் ஒவ்வொரு விடயங்களிலும் பிரதேச சபை உறுப்பினர்களின் பங்கு காணப்படவேண்டும் என தெரிவித்தார். (2-281)






வரலாற்று சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய மஹா கும்பாபிஷேக பெருவிழா நேற்று சிறப்புற நடைபெற்றது . கடந்த 3 ஆண்டுகளுக்கு முன் ஆலயம் பாலஸ்தானம் செய்யப்பட்டு ஆலய புனரமைப்பு பணிகள் பலகோடி ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட கருங்கல்லினால் ஆலய புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு அலங்கார வேலைகள் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் வருகைதந்து அம்மனை வழிபட்டனர்.
(படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# நந்திக்கடலில் சட்டவிரோத வலைகளை அகற்றும் நடவடிக்கையில் மீனவர் சங்கம்

(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு நந்திக் கடல் பகுதியில் உள்ள சட்ட விரோத தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்ற கடற்றொழிலாளர்களின் வலைகளை முல்லைத்தீவு பொலிஸாரின் உதவியுடன் நந்திக்கடல் மீனவர் சங்கம் அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது.



நந்திக்கடல் பகுதியில் தடைசெய்யப்பட்ட கூட்டு வலைகளை பயன்படுத்துவதால் இறால் வளம் முற்றாக அழியும் நிலையுடன் அதனை நம்பி தொழில் செய்யும் பிரதேச தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள்.

இந்நிலையில் புதுக் குடியிருப்பு பிரதேசத்திற்குட்பட்ட நந்திக்கடல் மீனவ சங்க அமைப்பினர் குறிப்பிட்ட தடைசெய்யப்பட்ட வலைகளை அகற்றும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளார்கள்.

சுமார் இருநூறுக்கும் அதிகமான இறால் கூடுகள் நேற்று முன்தினம் அகற்றப்பட்டு அதனை கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளார்கள். (2-281)

வன்னி வலம்

# முதிரை பலகை கடத்தல் முறியடிப்பு வாகனம் கைப்பற்று; சாரதி கைது

## வவுனியாவில் சம்பவம்



(குருமன்காடு)

வவுனியா மடுக்குளத்தில் இருந்து கடத்திச்செல்லப்பட்ட முதிரை பலகைகள், நிலை செய்ய பயன்படும் முதிரை குற்றி (தீராந்தி) மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்திய வாகனத்தையும் கைப்பற்றியதாகவும் வாகன சாரதியையும் கைது செய்துள்ளதாகவும் வவுனியா ஈச்சங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி தெரிய வருவதாவது,

வவுனியா ஈச்சங்குளத்தில் இரவு நேர கடமையில் ஈடுபட்ட பொலிஸாரினால் முதிரை மரப் பலகைகள் ஏற்றிச்சென்ற கப்ரக வாகனம் ஒன்றினை நிறுத்துமாறு பொலிஸார் சைகை செய்துள்ளனர். இருந்த போதும் அச் சைகையை மீறி அவ்வாகனம் மிக வேகமாக பயணித்துள்ளது. இவ்வாறு பயணித்த வாகனத்தினை ஈச்சங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சுபாஸ் ஆரியரத்தின தலைமையின் கீழ் விரைந்த பொலிஸ் சாஜண்டுகள், பொலிஸ் கொஸ்தாபல் அடங்கிய குழுவினரால் துரத்தி பிடிக்கப்பட்டது. இதன்போது கடத்தலுக்கு பயன்படுத்திய வாகனம் மற்றும் சுமார் இரண்டரை இலட்சம் பெறுமதியான முதிரை மர பலகைகளையும் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன் பண்டாரிக்குளத்தை சேர்ந்த 22 வயதுடைய இளைஞனான வாகன சாரதியையும் கைது செய்து நேற்று வவுனியா நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

இது தொடர்பான மேலதிக விசாரணையை வவுனியா ஈச்சங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

# கிளிநொச்சியில் இந்து ஆலயங்கள் சிதைப்பு

## சைவ மங்கையர்கழகம் வன்மையாக கண்டிக்கிறது

கிளிநொச்சி முரசுமோட்டை பகுதியிலே தொன்மை வாய்ந்த சேற்றுக்கண்டி அம்மன் ஆலயம், 2 ஆம் கட்டை பிள்ளையார் ஆலயம், முருகன் ஆலய விக்கிரகங்கள் சிதைக்கப்பட்டும் உண்டியல் உடைக்கப்பட்டும் பணம் களவாடப்பட்டதுமான செயலை கிளிநொச்சி மாவட்ட சைவ மங்கையர் கழகம் வன்மையாக கண்டிக்கின்றது.

இது தொடர்பில் அவர்கள் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில், மனிதன் மனிதனாக வையகத்தில் வாழ்வாங்கு வாழ உறுதுணையாகவும் வழிகாட்டியாகவும் இருப்பது சமயம். மக்கள் வாழ்வதற்கு பல சிறந்த வழிகளுண்டு. இதனை விடுத்து ஆலயங்களில் திருடுவது, இடித்தழிப்பது இம்மைக்கும் மறுமைக்கும் பேரழிவைத்தரும், வாழ்வையே சிதைத்து விடும். சமகாலத்திலே தமிழர்களது ஆலயங்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருவது கண்கூடு. இதன் பலாபலன்களை அவர்கள் வெகு சீக்கிரத்தில் அனுபவிப்பார்கள். விசமிகளின் இச் செயலை கிளிநொச்சி மாவட்ட சைவ மங்கையர் கழகம் வன்மையாகக் கண்டிக்கின்றது என அவர்கள் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# படையினரின் துப்பாக்கியை பறித்த நபர் நீதிமன்றில் சரண்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு குமுழமுனை ஆண்டான்குளம் வீதியில் கடந்த 26 ஆம் திகதி இரவு படையினர் கள்ளமரம் கடத்தல் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட வேளை கள்ளமரம் கடத்தலில் ஈடுபட்ட இருவர் படையினரின் துப்பாக்கியை பறித்து சென்றுள்ள சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் படைத்தரப்பினரால் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டதற்கு அமைவாக முல்லைத்தீவு பொலிஸார் குமுழமுனை பிரதேசத்தைச் சேர்ந்த ஐவரிடம் விசாரணை நடத்திய நிலையில் குறித்த துப்பாக்கியை கடந்த 27 ஆம் திகதி மீட்டுள்ளார்கள். இந்நிலையில் துப்பாக்கியைப் பறித்து சென்ற நபர் தலைமறைவாகியுள்ள நிலையில் கடந்த 28 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் சட்டத்தரணி ஊடாக சரணடைந்துள்ளார்.

அளம்பில் தங்கபுரத்தைச் சேர்ந்த ம.நிவந்தன் என்ற குறித்த நபரே இவ்வாறு நீதிமன்றில் சரணடைந்துள்ளதாக தெரியவருகின்றது. இவரை எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி எஸ்.லெனின்குமார் உத்தரவிட்டுள்ளார். (2-281)

## வரலாற்றில் முதல் தடவையாக

# மன்னார் நானாட்டான் ம.வி. மாணவர்கள் இருவர் சாதனை


அருட் பிரகாசம் டினேசியஸ்



ஜீவா ஜெயதீசன் அனோ ஜெயந்

(பனிக்கன்குளம்)

வரலாற்றில் முதல் தடவையாக மன்னார் நானாட்டான் மகா வித்தியாலய மாணவர்கள் இருவர் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் "9ஏ" சித்தியைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

நானாட்டான் ம.வித்தி மாணவர்களான ஜீவா ஜெயதீசன் அனோ ஜெயந், அருட்பிரகாசம் டினேசியஸ் ஆகிய இரு மாணவர்களுமே "9ஏ" சித்திகளைப் பெற்று நானாட்டான் மகா வித்திக்கு பெருமை சேர்த்துள்ளனர். (2-250-281)

# கண்ணீருடன் விடைபெற்றார் கண்டாவளை பிரதேச செயலாளர்



(பரந்தன்)

மாரடைப்பால் மரணமடைந்த கண்டாவளை பிரதேசெயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் பெருமளவான மக்களின் கண்ணீருடன் நேற்று முன்தினம் விடைபெற்றார்.

கிளிநொச்சி பரந்தன் பொது நோக்கு மண்டபத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணிக்கு பொது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டது. பெரும்பாலான பொது மக்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் கண்ணீருக்கு மத்தியில் அவருக்கான இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்ட அரச அதிபர்கள், கிளிநொச்சி மாவட்டங்களின் மேலதிக அரசாங்க அதிபர், பிரதேசசெயலாளர்கள் திணைக்களங்களின் தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் அரசியல் பிரமுகர்கள், பொது மக்கள் என பெருமளவானவர்கள் கலந்து கொண்டிருந்தனர். (2-312)

# சூழலுக்கிசைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–149

## முடியாதென்று எதுவுமில்லை!

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 164



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

என்னுள்ளே உறுத்தியதை உறவுகள் உங்களுக்காக எழுத இக்கைகள் இம்முறை துடித்தன. இது அனுபவத்தின் வெளிப்பாடு. தினமும் ஏதேதோ செய்கின்றோம். எம்மிலேயே நம்பிக்கை கொள்ளாமல் நாம் எதுவும் சாக்குப் போக்குக்கென செய்தல் கூடாது. எமக்கென்று வலிமையை இறைவன் தந்திருக்கின்றான் என நாம் முதலில் உள்மனதில் வரித்துக் கொள்ளல் வேண்டும். தினமும் உள்மனது என்னால் முடியும்....,என்னால் முடியும். என உரைத்துக்கொண்டே இருக்க வேண்டும். சரி இதென்ன? இன்று எதனைச் சொல்ல முயன்றிருக்கின்றேன். வாருங்கள், வாசியுங்கள், சுவாரஸ்யமான செய்தி உள்ளே இருக்கின்றது.

எமது நண்பர் ஒருவர் இப்படிச் சொன்னார். பத்திரிகையில் கட்டுரையை வாராவாரம் எழுதி என்ன பயன்? அடுத்தநாள் கடையில் வடையில் எண்ணெய் துடைக்கத்தானே பயன்படப் போகின்றது என்றார்கள். அதையும் நிஜமாக்கிய நாட்களும் உண்டு. ஒரு நாள் தேநீர் அருந்த கடையில் இருந்த போது சுடச் சுட வடை தாருங்கள் என்றேன். சுட்ட (ஆறின) வடை வேண்டாம் சுடச் சுட இருந்தால் தாருங்கள் என்றேன். சுட்ட பழம் வேண்டாம் என ஔவைப் பாட்டியே கூறிய பின்னர் நாங்கள் எம்மாத்திரம்? அங்கு நின்றவர் சுடச்சுட வடையை பத்திரிகைப் பேப்பர் துண்டில் எடுத்துத் தந்தார். அதிலொரு சுத்தம் இருப்பதாக அவரின் நினைப்பு. பரவாயில்லை வெறும் கையால் எடுத்துத் தராமல் அதற்கொரு கெவர் கருவியைப் பாவித்து பேப்பரில் தந்தார். தந்த பின்னர் வடையில் அதிகமாயுள்ள எண்ணெயை பேப்பர் துண்டில் நசுக்கிக் கொண்டிருந்த வேளை தந்தபேப்பர் துண்டில் இருந்ததை எதேச்சையாக வாசித்த போது எங்கேயோ கேட்டது போன்றதொரு உணர்வு. தொடர்ந்து வாசித்தபோது அட நான் எழுதியகட்டுரையின் ஒரு துண்டு என் கையில் இருப்பது தெரிந்தது. நிமிர்ந்துபார்த்தேன். என் முன்னாலுள்ளவரும் வடையில் இன்னொரு பேப்பர் துண்டில் வைத்து எண்ணெயை நசுக்கி எடுத்துக் கொண்டிருந்தார். அப்போதுதான் பார்த்தேன் அதில் எனது படம் இருந்ததையும் அந்த வடையில் எண்ணெய் நசுக்கிய துண்டில் நானும் நசுங்கிக்கொண்டிருந்தேன் என்பதுவும்.

இதைப் பார்த்ததும் ஏதோவொரு நெருடலான உள்ளுணர்வு. இதற்காகத்தானா இவ்வளவு சிரமப்பட்டு எழுதிக் கொண்டிருக்கின்றேன். எழுதுவது எவருக்கும் பிரயோசனப்படவில்லையோ? தொடர்ந்து எழுதத்தான் வேண்டுமா? என பல கோணங்களில் கேள்விகள் என்னுள்ளே எழுந்து மறைந்தன. திடீரென முளைத்த ஆலோசகர்கள் சிலர் கொஞ்சக்காலத்துக்கு எழுதாமல் விட்டு விடும் என்றார்கள். எழுது, எழுது, புதிதாக எழுது என வைராக்கியம் கொண்ட உள் மனதைக்கூட உலுப்பிவிட்டார்கள். அடுத்தநாள் வலம்புரியிலிருந்து அழைப்பு. எங்கே கட்டுரை இன்னும் வரவில்லை அனுப்புகின்றீர்களா? என்றார்கள். என்ன செய்வது என மனமும் குழம்பத் தொடங்கி விட்டது. அப்போது வந்த கடிதங்களிலொன்று மீண்டுமொரு நம்பிக்கையைத் தந்தது.

24.02.2018 அன்று வலம்புரியில் எழுதிய "வேலை தேடுபவராக இல்லாது உருவாக்குபவராகுங்கள்" என்னும் தலைப்பிலான கட்டுரையை தலைப்பிட்டு யாழ்ப்பாணம் புகையிரத ஒழுங்கையைச் சேர்ந்த இராசையா அன்ரன் குரைட்ணம் என்பவர் அன்றைய தினமே இப்படி எழுதியிருந்தார். என்பார்வையில் குப்பைகளையே சுமந்து வரும் ஊடகங்களில் இப்படி ஒரு வசனமா? மெய்சிலிர்த்து நின்றேன். நிற்கின்றேன். நான்கு மாதங்களாக தொடர்ந்து வாசிக்கும் பாக்கியம் பெற்றேன். உங்களை நேரில் சந்திப்பதற்கு மிகுந்த ஆவலாகவுள்ளேன் என அதில் இருந்தது.



இதை வாசித்த போது எழுதும் இக்கைகளுக்கு புதியதொரு சக்தி பிறந்ததாக உணர்ந்தேன். எழுதுகின்ற கட்டுரைகளை வாசிப்பவர்கள் பலர். ஆனால் அதில் சிலர் தரும் விமர்சனமும் ஊக்கமும் இன்னும் இன்னும் தொடர்ந்து எழுத வேண்டும் என்னும் உந்துதலைத் தரும். அதுவே எழுத்தாளன் ஒருவனுக்கான உந்துசக்தியாகவும் இருக்கும். எழுதுவது என்பது அதுவும் தாய்மொழியாம் தமிழில் எழுதுவதென்பது பலருக்கு முடியவில்லை என்னும் போது என்னால் முடிகின்றதே என்பதும், அவ்வாறு எழுதுவதில் யாராவது ஒருவருக்காவது எழுதும் செய்தி பயன்படுமானால், நிச்சயமாக அது எழுதியதற்காக கிடைத்த வெற்றியாகவே இருக்கும்.

அன்பர் உணர்வுபூர்வமாக எழுதிய கடிதத்தால் வலம்புரியில் எழுதும் இக்கட்டுரைகளுக்கு அர்த்தமிருக்கின்றது என்பது புரிந்தது. அதன் தொடர்ச்சியே இன்றைய தலைப்பு. முடியாதென்று எதுவுமில்லை. விடாமுயற்சி மட்டும் எம்முள் இருந்துவிட்டால் நாம் எதனையும் சாதிக்கலாம். வாருங்கள் வெற்றியாளராக மாறிய பலரது கதைகள் இத் தொடர் கட்டுரைக்குள்ளே அடங்குகின்றன. வாசித்த பின் இவை நிச்சயம் உங்களுக்குள்ளும் ஒருமாற்றத்தைக் கொண்டு வரும்.

மாடு மேய்க்க லாயக்கு என்றார்கள். ஆனால்...

தமிழ்நாட்டில் அருண் ஐஸ் கிரீம், அர்ச்சயாபால் உற்பத்தி நிறுவனத்தின் தொழிலதிபர் கூறியது பலரையும் பிரமிக்கச் செய்திருக்கின்றது. கிராமப் பள்ளியில் தான் எட்டாவது படித்துக் கொண்டிருந்தபோது ஒரு ஆலமரத்தைத் தாண்டித்தான் பாடசாலைக்குப் போகவேண்டும். ஒருநாள் இவ்வாறு நண்பர்களுடன் நடந்து போய்க் கொண்டிருக்கும் போது மரத்தடியில் இருந்த ஊர்வம்பு பேசும் கூட்டம் தன்னைப் பார்த்து இது ஒன்றுக்கும் ஆகாது. மாடு மேய்க்கத்தான் லாயக்கு என்றார்கள். அப்போது சிறியவனானதால் அதனைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லையாயினும் அன்று அந்த வயதில் தன்னைக் காட்டி ஏளனம் செய்ததை இன்று வரைக்கும் மறக்கவில்லையாம். மாறாக படிப்பதை அந்த வருடத்தோடுவிட்டு விட்டாராம். பின்னர் தந்தையுடன் சேர்ந்து விவசாயம் செய்வதற்கு ஒத்தாசையாக இருந்தாராம். ஆரம்பத்தில் வீட்டில் இரண்டு பசுக்களும் இரண்டு காளைகளுமாக நான்கு மாடுகளே இருந்தன. ஐந்தாண்டுகள் கழித்து தந்தை இறந்த பின்னர் அதுவே வருமானமாகி மாடுகளின் எண்ணிக்கையை பெருக்க முடிவு செய்தாராம். ஆரம்பத்தில் நிறையவே சிரமப்பட வேண்டியிருந்ததாகவும் தொழிற்றுறை ஒன்றைத் தொடங்குவதற்கு எவரிடமிருந்தும் உதவிகள் கிடைக்கவில்லையாம். தந்தை இறந்த பின் வறுமையில் வாடிய தமது குடும்பத்திற்கு பணமுதலீடும் பெரிதளவில் இருக்கவில்லையாம். கூடியிருந்த சொந்தங்களும் தம்மை நம்பி பணம் தர முயற்சிக்கவில்லை. சிறுகக்கட்டி பெருகவாழ் என்பார்கள். அதனையே தனக்கு உறுதுணையாக எடுத்துக் கொண்டார். பசுக்களை வளர்த்து பால்சேகரித்து அதனை விற்றுக் கொள்வதனை வியாபாரமாக்கினார்.

மக்கள் மயப்பட்ட திட்டமாதலால் தமது கிராமத்து மக்களிடம் இதற்கு பெருவரவேற்பிருந்தது. பாலை பக்கெற்றில் அடைத்து விற்றால் இன்னும் அதற்கு கிராக்கி இருக்கும் எனப் புரிந்து கொண்டு அதனை அமுல்படுத்த முயற்சி செய்தார். பக்கெற்றில் அடைப்பதென்றால் இலகுவான காரியமா என்ன. அதற்கான முதலீடு, பொதி செய்யும் மூலப் பொருள், அதற்கான இயந்திரம் என பல தேவைகளை அடுக்கிக் கொண்டே பட்டியல் நீண்டது. அது தனக்கு தொழிலை விரிவு படுத்த உதவியாயிருந்தது. பசுக்களின் எண்ணிக்கையை பெருக்கிக் கொண்டேபோனார். கிராம மக்கள் அனைவரும் இத்திட்டத்தில் ஒன்றிணைந்தனர். ஒவ்வொரு முறையும் அந்த ஆலமரத்தை தாண்டிச் செல்கையில் ஏளனம் செய்த வசனங்கள் இன்றும் காதுகளுக்குக் கேட்பதாக கூறுகின்றார். தீயினால் சுட்டபுண் ஆறிவிடும் ஆனால் நாவினால்சுட்டபுண் ஆறவே ஆறாது. எம்மவர் பலர் இந்த நாக்கினை வைத்துக்கொண்டு படுகின்றபாடு சொல்லிமாளாது. வீரம் பேசிக் கொண்டு பலரையும் தூற்றிக் கொள்வதையே வேலையாகக் கொண்டு திரிகின்றார்கள். ஆக்கபூர்வமாக எதனையுமே செய்ததில்லை. செய்ய முயற்சித்ததும் இல்லை.

தற்போது பசுக்களின் எண்ணிக்கையை பெருக்கி பாலுற்பத்தியை பல மடங்காக்கி பெரிய தொழிலதிபராக உயர்ந்திருக்கும் இவர் நான்கு இலட்சம் மாடுகளுக்கு சொந்தக்காரர்களை ஒன்றிணைத்த தொழிற்றுறைக்கு சொந்தக்காரர். இதற்காக நாற்பது கால்நடை வைத்தியர்களை வேலைக்கு அமர்த்தியிருக்கின்றார். தமிழ்நாட்டிலுள்ள பல கிராமங்கள் தமது பராமரிப்பில் இன்றும் இருப்பதாகக் கூறும் இவர் இன்னும் தமது தொழிலை விரிவுபடுத்த உத்தேசித்திருக்கின்றார். இதற்காக பல கிராமங்களை தத்தெடுத்திருக்கின்றார். அந்த கிராமங்களிலுள்ள மக்களை ஒன்றிணைத்து ஒன்றியம் ஒன்றினை அமைத்து அவர்களை தொழில் தருநராக மாற்றிக்கொண்டிருக்கின்றார். முடியாது என்று எதுவுமில்லை என்பது இவரது தாரக மந்திரம்.

ஏழாம் வகுப்பில் கற்றுக் கொண்டிருந்த பிள்ளை கற்பதை நிறுத்தி விட்டு வீட்டுக்கு வந்தபோது தந்தை எதுவும் நேரடியாகக் கூறவில்லையெனினும் தாயிடம் கூறி கவலைப்பட்டார். பின்பு தந்தை இறந்த பின்னர் உலகமே வெறுமையாக இருந்தது. யார் யார் உதவி செய்வார்கள் என அலைக்கழிந்த பின்பு சிறியளவில் தமக்குத் தெரிந்தவற்றையும் கிடைத்த சிறிய அனுபவத்தையும் முதலீடாக வைத்து ஆரம்பித்த தொழில் தற்போது பாரிய நிறுவனமாக பல உற்பத்திப் பொருட்களை சுத்தமாக சிறந்த முறையில் பொதி செய்து கொடுக்கின்றார்கள். சுயதொழில் நிறுவுநராக பல மக்களுக்கு வாழ்வாதாரத்தை கொடுக்கும் தொழிலின் சொந்தக்காரராக அவர்களை தம் மக்களாக பல கிராமங்களை தத்தெடுத்து அந்த கிராம மக்களுக்கு தேவையான பல வசதிவாய்ப்புக்களை செய்தும் கொடுத்திருக்கின்றார்கள். அனைத்து கிராமங்களும் தற்போது தொழில்நுட்ப கிராமங்களாக மாற்றமடைந்து கொண்டிருக்கின்றன.

இத்தொழிலதிபரை பேட்டி கண்ட போது ஒருவர் இவ்வாறு கேட்டார். "ஏழாம் ஆண்டோடு கற்ற கல்வியை இடை நிறுத்தி விட்டாலும் தற்போது நீங்கள் சிறந்த தொழிலதிபராக இருப்பதனால் மிகுதிக் கல்வி தேவையில்லை என்கின்றீர்களா? இதனால் பல ஆண்டுகள் தேவையற்று கற்க வேண்டியதில்லை எனும் தப்பபிப்பிராயம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுவிடுமல்லவா?" அதற்கு அவர் அளித்த பதில் முக்கியமானது. தொடர்ந்து கல்வி கற்றிருந்தால் இருபது வருடங்களாக சிரமப்பட்டிருக்கத் தேவையில்லை என்றும் இந்த உயர்வை ஐந்து வருடங்களிலேயே எட்டியிருக்க முடிந்திருக்கும் என கூறுகின்றார். தொழில் முயற்சியொன்றை எமக்கு எது வருமோ அதில் ஆர்வத்தைக் கூட்டி அதனை முதலீடு செய்து உயர்ந்து கொண்டேபோக வேண்டும். மாற்றங்களை தொழிலில் உற்பத்தி செய்யும் பொருளில் கொண்டுவர முயற்சிக்க வேண்டும். தொழில் பக்தி, தொழில் தர்மம். நேர்மை, கண்ணியம், அன்பு செலுத்துதல், அன்பாகப் பேசுதல், மகிழ்வாக இருத்தல், பணி செய்பவர்களுடன் அன்பாக தட்டிக் கொடுத்தல் இவை எத்தொழிலாயினும் சிறப்புக்களை அள்ளித்தரும். மற்றையவரும் எம்மை மதிப்பதற்கு உதவிடும். முயற்சி செய்து பாருங்கள்! முடியாதது என்று எதுவுமேயில்லை.

# பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக யாராவது வாக்களித்தால் ஒழுக்காற்று நடவடிக்கை

## ஐ.தே.க.உயர்பீடம் கடும் எச்சரிக்கை








(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக ஐக்கிய தேசியக் கட்சியினர் எவராவது வாக்களித்தால் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் கட்சியில் இருந்து நீக்கப்படுவர் என ஐக்கிய தேசியக் கட்சி எச்சரித்துள்ளது.

அத்துடன் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்புத் தினத்தன்று ஐக்கிய தேசியக் கட்சியினர் அனைவரும் பாராளுமன்றத்திற்கு வருகை தரவேண்டும். அதற்கான ஆலோசனைகள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் அக்கட்சி குறிப்பிட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூட்டம் நேற்று சிறிகொத்தாவில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின் பின்னர் கட்சியின் எம்.பி.க்கள் பலர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தனர். இதன்பேது கட்சியின் பிரதி பொதுச் செயலாளரும் அமைச்சருமான அகிலவிராஜ் காரியவசம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக ஐக்கிய தேசியக் கட்சியினர் எவராவது வாக்களித்தால் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து கட்சியில் இருந்து நீக்குவோம்.

அத்துடன் எவரும் பிரதமருக்கு எதிராக வாக்களிக்க மாட்டார்கள். ஐக்கிய தேசியக் கட்சியினர் அனைவரும் பிரதமருக்கு ஆதரவாகவே வாக்களிப்பர். ஆகவே பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாம் தோற்கடிப்போம். இந்த வாக்கெடுப்பின் போது நாட்டு மக்கள் எதிர்பார்க்காதவர்கள் பலர் பிரதமருக்கு ஆதரவாக வாக்களிப்பார்கள்.

அத்துடன் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு நாளன்று ஐக்கிய தேசியக் கட்சியினர் அனைவரும் பாராளுமன்றத்திற்கு வருகை தரவேண்டும். அதற்கான ஆலோசனைகளை நாம் வழங்கியுள்ளோம் என்றார்.

இதன்போது ரவி கருணாநாயக்க எம்.பி.ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிக்க வேண்டியது எமது கடமையாகும். அதனை நாம் செய்ய வேண்டும். ஆகவே எதிர்வரும் நான்காம் திகதியன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிப்பதனை நாட்டு மக்கள் கண்டு கொள்வர். அதன்பின்னர் எமது பலம் அதிகரிக்கும்.

அத்துடன் மத்திய வங்கி பிணைமுறி மோசடி நடந்துள்ளதாக கூறுகின்றனர். அவ்வாறாயின் என்ன மோசடி நடந்துள்ளது என்பதனை நிரூபித்துக் காட்டுங்கள். மோசடி நடந்துள்ளதாகக் கூறுகின்றவர்கள் அதனை ஆதாரபூர்வமாக நிரூபிப்பது கிடையாது. ஆகவே முன்னைய ஆட்சியின் போது நடந்த மோசடிகள் குறித்து எந்தவொரு நடவடிக்கையும் எடுப்பதாக இல்லை என்றார்.

அமைச்சர் சஜித் பிரேமதாஸ கருத்து வெளியிடுகையில்,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடித்ததன் பின்னர் கட்சியில் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்போம். அத்துடன் கட்சியின் தலைமை பொறுப்பை ஏற்குமாறு யாரும் என்னிடம் கோரவில்லை. இந்தப் பொறுப்பை ஒப்படைத்தால் உரிய வகையில் நான் செயற்படத் தயாராகவுள்ளேன். எனினும் தற்போதைக்கு கட்சித்தலைவர் ஒருவர் உள்ளார். ஆகவே அவருக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும். மேலும் தெல்தெனிய சம்பவத்திற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கதான் காரணம் என்று கூட்டு எதிர்க்க ட்சியினர் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கூறியுள்ளனர்.

அப்படியாயின் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கூட்டு எதிர்க்கட்சிக்கு எதிராகவே கொண்டுவர வேண்டும். ஏனெனில் தெல்தெனிய சம்பவத்தின் சூத்திரதாரியை கண்டறிய கூட்டு எதிர்க் கட்சியினர் கண்ணாடி முன் நின்றால் உண்மை தெரிய வரும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கலாபூஷணம் விருதுக்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

இலங்கையின் கலை இலக்கியத் துறைகளுக்கு அளப்பெரும் பங்காற்றுகின்ற கலைஞர்கள், இலக்கியவாதிகள், விற்பன்னர்களுக்கு வருடந்தோறும் அரசின் உயர்விருதான கலாபூஷணம் எனும் விருது வழங்கப்படுகின்றது. இவ்விருது வழங்கல் தொடர்பான செயற்பாடுகளை வருடந்தோறும் கலாசார அமைச்சின் கீழ் இயங்குகின்ற கலாசார அலுவல்கள் திணைக்களம் மேற்கொள்கின்றது. இவ்வைபவத்தின் போது சிங்களம், முஸ்லிம், தமிழ் ஆகிய மூவினக் கலைஞர்களும் உள்ளடக்கப்படுகின்றார்கள்.

தமிழ்க் கலைஞர்களைத் தெரிவுசெய்யும் பொறுப்பு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு உரியதாகும். அறுபது வயதிற்கு மேற்பட்ட கலைஞர்கள் மட்டுமே இவ்விருதினைப் பெறுவதற்கான தகைமையுடையவர்களாவர். சிற்பம், ஓவியம், நடனம், வாய்ப்பாட்டு, தவில், நாதஸ்வரம், நாடகம், சினிமா, நாட்டுப்புறவியல், இலக்கியம், நாட்டுக்கூத்து, ஊடகத்துறை போன்ற பல்வேறு துறைகளில் மிகவும் சிறப்புறச் சேவையாற்றியவர்கள் விருது பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம்.

2018 ஆம் ஆண்டுக்கான கலாபூஷண விருதுக்கு தகைமையுடைய தமிழ்க் கலைஞர்கள் தமது விண்ணப்பங்களை பிரதேச, மாவட்டச் செயலகங்களில் பணிபுரியும் எமது திணைக்கள கலாசார உத்தியோகத்தர்களிடம் இருந்தும் திணைக்களத்திலும் பெற்றுக்கொள்ளலாம். மேலும் இந்த விண்ணப்பப் படிவங்களை www.hindudept.gov.lk என்ற திணைக்களத்தின் இணையத்தள முகவரியிலிருந்தும் தரவிறக்கம் செய்து கொள்ள முடியும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களோடு கலைஞர்கள் தமது தகுதியை உணர்த்தும் முழுமையான ஆவணங்களை பிரதேச செயலகம் மற்றும் மாவட்டச் செயலகங்களில் எதிர்வரும் மே மாதம் 20 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும் என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் அறிவித்துள்ளார். (இ)

## பாதாள உலகத் தலைவன் தினுகவின் மனைவி வீசிய பையில் துப்பாக்கி

## பெண்ணும் இரு இளைஞர்களும் கைது

(கொழும்பு)

புறக்கோட்டை வர்த்தகர்களிடம் கப்பம் பெறும் பிரதான சந்தேக நபராகக் கருதப்படும், பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய தற்போது டுபாயில் உள்ள பாதாள உலகக்குழு உறுப்பினர் "கெசல்வத்தே தினுக"வின் நான்கு மாடி வீடும் அதன் அருகில் உள்ள மற்றொரு வீடும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் நேற்று அதிகாலை சுற்றிவளைக்கப்பட்டது.

வாழைத்தோட்டம், புதுக்கடை பகுதியில் உள்ள இந்த வீட்டை அதிரடிப் படையின் விசேட பாதாள உலகக்குழு கட்டுப்பாட்டு பிரிவு சுற்றிவளைத்த நிலையில், வீட்டில் இருந்த தினுகவின் மனைவி வீட்டுக்கு வெளியே பையொன்றினை வீசியுள்ளார்.



இந் நிலையில் அந்தப் பையை அதிரடிப் படையினர் மீட்ட நிலையில் அதில் இருந்து எம்.எம். 9 ரக துப்பாக்கியொன்றும் தோட்டாக்களும் மீட்கப்பட்டுள்ளன. இந் நிலையில் வீட்டை சோதனை செய்த அதிரடிப் படையினர் தினுகவின் மனைவியையும், அவ்வீட்டில் இருந்த மேலும் இரு இளஞர்களையும் கைது செய்துள்ளனர்.

இதனையடுத்து தினுகவுக்கு சொந்தமானது எனக் கூறப்படும் குறித்த வீட்டுடன் பக்கத்தில் அமைந்திருக்கும் மற்றொரு வீட்டையும் அதிரடிப் படையினர் சோதனை செய்துள்ளனர்.

இதன்போது ஊவா மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட இலக்கத் தகட்டுடன் கூடிய நவீன ரக மோட்டார் சைக்கிள் ஒன்றினை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந் நிலையில் இவ்விடயம் தொடர்பில் திட்டமிட்ட குற்றங்களைக் கட்டுப்படுத்தும் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். அதிரடிப் படையின் கட்டளைத் தளபதி சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எம்.ஆர்.லதீபின் உத்தரவுக்கு அமைய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வருண ஜயசுந்தரவின் மேற்பார்வையில் இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டிருந்தது. (இ)

# விச வாயுத் தாக்கத்திற்கு உள்ளான யூலியாவின் உடல் நிலையில் முன்னேற்றம்

## வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல்

(லண்டன்)

ரஷ்ய உளவுத்துறை அதிகாரியின் மகளின் உடல் நிலையில் முன்னேற்றம் அடைந்து வருவதாக வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.



ரஷ்ய இராணுவத்துறை உளவுப்பிரிவில் உயரதிகாரியாக பணியாற்றியவர் செர்ஜய் ஸ்கிர்பால் (வயது 66). சில ரஷ்ய உளவாளிகளை இங்கிலாந்து உளவுத் துறையினரிடம் காட்டி கொடுத்தமைக்காக கடந்த 2004-ம் ஆண்டு மொஸ்கோவில் இவர் கைது செய்யப்பட்டார். 13 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட அவரை 2010-ம் ஆண்டு பிரிட்டன் அரசு மீட்டு அடைக்கலம் கொடுத்தது.

தற்போது பிரிட்டனில் வசித்து வரும் ஸ்கிர்பால், கடந்த 4 ஆம் திகதி சாலிஸ்பரி நகரில் உள்ள வணிக வளாகத்துக்கு வெளியே தனது மகள் யூலியாவுடன் (வயது 33) மயங்கிய நிலையில் கிடந்தார். அவர்களது உடலில் மிகவும் கொடூரமான 'மர்ம விஷம்' ஏறியிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இருவரும் வைத்தியசாலையில் கோமா நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

உளவுத்துறை அதிகாரி மற்றும் அவரது மகளுக்கு விஷம் ஏற்றியது தொடர்பாக பல நாடுகள் ரஷ்யாவை கண்டித்து அந்நாட்டு தூதர்களை திருப்பி அனுப்பியுள்ளது.

இந்நிலையில், லண்டன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் யூலியாவின் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

ஆனால் அவரது தந்தை உடல் நிலை ஆபத்தான நிலையை தாண்டவில்லை. என வைத்தியசாலை வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (10)

# சசிகலாவின் வாழ்வு சோகத்தில் கழிகிறது

## சகோதரன் திவாகரன் கவலை

(தஞ்சாவூர்)

35 வருடமாக சசி கலாவுக்கு நிம்மதியே இல்லை. இப்போதும் தொடர்ந்து வருகிறது என மறைந்த ம. நடராஜன் நினைவேந்தல் - படத்திறப்பு நிகழ்ச்சியில் சசிகலாவின் சகோதரர் திவாகரன் கவலை வெளியிட்டுள்ளார்.



சசிகலாவின் கணவரும், புதியபார்வை இதழின் ஆசிரியருமான ம.நடராஜன் கடந்த 20ஆம் திகதி உடல் நலக்குறைவால் காலமானார். ம.நடராஜனின் நினை வேந்தல் - படத்திறப்பு நிகழ்ச்சி நேற்று காலை தஞ்சையில் நடைபெற்றது.

விழாவிற்கு உலகத் தமிழர் பேரமைப்பு தலைவர் பழ.நெடுமாறன் தலைமை தாங்கினார். அம்மா மக்கள் முன்னேற்ற கழக துணைப் பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் தொடக்க உரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் திவாகரன் கருத்துத் தெரிவிக்கும் போது, நாங்கள் நடராஜன் அருகிலேயே இருந்ததால் அவருடைய அருமை எங்களுக்கு தெரியவில்லை. இப்போது அதை உணர்ந்து கொள்கிறோம். எனது சகோதரி சசிகலா திருமணமாகி வரும்போது நான் பாடசாலையில் படித்துக் கொண்டிருந்தேன்.

எனது தந்தைக்கு நான் எவ்வளவு பயந்தேனோ அது போன்று தான் அத்தான் நடராஜனுக்கும் பயந்தேன். அவர் எனக்கென்று தனி இடம் வைத்திருந்தார். அதை இன்று வரை நான் கடைப் பிடித்தேன். அவர் ஒரு மறைக்கப்பட்ட வரலாறு.

அவர் இறந்த பிறகு முள்ளி வாய்க்கால் முற்றத்தின் உள்ளே அவரது உடலை அடக்கம் செய்யலாம் என்று முடிவு எடுத்தோம். ஆனால் அது ஒரு டிரஸ்டு. அதற்கு பழ.நெடுமாறன் தலைவராக இருக்கிறார். அதனால் அவரிடம் சென்று அனுமதியெல்லாம் கேட்க வேண்டும். எனவே நாங்கள் முள்ளிவாய்க்கால் முற்றம்எதிரே அவரது உடலை அடக்கம் செய்தோம். இன்று அவரது சமாதியில் 50 பேர் மொட்டை போட்டு கொண்டனர். இதைப்பார்த்த பின்பு தான் தெரிகிறது அவர் அற்புதமான வாழ்க்கையை வாழ்ந்து மறைந்தார் என்பது. நானும் திராவிட கழகத்தை சேர்ந்தவன் தான். எனது சகோதரி சசிகலா துன்பத்திற்கு மேல் துன்பம் அடைந்து வருகிறார்.

35 வருடமாக அவருக்கு நிம்மதியே இல்லை.

இப் போதும் அதுதான் தொடர்ந்து வருகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (10)

# பா.ஜ.கவுக்கு உழைப்பதை தமிழக அரசு நிறுத்த வேண்டும்

## ஸ்டாலின் வேண்டுகோள்

(சென்னை)

கர்நாடகத் தேர்தலில் பா.ஜ.கவுக்கு உதவுவதற்காக உழைப்பதைத் தமிழக அரசு கைவிட வேண்டும் என தி.மு.க. செயல் தலைவர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பதில் தொடர்ந்தும் சிக்கல் நீடித்து வரும் நிலையில் மு.க.ஸ்டாலின் நேற்று வெள்ளிக்கிழமை ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காமல் மத்திய மாநில அரசுகள் தமிழகத்திற்கு துரோகம் இழைத்துள்ளன. உச்ச நீதிமன்ற தீர்ப்பை மீறிய மத்திய அரசுக்கு எதிராக தமிழக அமைச்சரவையைக் கூட்டிக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். முதலில் கர்நாடகத் தேர்தலில் பா.ஜ.கவுக்கு உதவ ஓவர் டைம் ஆக உழைப்பதைத் தமிழக அரசு கைவிடுவதுடன் தமிழக மக்களின் நலனில் அக்கறை கொண்டு இப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்.

உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக மத்திய நீர்வளத்துறை அமைச்சரின் கருத்திற்கு எதிராக அவமதிப்பு வழக்குத் தொடர்ந்திருந்தால் தற்போது காவிரி மேலாண்மை வாரியம் அமைந்திருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (10)

# பயணிகளுக்கு தகவல் சொல்லும் ரோபோ

(பெங்களூர்)

மனித உருவம் போன்ற ரோபோ ஒன்றை தனியார் நிறுவனம் பெங்களூர் விமான நிலையத்தில் நிறுவி உள்ளது.



இந்த ரோபோவுக்கு கெம்பா என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

கர்நாடகா மாநிலம் பற்றிய தகவல்கள் மட்டுமல்ல, உலகம் பற்றிய பல்வேறு தகவல்களையும், இந்த ரோ போ அளித்து வருகிறது. விமானத்தில் பயணம் செய்யவரும் பயணிகள் இந்த அதிசய ரோபோவை பார்த்து விட்டு செல்கின்றனர். (10)

# தாஜ்மஹாலை சுற்றிப் பார்க்க ஏப்ரல் முதல் நேரக்கட்டுப்பாடு

(டில்லி)

தாஜ்மகாலை சுற்றிப் பார்ப்பதற்கான நேரக் கட்டுப்பாடு ஏப்ரல் 1 ஆம் திகதி முதல் அமுலுக்கு வருகிறது. உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மகால் ஆக்ரா நகரில் அமைந்துள்ளது. தாஜ்மகாலைக் காண இந்தியா மட்டும் அல்லாது உலகம் முழுவதில் இருந்தும் சுற்றுலாப் பயணிகள் இங்கு வருவது வழக்கம். விடுமுறை தினங்களில் சுமார் 50 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தாஜ்மகாலைப் பார்வையிட வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



இந்நிலையில், தாஜ்மகாலைச் சுற்றிப் பார்க்க நேரக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. அதன்படி, நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் சுற்றுலாப் பயணிகள் அதிகபட்சமாக 3 மணி நேரம் மட்டுமே தாஜ்மகால் வளாகத்துக்குள் இருக்க முடியும். அதற்கு மேல் இருப்பவர்களிடம் கூடுதல் கட்டணம் அறவிட திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான அறிவிப்பை இந்திய தொல்லியல் ஆய்வுத் துறை வெளியிட்டுள்ளது. சனநெரிசல் நாளுக்கு நாள் அதிகமாகி வருவதைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகள் பெரும்பாலானோர் நீண்ட நேரம் தாஜ்மஹால் அமைந்திருக்கும் வளாகத்திலேயே இருப்பதால் சனநெரிசல் அதிகரிப்பதாகத் தெரிகிறது. அதைத் தவிர்த்து அனைத்து பயணிகளும் சிரமமின்றி தாஜ்மகாலைக் கண்டுகளிக்கும் நோக்கில் இந்த நேரக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருப்பதாக தொல்லியல் ஆய்வுத் துறையினர் சுட்டிக் காட்டியுள்ளனர். (10)

# தமிழகத்திற்கு துரோகம் இழைத்தால் ஆட்சியாளர்களை மக்கள் தூக்கியெறிவர்

## விஜயகாந்த் எச்சரிக்கை



(சென்னை)

காவிரி மேலாண்மை விவகாரத்தில் தமிழகத்துக்குத் துரோகம் இழைத்தால் இரண்டு ஆட்சிகளையும் மக்கள் தூக்கி எறிவார்கள் என தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் எச்சரித்துள்ளார்.

இது குறித்து நேற்று வெள்ளிக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில், 'உச்ச நீதிமன்றம் விதித்த கெடுவிற்குள் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காத மத்திய அரசின் செயற்கடும் கண்டனத்திற்குரியது.

6 வாரகாலம் கெடு கொடுத்தும், அதனை நிறைவேற்றாமலிருப்பது தமிழகத்திற்கும், தமிழக மக்களுக்கும் மத்திய அரசு செய்யும் துரோகம் என்பதுடன், 25 ஆண்டு காலமாக தொடர் போராட்டம் நடத்தியதன் விளைவாக காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.


இதனால் மத்திய அரசின் முடிவுகளை மிகுந்த ஆவலுடன் தமிழக மக்கள் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பது தொடர்பான அறிவிப்பை, கெடுவிற்குள் மத்திய அரசு வெளியிடாதது தமிழக மக்களுக்கு மிகப் பெரிய ஏமாற்றத்தை அளித்திருக்கிறது.

இது ஒட்டுமொத்த தமிழக மக்களையும் வஞ்சித்து விட்டதாக கருதுவதால், இதற்கு தே.மு.தி.க. சார்பில் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். தேர்தல்களை மட்டும் எண்ணி மத்திய, மாநில அரசுகள் செயற்படுவது போலவும், மக்களின் நிலையை அரசுகள் யோசிப்பதாகத் தெரியவில்லை.

மாநிலத்தில் உள்ள ஆளும் கட்சியினர் கடுமையான முடிவை எடுத்து, காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லாவிட்டால் ஒட்டுமொத்த மக்களும் இந்த இரண்டு ஆட்சிகளையும் புறந்தள்ளுவது தொடர்பாகத் தீர்மானிக்கவுள்ளனர்' என என மேலும் தெரிவித்தார். (10)

# மனித உடலில் புதிய உறுப்பு கண்டுபிடிப்பு




(நியூயோர்க்)

மனித உடலில் புதிய உறுப்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்காவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் நியூயோர்க் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் புதிய உடல் உறுப்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். "இண்டெர்ஸ்டிடியம்" (Interstitium) என்ற இந்த பாகம் தோலுக்கடியில் படர்ந்து காணப்படுகிறது. இது உடல் திசுக்களை பாது காக்க பயன்படுகிறது. இந்த உறுப்பானது உடலின் அனைத்து பாகங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. நுரையீரல், இரத்தக்குழாய்கள் மற்றும் தசைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. இது உடலில் உள்ள பெரிய உறுப்புகளில் ஒன்றாக கருதப்படுகிறது. இது கொலாஜன் மற்றும் எலாஸ்டினிலால் உருவானது. அதாவது மிகவும் உறுதியாகவும், வளையும் தன்மையுடனும் உள்ளது. இது உடல் முழுவதும் உள்ள திசு புரதங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து 12 புற்று நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளிடம் சோதனை செய்யப்பட்டது. அனைவரின் உடலிலும் இந்த உறுப்பு உள்ளது. புற்று நோய் உடல் முழுவதும் எவ்வாறு பரவுகிறது என்பதை அறிய இந்த உறுப்பு உதவும். மேலும், புற்று நோயை கண்டுபிடிக்கவும், குணப்படுத்தவும் இது உதவியாக இருக்கும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். (10)

# ஓடிக் கொண்டிருந்த பேருந்து தீப்பிடித்ததில் இருபது பேர் பலி



(பாங்கொக்)

தாய்லாந்தில் பக்டரிக்கு தொழிலாளர்களை ஏற்றிச் சென்ற பேருந்து திடீரென தீப்பிடித்து எரிந்ததில் 20 தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

தாய்லாந்தின் பாங்கொக் நகரின் அருகே உள்ள தொழிற்பேட்டைக்கு தொழிலாளர்களை ஏற்றிக்கொண்டு ஒரு பேருந்து சென்றுகொண்டிருந்தது. இந்த தொழிலாளர்கள் அனைவரும் அண்டை நாடான மியன்மாரில் இருந்து புலம்பெயர்ந்து வந்தவர்கள்.

இவர்கள் வந்த பேருந்து நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இரு நாட்டு எல்லையை ஒட்டியுள்ள டாக் மாகாணத்தில் வந்தபோது திடீரென தீப்பிடித்து எரியத் தொடங்கியது.

பேருந்தின் மையப் பகுதியில் தீப்பிடித்ததால் முன்பக்க இருக்கைகளில் இருந்த தொழிலாளர்கள் வாசல் வழியாகவும் ஜன்னல் வழியாகவும் வெளியேறி உயிர்தப்பினர். ஆனால் பின்புற இருக்கைகளில் இருந்தவர்களால் வெளியேற முடியாமல் தீயில் சிக்கிக் கொண்டனர்.

இந்த விபத்தில் 20 தொழிலாளர்கள் உடல் கருகி உயிரிழந்தனர். 27 பேர் உயிர்தப்பினர்.

தாய்லாந்தில் மோசமான வீதிகளில் வாகன விபத்து அதிகரித்து வருகிறது. மார்ச் 21ஆம் திகதி சுற்றுலா பேருந்து மலைப்பாதையில் சென்றபோது கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்ததில் 18 பேர் உயிரிழந்தனர். பாடசாலை உலகிலேயே லிபியாவுக்கு அடுத்தபடியாக தாய்லாந்தில்தான் வீதி விபத்துகளில் அதிக உயிரிழப்பு ஏற்படுவதாக உலக சுகாதார அமைப்பின் புள்ளிவிவரம் தெரிவிக்கிறது குறிப்பிடத்தக்கது. (10)

# அமெரிக்க இராணுவம் விரைவில் சிரியாவிலிருந்து வாபஸ்

## ஜனாதிபதி ட்ரம்ப் அறிவிப்பு

(டமாஸ்கஸ்)

சிரியாவில் முகாமிட்டு ஐ.எஸ். பயங்கரவாதிகளுடன் போரிட்டு வரும் அமெரிக்க இராணுவம் மிக விரைவில் திரும்ப பெறப்படும் என ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவின் ஒகியோவில் அடிப்படை உட்கட்டமைப்பு விழா நடந்தது. ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கலந்துகொண்டு பேசினார்.

சிரியாவில் அமெரிக்க இராணுவம்முகாமிட்டு ஐ.எஸ். தீவிரவாதிகளுடன் போரிட்டு வருகிறது. தற்போது அவர்களை நரகத்தின் கதவை தட்ட வைத்து இருக்கிறோம். எனவே நாம் சிரியாவில் இருந்து வெளியேறுவோம்.

ஐ.எஸ். பயங்கரவாதிகளால் ஆக்கிரமிக்கப்பட்ட 100 சதவீத பகுதிகளையும் மீட்கும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது. இதனால் சிரியாவில் இருந்து நமது இராணுவம் மிக விரைவில் வாபஸ் பெறப்படும்.

மத்திய கிழக்கு நாடுகளில் அமெரிக்க இராணுவம் முகாமிட்டு போரிட்டு வருகிறது. இதனால் அங்கு 7 டிரில்லியன் டொலர் (ரூ.450 இலட்சம் கோடி) வீணாக செலவிடப்பட்டுள்ளது.

ஒகியோ, பென்சில்வேனியா அல்லது ஐோவாவில் பாடசாலைகள் கட்டினால் பயனுள்ளதாக இருக்கும். ஆனால் மத்திய கிழக்கு நாடுகளில் 7 டிரில்லியன் டொலர் (ரூ.450 இலட்சம் கோடி) வீணடித்துள்ளோம். நாம் அங்கு எண்ணெயை பெற்றால் பரவாயில்லை. அதுவும் இல்லை.

பெரும்பாலான எண்ணெய் வளத்தை ஐ.எஸ். பயங்கரவாதிகள் பெறுகின்றனர். அவர்களுக்காக நாம் ஏன் அங்கு பணத்தை முதலீடு செய்ய வேண்டும். அது முட்டாள் தனமானது. நமது இராணுவம் மிக பலம் வாய்ந்தது. அது மீண்டும் வலுப்பெற்றுள்ளது.

நாம் நமது நாட்டில் வலுவான கட்டுமானத்தை ஏற்படுத்த வேண்டும்.

அதற்கு குடியரசு மற்றும் ஜனநாயக கட்சிகளைச் சேர்ந்த எம்.பிக்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (10)

# கார்க்குண்டுத் தாக்குதலில் பத்து பேர் உடல் சிதறிப் பலி



லிபியா நாட்டின் கிழக்கு பகுதியில் தீவிரவாதிகள் நடத்திய கார் வெடிகுண்டு தாக்குதலில் 10 பேர் பரிதாபமாக பலியாகியுள்ளனர்.

லிபியா நாட்டின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள அஜ்டாபியா நகரில் உள்ள அரசு ஆதரவு பாதுகாப்பு படையினரை குறிவைத்து தீவிரவாதிகள் நேற்று முன்தினம் கார் வெடிகுண்டு தாக்குதல் நடத்தினர்.

இந்த கார் வெடிகுண்டு தாக்குதலில் சம்பவ இடத்திலேயே 10 பேர் உடல் சிதறி பரிதாபமாக பலியாகினர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர்.

தகவலறிந்து மீட்பு படையினர் அங்கு விரைந்து வந்தனர். அவர்கள் பலியான உடல்களை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பினர். படுகாயம் அடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். விசாரணையில், வெடிகுண்டு தாக்குதலில் பலியானவர்களில் பொதுமக்களும், பொலிஸாரும் அடங்குவார்கள். காயம் அடைந்தவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என தெரிவித்தனர். இந்த தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. கடந்த ஜனவரி 22ஆம் திகதி லிபியா நாட்டின் பெங்காஷி நகரில் மசூதியில் தொழுகை முடித்து வந்தவர்கள் மீது தீவிரவாதிகள் நடத்திய கார் வெடிகுண்டு தாக்குதலில் 22 பேர் பரிதாபமாக பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (10)

# பாவனையாளர் தகவல்களைப் பாதுகாக்கும் பேஸ்புக்கின் பிறைவசி ஷோர்ட்கட்ஸ் மெனு

(பிரசல்ஸ்)

பேஸ்புக் நிறுவனம், பாவனையாளர்களின் தகவல்களை பாதுகாக்கும் வகையில் அதிரடி நடவடிக்கை எடுத்து வருகிறது.

உலக நாடுகளில் சமூக வலைத்தள பயன்பாட்டில் முக்கிய இடம் பிடித்து இருப்பது 'பேஸ்புக்'. இதன் பாவனையாளர்கள் 5 கோடிப் பேரின் தனிப்பட்ட தகவல்கள், அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தில் நடைபெற்ற தேர்தல்களின் போது திருடப்பட்டுள்ளன. இந்த திருட்டில் 'கேம்பிரிட்ஜ் அனாலிட்டிகா' என்னும் தேர்தல் தகவல்கள், தகவல்கள் பகுப்பாய்வு நிறுவனம் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதை 'பேஸ்புக்' நிறுவனர் ஜுக்கர்பெர்க் ஒப்புக்கொண்டு மன்னிப்பு கேட்டதுடன், இனி இப்படி நடக்காமல் பார்த்துக்கொள்வோம் என உறுதியளித்தார்.

இந்த ஊழல் விவகாரத்தால் 'பேஸ்புக்' நிறுவனத்தின் பங்குகள் 18 சதவீத அளவுக்கு சரிவை சந்தித்துள்ளன. மேலும் இந்த நிறுவனத்தின் சந்தை மதிப்பு 100 பில்லியன் டொலர் அளவுக்கு (சுமார் ரூ.6இலட்சம் கோடி) வீழ்ச்சி அடைந்தது.

இதையடுத்து 'பேஸ்புக்' நிறுவனம், பாவனையாளர்களின் தகவல்களை பாதுகாக்கும் வகையில் அதிரடி நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த நடவடிக்கைக்கு பின்னர் 'பேஸ்புக்' தகவல்கள் மேலாண்மை எளிதாகும் அமைப்பு மெனு மறுவடிவமைப்பு செய்யப்படும் பாவனையாளர்கள் தங்கள் தகவல்களை தங்களது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, புதிய 'பிறைவசி ஷோர்ட்கட்ஸ் மெனு' ஒன்றை 'பேஸ்புக்' அறிமுகம் செய்யும். இதைக்கொண்டு, பாவனையாளர்கள் தங்கள் 'பேஸ்புக்' பக்கத்தின் பாதுகாப்பை அதிகரித்துக்கொள்ள முடியும். அவர்களது தகவல்களை யார், யார் பார்க்கிறார்கள், செயல்களை யார், யார் காண்கிறார்கள் என்பதை கண்டு நிர்வகிக்க முடியும். அத்துடன் அவர்கள் பார்க்கிற விளம்பரங்களையும் கட்டுப்படுத்த முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10)

# எகிப்து ஜனாதிபதித் தேர்தலில் அப்துல் போட்டியின்றி வெற்றி



(கெய்ரோ)

எகிப்தில் சமீபத்தில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் 90 சதவீதத்துக்கு மேல் வாக்குகள் பெற்று அப்துல் சிசி மீண்டும் ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்

எகிப்து நாட்டில் ஜனாதிபதி தேர்தல் அண்மையில் நடைபெற்றது.

தற்போதைய ஜனாதிபதி அப்தெல் ஃபாட்டா அல்-சிசி மீண்டும் போட்டியிட்டார். முக்கிய எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் சிலர் சிறையில் உள்ள நிலையில், பல்வேறு கட்சிகள் இந்த தேர்தலை புறக்கணித்துள்ளன. இதனால், அல்-சிசியை எதிர்த்து முக்கிய பிரமுகர்கள் யாரும் போட்டியிடவில்லை. கடைசி நேரத்தில் மோசா முஸ்தபா மோசா வேட்பாளராக களம் இறங்கினார். இந்த தேர்தலில் 6 கோடி மக்களில் 2.3 கோடி மக்கள் வாக்களித்தனர்.

ஜனாதிபதி தேர்தலில் வாக்குப்பதிவு மிகவும் குறைவாக இருந்தது. வாக்களிக்காதவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என தேர்தல் துறை அறிவித்தும் வாக்குப்பதிவு குறைவாகவே இருந்தது.

இந்நிலையில், நேற்று வாக்குகள் எண்ணிக்கையில் பதிவான வாக்குகளில் 92 சதவீதம் வாக்குகள் பெற்று ஜனாதிபதி சிசி மீண்டும் நியமனம் செய்யப்படவுள்ளார் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (10)

# ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இராப்போசனம் வழங்கிய ராஜித



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன இராப்போசன விருந்துபசாரமொன்றை வழங்கியுள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் அனைத்து உறுப்பினர்களும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு எதிராக வாக்களிக்கத் தீர்மானித்துள்ளனர்.

நல்லாட்சி அரசாங்கத்தின் அனைத்து உறுப்பினர்களின் வெற்றியாக இந்தத் தீர்மானம் கருதப்படுகின்றது.

இந்த வெற்றியைக் கொண்டாடும் நோக்கில் சுகாதார அமைச்சரால் இராப் போசன விருந்துபசாரமொன்று வழங்கப்பட்டுள்ளது.

ராஜிதவின் இல்லத்தில் நடைபெற்ற இந்த விருந்துபசாரத்தில் ஜனாதிபதியும் பிரதமரும் நான்கு மணித்தியாலங்கள் வரையில் இருந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது அரசாங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து முழுமையாக கலந்துரையாடியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரதமருக்கு மிகவும் பிடித்தமான கறுப்புக் கோப்பியொன்றை ராஜிதவின் மனைவி சுஜாதா சேனாரட்ன வழங்கியுள்ளார்.

ஜனாதிபதியும் பிரதமரும் முரண்பாடுகளைக் களைந்து இன்முகத்துடன் ராஜிதவின் இல்லத்தை விட்டு வெளியேறிச் சென்றதாக அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ)

# விசித்திர பலா மரம்!

(கண்டி)


கண்டி மாவட்டம், உடிஸ் பத்துவ மஹரவல என்னும் இடத்திலுள்ள வீடொன்றில் பலா மரம் ஒன்று விசித்திரமான முறையில் காய்களை காய்த்துள்ளது.

பொதுவாக பலா மரத்தின் காய்கள் மரத்தின் நடுப்பகுதி மற்றும் மேல் பகுதியில் காய்ப்பது வழமையானதாகும். எனினும், இந்த மரத்தில் மரத்தின் அடிப்பகுதியில் பெரும் எண்ணிக்கையிலான காய்கள் காய்த்துள்ளன.

வழமையாக மரத்தின் உயர்ந்த கிளைகளில் காய்கள் காய்க்கும் என்ற போதிலும் இங்கு மரத்தின் அடிப்பகுதியில் கீழிருந்து மேலாக காய்கள் காய்த்துள்ளன.

கண்டி மாவட்டம், உடிஸ் பத்துவ மஹரவல என்னும் இடத்தில் ஓய்வுபெற்ற அதிபரான காமினி குலதுங்கவின் வீட்டில் இந்த மரம் காணப்படுகின்றது.

இந்த மரத்தைப் பார்ப்பதற்கு பெரும் எண்ணிக்கையிலானவர்கள் படையெடுப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ)



# இந்தத் தேர்தல் முறைமை பொருத்தமற்றது; மேல் மாகாண முதலமைச்சர் இசுறு விசனம்

(கொழும்பு)

இந்த தேர்தல் முறைமை பொருத்தமற்றது என மேல் மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

திருத்தி அமைக்கப்பட்ட தேர்தல் முறைமை உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட வேண்டும்.

மக்களின் உரிமைகளை உறுதி செய்யும் நோக்கில் தொகுதிவாரி தேர்தல் முறைமை அறிமுகம் செய்யப்பட்டது. எனினும் இந்த நோக்கம் நிறைவேற்றப்படாது பல்வேறு பிரச்சினைகளே எழுந்துள்ளன.

தவிசாளர்கள், உப தவிசாளர்கள் நியமனத்தின் போது பல்வேறு ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளன.

உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சி நிறுவும் போது ஏற்படும் பிணக்குகள் காரணமாக இந்தத் தேர்தல் முறைமையின் பலவீனம் தெளிவாக அம்பலமாகியுள்ளது.

அடுத்த தேர்தலின் போது இந்த முறைமை முழுமையாக மாற்றியமைக்கப்பட வேண்டும். அத்துடன், பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பில் தொடர்ந்தும் பிரச்சினை நிலவி வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# விளையாட்டுப் பொருட்களை விற்றவர் கைது

(கொழும்பு)

சிறுவர்கள் விரும்பி உண்ணும் சிற்றுண்டி வகைகளின் வடிவத்தை போன்று தயாரிக்கப்படும் மின்சார விளையாட்டுப் பொருட்களை விற்பனை செய்து வந்த நபர் ஒருவர் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் கொழும்பில் உள்ள பிரசித்தி பெற்ற பாடசாலை ஒன்றிற்கு அருகில், இந்த மின்சார விளையாட்டுப் பொருட்களை விற்பனை செய்து வந்துள்ளார். குறித்த விளையாட்டுப் பொருட்களில், 12 வோட் அளவில் மின்சாரம் உற்பத்தியாவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்விளையாட்டு பொருட்கள் சீனாவில் தயாரிக்கப்படுவதாகவும், இவற்றை கொழும்பு புறக்கோட்டை - சீன வீதியில் உள்ள மொத்த வர்த்தக கொள்வனவாளர்களுக்கு விற்பனை செய்யப்படுவதும், பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.



இதன்படி சந்தேகநபருக்கு 10,000 ரூபாய் அபராதமும் மற்றும் தொகை விற்பனையாளருக்கு 30,000 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

## இன்று ஒரு தகவல்

# மூட் அவுட்

துன்பங்களும் சிக்கல்களும் தனித் தனியே வருவதில்லை. அவை கைகோர்த்துக் கொண்டு ஒன்றாக கூட்டங் கூட்டமாக வருகின்றன.

ஆனால் நாமோ இந்த நேரம் பார்த்து நம்மை நாம் நிராயுதபாணிகளாகக் கருதிக் கொண்டு செயலற்றவர்களாக இருந்து விடுகின்றோம்.

இது பள்ளத்தைப் பாதாளமாக்குகிற செயலே தவிர, வேறு அல்ல.

செயலற்று இருப்பதும் கன்னத்திற்குக் கையை முட்டுக் கொடுத்துக் கொண்டு உறைந்து போவதும் தீர்வுகளாகிவிட முடியாது.

எனவே செயற்பட வேண்டும். இயல்பு நிலைக்கு வரவேண்டும். ஆனால் வரமுடியாதபடி ஏதோ தடுக்கிறது. இதைச் சிலர் மூட் அவுட் என்கிறார்கள். அல்லது மனவே சரியில்லை என்று சொல்கிறார்கள்.

மூட் அவுட் என்பது கொஞ்ச நேரம் இருக்கலாம், தொடரக் கூடாது. காரணம் மூட் அவுட்டாகி இருக்கும் நேரம் நீடிக்க நீடிக்க நாம் மேலும் சில சிக்கல்களில் சிக்கிக் கொள்ளப் போகிறோம் என்று பொருள்.

இந்த மூட் அவுட் பிரச்சினையிலிருந்து விடுபடச் சில வழிமுறைகள் உண்டு.

முதலாவது கொஞ்சம் தூங்கி எழுந்திருக்கலாம். நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு இது நல்லதொரு தற்காலிகத் தீர்வாகும். எழுந்ததும் புதுப்பிறவி பெற்றதைப் போல செயற்பட வேண்டும் என்கிற முடிவுடன் தூங்கப் போவது நல்லது. இல்லா விட்டால் எழுந்ததும் பழைய நிலைமையே தொடர்கதையாகிவிடும்.

சூழ்நிலையை மாற்றிக் கொள்வது, இடம் மாறுவது, பிடித்த விடயங்களில் இடுபடுவது ஆகியவை நல்ல மாற்று.

அடுத்த வழி நம் மூட் அவுட்டிற்குக் காரணமானவர்கள் யாரோ அவர்களை மீண்டும் சந்திப்பது. நீங்கள் அப்படிச் சொல்லி விட்டதால் எனக்கு மனவே சரியில்லை என்று விடயத்தை மெல்ல ஆரம்பித்தால் எதிர்பாராதவிதமாக அவர்களே நம்மைச் சமாதானம் செய்யக் கூடும். அடி கொடுத்தவர்களே ஒத்தடம் கொடுத்தால் அதற்குப் பலன் அதிகம்.

அவர்களைப் பார்க்க இயலவில்லை என்றாலோ, அவர்களைப் பார்க்க விரும்பவில்லை என்றாலோ பரவாயில்லை. ஆனால் அவர்கள் செய்த நல்ல உதவிகளையும் நல்ல வார்த்தைகளையும் நினைத்துக் கொள்ள வேண்டும். அப்போது தான் நினைப்பிலிருந்து விடுபட முடியும்.

நாம் நல்ல மன நிலையுடன் இருக்கும் போது நமக்கு மகிழ்ச்சி தரக் கூடிய நினைப்புகள் என்ன என்பதைப் பட்டியல் இட்டுக் கொள்ள வேண்டும். சிலரை நினைத்தாலே மனதில் ஈரம் சுரக்கும். சில சம்பவங்களை மீண்டும் நினைவுக்குக் கொண்டு வந்தாலே மனசு பஞ்சாகி மிதக்கும். வாழ்க்கையில் நமக்கென்று சில ஆறுதலான விடயங்கள் உள்ளன. அவற்றையெல்லாம் மூட் அவுட் நேரத்தில் நினைத்துக் கொள்ள வேண்டும், கண் முன் கொண்டு வர வேண்டும்.

வேறு வகையில் சொல்லப் போனால், கடிகாரச் சுற்றுப் போல் வலப்புறமாகச் சுற்றி அந்தப் பிரச்சினைப் புள்ளியிலிருந்து வெளிவரவும் தப்பிக்கவும் முயல வேண்டுமே தவிர உள்ளுக்குள் சுற்றிக் கொள்ளும் விமதாக மேலும் மேலும் மனத்தைச் சங்கடப்படுத்தும் விடயங்களை நினைத்துக் கொண்டு சீண்டப்பட்ட மரவட்டைப் பூச்சி மாதிரி சுருண்டு கொள்ளக் கூடாது.

**லேனா தமிழ்வாணன்**

# முதுகெலும்பு இருக்குமாயின் தனிவேட்பாளரை களமிறக்குக

## ஐ.தே.கவிற்கு சு.க. அமைச்சர் பைஸர் சவால்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கு சுயமாக தேர்தலை சந்திக்க எந்தத் தைரியமும் இல்லை. கட்சி வேட்பாளரை களமிறக்கி ஐக்கிய தேசியக் கட்சியால் ஒருபோதும் ஆட்சியைக் கைப்பற்ற முடியாது. தைரியம் இருக்குமாயின் அவர்கள் கட்சி வேட்பாளரை களமிறக்கி ஆட்சியினை கைப்பற்றிக் காட்டட்டும் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அமைச்சர் பைஸர் முஸ்தபா சவால் விடுத்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கட்சி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சியினர் இந்த அரசாங்கத்தில் இருந்துகொண்டு வெறும் வாய் வார்த்தைகளால் கதைகளைக் கூறிக்கொண்டுள்ளனர். எனினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இல்லாமல் அவர்களால் ஆட்சியில் அங்கம் வகிக்கவே முடியாது. அடுத்த தேர்தலில் அவர்களின் தனி அரசாங்கத்தை அமைக்கவுள்ளதாகவும் பொது வேட்பாளர் இல்லாமல் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரை வேட்பாளராக்கும் தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆனால் அவர்களினால் கட்சி வேட்பாளரைக் கொண்டு ஒருபோதும் ஆட்சியைக் கைப்பற்ற முடியாது.

அவ்வாறு முடிந்திருந்தால் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அவர்கள் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்க முயற்சித்திருக்கமாட்டார்கள். மேலும் கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவை களமிறக்க அவர் மீது இருந்த பாசமோ பற்றோ காரணம் அல்ல. அப்போதிருந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வர வேண்டும் என்ற நோக்கமே அதற்கான காரணமாகும். அதற்கான சரியான தெரிவாக மைத்திரிபால சிறிசேனவாக இருந்தமையினாலேயே அவரை பொது வேட்பாளராக்கினர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி என்ற அடிப்படையிலேயே போட்டி நிலவியது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் வெற்றி பெறுவாரா? அல்லது கட்சியின் செயலாளர் வெற்றிபெறுவாரா? என்பதே போட்டியாக இருந்தது. இதில் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தோளில் தொங்கிக்கொண்டு ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சியினர் இன்று தமது வீர வார்த்தைகளை வெளிப்படுத்தி வருகின்றமை எமக்கு வேடிக்கையாக உள்ளது.

கடந்த பொதுத் தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு பெரும்பான்மை ஆதரவு கிடைக்கவில்லை. ஒரு வேளை அவ்வாறு பெரும்பான்மை ஆதரவு கிடைத்திருந்தால் அவர்கள் தேசிய அரசாங்கத்தை கலைத்து தனி ஆட்சியை உருவாக்கியிருப்பார்கள். அவர்களின் சுயரூபம் வெளிப்பட்டிருக்கும்.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சுயமாக தேர்தலை சந்திக்க எந்தத் தைரியமும் இல்லை. கடந்த இரண்டு தேர்தல்களின் போதும் அவர்களினால் பொது வேட்பாளர் ஒருவரையே நம்பியிருக்க வேண்டிய நிலைமை இருந்தது. இனியும் அவ்வாறே அமையும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைகளுக்கு முதுகெலும்பு இருக்குமாயின் அவர்கள் தனி வேட்பாளரை களமிறக்கி ஆட்சியைக் கைப்பற்றட்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஈழத்துச் சிதம்பர புராணம்
## ஈழத்துச் சிதம்பர அநாதி முறைமையான பழைமை



விருத்தளாய்க் குமார பாலனாய் மேனி
விளங்கவந் தரிவையின் விதனம்
நிருத்தனே தீர்த்தாய் மற்றவள் வடிவை
நிமலையின் வடிவம் தாக்கி
எருத்தினி லேற்றி யிமையல ரேத்தச்
சிவபுர மெழுந்த வெம் பிரானே
திருத்திகழ் திண்ண புரமிசை யமர்ந்த
செல்வனே வாழ் வெமக் கருளே.



பொருள்: வயோதிகனாயும் இளமையுடையவனாயும் குழந்தையாயும் உமது திருமேனி விளங்க எழுந்தருளி வந்து கூத்தப்பெருமானே கௌரியின் துயரத்தைப் போக்கி போக்கியருளினீர். அந்தக் கௌரியின் உருவத்தை உமாதேவியாரின் திருவுருவமாக்கி உமது இடபத்தின் மீதிருத்தி தேவர்கள் துதிக்குமாறு சிவலோகத்திற் எழுந்தருளிச் சென்ற சிவபெருமானே அழகு விளங்கும் திருத்திண்ணபுரத்தில் எழுந்தருளியுள்ள திருவருட் செல்வனே அடியேங்களுக்கு மேலான சிவவாழ்வினை அருளுதல் வேண்டும்.

நவாலியூர்ப் புலவர் மணி சோ. இளமுருகனார்.

பக்தி நலம்தோய்ந்த பழுத்த புலமையைக் காட்டிச் சிறப்புறும் தெய்வீக மணம் நிறைந்த ஈழத்துச் சிதம்பர புராணம் நூலாசிரியரையும் அவர்களது துணைவியார் பண்டிதமணியையும் காரைநகர் சைவத் தொண்டரும் இனிய பண்புகளின் உறைவிமாவரும் ஆகிய க.சிவத்திரு க. வைத்தீசுவரக்குருக்களையும் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான அறங்காவலர்களான திரு.அ. ஆண்டிஐயா, திரு.து.முருகேசு ஐயா அவர்களையும் வாழ்த்தி வணங்கி, செந்தமிழ் சொக்கர் (மதுரை மீனாட்சி சமேத சொக்கர்) சேவடிகளைச் சிந்தித்து அன்பே சிவபெருமான் பொற்தில்லைக் கூத்தன் திருவடிக்கீழ் நிலைக்க ஓம் நமசிவாய.

**மாணிக்கவாசகர் மடாலயம்,**
**போசகர் க.கு.க. சிவபாலன்**

# கயிலாச யாத்திரை

## ஓர் அனுபவப் பகிர்வு 10

## பரமசாமி பஞ்சாட்சரம்

இவரை திருநாவுக்கரசு என்றும் அப்பர் என்றும் அழைப்பார்கள்.

திருநாவுக்கரசு நாயனார் இயற்றிய 4ஆம் திருமுறையில் 47 ஆவது பதிகத்திலும் 6ஆம் திருமுறையில் 55, 56, 57ஆம் பதிகங்களிலும் கயிலையைப் பற்றிப் பாடியுள்ளார்.

திருநாவுக்கரசு நாயனார் தனது 81ஆவது வயதில் திருக்கயிலாயத்திற்கு யாத்திரை மேற்கொண்டார். பாத யாத்திரையாகச் சென்றுகொண்டிருந்த போது மலை ஏற வேண்டிய கட்டாயம் வந்தது. மலையில் ஏறும் போது காயங்கள் பல வந்து நடக்க முடியாத நிலையிலும் மன வைராக்கியத்துடன் தவழ்ந்தும் உருண்டும் யாத்திரையைத் தொடர்ந்தார்.

திருநாவுக்கரசர் தனது இயலாத உடல் நிலையிலும் தளராத மனத்துடன் துன்பப்படுவதை உணர்ந்து பேரிரக்கங்கொண்ட சிவபெருமான் அவர் முன் தோன்றி அப்பரே, இப்படியும் ஒரு மன உறுதியா? கயிலை அடிவாரத்தில் வாழும் முனிவன் நான்! எனக்கே ஈசன் தரிசனம் கிடைப்பதில்லை! என்றார். அப்போது அப்பர்: "அப்பர் என்ற இந்த அடியேனின் பெயர் என் அப்பனை அல்லால் உமக்கு எப்படித் தெரியும்?" என்றார். சிவபெருமான்: "அப்பரே, நான் திரிகால ஞானி! ஈசனே எம்மை உம்மிடம் அனுப்பி வைத்தார்! இதோ, இந்தத் தூய ஏரியில் (மானசரோவர் ஏரி) மூழ்கி எழுந்தவுடன் அங்கு இறைவனைத் திருச்சபை சூழக் காண்பீர்கள்!" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

நாவுக்கரசர் அதன்படியே மானசரோவர் ஏரியில் நீராடி எழுந்து கயிலையிலே சிவனும் சக்தியும் வீற்றிருக்கும் காட்சியைக் கண்டு மகிழ்ந்தார். அதன் பின் அவர் தான் இருக்கும் இடத்தைப் பார்க்கும் போதுதான் திருவை ஆற்றிலே இருப்பதை அறிந்தார். அங்கு "கனகமா வயிர முந்து மாமணிக் கயிலை" என்று ஆரம்பிக்கும் தேவாரப் பதிகத்தைப் பாடியுள்ளார்.

சுந்தரமூர்த்தி நாயனார் ஏழாம் திருமுறையில் கயிலைப் பதிகத்தைப் பாடியுள்ளார்.

சுந்தரமூர்த்தி நாயனார் மக்கள் துயர் துடைக்க அரும்பெரும் அற்புதங்களைச் செய்து சைவத்தையும் தமிழையும் போற்றி வளர்த்தவர். மடந்தை மேல் மையல் கொண்டு வாழும் இந்த மானிடப் பிறவி வேண்டாம் என்று இறைவனை வணங்க, கயிலைநாதரும் அவரை அழைக்கத் திருவுளங் கொண்டார். தனது தோழரான சுந்தரரை அழைத்து வரும்படி திருவஞ்சைக் களத்துத் தேவர்களோடு ஒரு வெள்ளை யானையையும் அனுப்பி வைத்தார். வெள்ளை யானை சுந்தரரை வலம் வந்து அவரைத் தன்மீது ஏற்றிக் கொண்டு தேவர்கள் புடைசூழக் கயிலை நோக்கி சென்றது. கயிலை சென்ற சுந்தரமூர்த்தி நாயனார் நொடித்தான் மலைப் பதிகத்தைப் பாடினார்.



"தானெனை முன்படைத்தான் அதறிந்துதன் பொன்னடிக்கே நானென பாடல நந்தோ நாயினேனைப் பொருட் படுத்து வானெனைவந் தெதிர்கொள்ள மத்தயானை அருள்புரிந்து ஊனுயிர் வேறு செய்தான் நொடித் தான் மலை உத்தமனே" என்ற பதிகத்தைப் பாடி இறைவனடி சேர்ந்தார். பரவையாரும் சங்கிலியாரும் கயிலைநாதனின் அருளால் இறைவனடி சேர்ந்தார்கள்.

மாணிக்கவாசகர் சுவாமிகள் பாண்டிநாட்டில் திருவாதபுரத்தில் சம்புபாதாசிரியருக்கு புத்திரனாகப் பிறந்து வாதவூர் என்னும் நாமம் சூடப் பெற்றுக் கல்வியிலே மேன்மையுற்றுப் பாண்டிய நாட்டு அரச சபையிலே தலைமை அமைச்சராகப் பதவி வகித்து வந்தார். குதிரைகள் கொள்வனவிற்காக அரசன் கொடுத்த பணத்துடன் சென்ற வாதவூரர் திருப்பெரும் துறைக் கோவில் சிற்பவேலை கொண்ட திருப்பணிகளைச் செய்து அரசன் கொடுத்த பணத்தைச் செலவு செய்து விட்டார். குதிரையுடன் செல்ல வேண்டிய நாள் வந்ததும் வாதவூரர் சிவபெருமானை வேண்டித் தொழுதார்.

சிவபெருமான் நரிகளைக் குதிரைகளாக்கிச் சிவகணங்களைபாகர்களாக்கிக் கொண்டு வந்து அரசனிடம் குதிரைகளைக் கொடுத்து வாதவூரரைக் காப்பாற்றினார்.

பின்னர் உண்மையை அறிந்த பாண்டிய அரசன் வாதவூரரை வணங்கி அவரை அவர் விருப்பப்படி செல்ல அனுமதித்தான்.

(தொடரும்)

# நல்லிணக்க புரத்தில் வீடுகள் கையளிப்பு






(யாழ்ப்பாணம்)

நல்லிணக்கபுரம் வீடமைப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட வீடுகள் நேற்று பொதுமக்களிடம் கையளிககப்பட்டன.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கீரிமலைப்பகுதியில் அமைக்கப்பட்ட இவ் வீடுகளை இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மகேஸ் சேனாநாயக்க மற்றும் யாழ்.அரச அதிபர் நா.வேதநாயகம் ஆகியோரால் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன.

நல்லிணக்கபுர வீட்டுத் திட்டத்தின் முதற்கட்டமாக நூறுவீடுகள் ஏற்கனவே ஜனாதிபதியால் வழங்கப்பட்டிருந்த நிலையில் இன்று இரண்டாம் கட்டமாக 25 வீடுகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


இடம்பெயர்ந்து முகாம்களில் வாழ்ந்து வருகின்ற மக்களுக்காக மீள்குடியேற்ற அமைச்சின் நிதியில் ஒன்பது இலட்சம் ரூபா செலவில் இந்த வீடுகள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந் நிகழ்வில் பெருமளவிலான இராணுவத்தினர், அரச அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (இ-4)

# தந்தை செல்வாவின் புகைப்படக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் 130 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு தந்தை செல்வாவின் அரிய புகைப்படக் கண்காட்சி இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை தெல்லிப்பழை பார்மணியம் வீதியிலுள்ள தந்தை செல்வா இல்லத்தில் இடம்பெறும். (இ-10)

# ஹெரோயின் வில்லைகளுடன் நேபாள பிரஜை கைது



(கொழும்பு)

ஹெரோயின் வில்லைகளை சூட்சுமமான முறையில் வயிற்றில் விழுங்கிக் கொண்டு வந்த நேபாள நாட்டை சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.


நேற்றுக்காலை 8.30 மணியளவில் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்தே குறித்த நபர் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேபாளத்தில் இருந்து பாகிஸ்தானுக்கும் பின்னர் டுபாய்க்கும் பயணித்த பின்னரே இலங்கையை வந்தடைந்துள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட நேபாள நாட்டை சேர்ந்த நபர் நீர் கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் இதுவரை 8 ஹெரோயின் வில்லைகள் அவரின் வயிற்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# மெரினி டி லிவேரா பழிவாங்கப்படுகிறார்

## விமலின் கட்சி குற்றச்சாட்டு



(கொழும்பு)

சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் மெரினி டி லிவேரா அரசாங்கத்தால் பழிவாங்கப்படுவதாக தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய ஏற்பாட்டாளர் ஜயந்த சமரவீர குற்றம் சாட்டினார்.

பிட்டகோட்டேயில் அமைந்துள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குற்றம் சாட்டினார். (இ)

# பொற்பதி அறிவாலய ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

பொற்பதி அறிவாலயத்தின் 5ஆம் ஆண்டு நிறைவு விழாவும் சரஸ்வதி முன்பள்ளியின் 33 ஆவது காலையோர் விழாவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியிலுள்ள பொற்பதி அறிவாலயத்தில் சன்.சோமதேவன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மற்றும் கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினர்களாக பலபல சட்டத்தரணி சி.ஞானமனோரஜினி, யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மாணிக்கராஜா, யாழ்.மாநகர சபை சுகாதார வைத்தி அதிகாரி வைத்திய கலாநிதி பி.ஜெசிதரன், வினோ நகைப்பூங்கா உரிமையாளர் எஸ்.மகிந்தன், ராஜா கிறீம் ஹவுஸ் உரிமையாளர் எஸ்.சண்முகநாதன், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் சு.விஜயகுமார் மற்றும் ஜே/ 126 பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.கார்த்திகா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10)

# மாளிகாவத்தை நிப்பு படுகொலை இப்ராஹீம் எடுத்த அழைப்பினூடாக பல்வேறு தகவல்கள் அம்பலம்

(கொழும்பு)

மாளிகாவத்தை - அல்லாமா இக்பால் மாவத்தையில் சுட்டுக்கொல்லப்பட்ட 31 வயதுடைய நிப்பு என அறியப்படும் சாவுல் ஹமீட் மொஹம்மட் நிப்ராஸின் கொலை தொடர்பில் பல்வேறு தகவல்கள் விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அதன்படி இந்தக் கொலையானது டுபாயில் இருந்து நெறிப்படுத்தப்பட்டுள்ளமைக்கான தகவல்களை விசாரணையாளர்கள் வெளிப்படுத்திக் கொண்டுள்ளனர்.

கொலை செய்யப்பட்ட நிப்புவுக்கு இறுதியாக டுபாயில் இருந்து வந்துள்ள தொலைத் தொடர்பு இலக்கம் ஊடாக முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கு அமைய இந்த தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அச்சுறுத்தல்கள் காரணமாக நிப்பு மாளிகாவத்தையை விட்டு வெளியேறி வரக்காப்பொல பகுதியில் இருந்தவாறு அவ்வப்போது மாளிகாவத்தைக்கு வந்து போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கும் பொலிஸார், கொலை இடம்பெற்ற தினம் டுபாயில் இருந்து பாதாள உலக தலைவர்களில் ஒருவரான கஞ்சிபான இப்ராஹீம் என்பவரே நிப்புவுக்கு அழைப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவரின் அழைப்பின் பிரகாரமே ஆட்டோவில் வரக்காப்பொலயில் இருந்து அவர் மாளிகாவத்தைக்கு வந்துள்ளமையும் தெரியவந்துள்ளது.

இந் நிலையிலேயே மாளிகாவத்தையில் வைத்து அவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். கஞ்சிபான இப்ராஹீம் டுபாயில் தற்போதுள்ள நிலையில், டுபாயில் இருந்து இத்தாலி சென்றுள்ள மாகந்துரே மதுஷின் நெருங்கிய சகா என பொலிஸார் கூறும் நிலையில், வாழைத்தோட்டம் பகுதியில் வர்த்தகர் நிஸ்வானின் கொலைக்கும், நிப்புவின் கொலைக்கும் தொடர்புகள் இருக்க வேண்டும் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இந் நிலையில் அது தொடர்பில் மேலதிக விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த விடயம் குறித்து கொழும்பு மத்தி பதில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பாலித்த பணாமல் தென்பியவின் கீழும் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் பொலிஸ் அத்தியட்சகர் நிசாந்த சொய்சாவின் கீழ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாளிகாவத்தை அல்லாமா இக்பால் மாவத்தையில் கடந்த செவ்வாயன்று இரவு 8.30 மணியளவில் இந்த துப்பாக்கிப் பிரயோகம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நிப்பு எனப்படும் குறித்த இளைஞர் துப்பாக்கிச் சூடு இடம்பெற்ற பகுதிக்கு ஆட்டோவிலேயே வந்துள்ள நிலையில், அவர் திட்டமிட்டு அவ்விடத்துக்கு வரவழைக்கப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டிருக்க வேண்டும் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

அதன்படி முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணைகளில் அவ்விடயம் உண்மையென கண்டறியப்பட்டது. நிப்புவுடன் ஆட்டோவில் சிராஜ் எனும் மற்றொரு இளைஞரும் வந்துள்ள நிலையில் துப்பாக்கிச் சூட்டின் பின்னர் அவர் சிறு காயத்துடன் தப்பியிருந்தார். அவரை தற்போது கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு தனது கட்டுப்பாட்டில் எடுத்து விசாரித்துள்ளது.

இவ்வாறு கொல்லப்பட்ட நிப்பு, இற்றைக்கு 5 வருடங்களுக்கு முன்னர் வெள்ளை வானில் நுவரெலியாவில் வைத்து கடத்தப்பட்ட மஞ்சன் அக்ரம் எனப்படும் பாதாள உலக உறுப்பினரின் மனைவியின் சகோதரன் என பொலிஸார் தெரிவித்தனர். இந் நிலையிலேயே சந்தேக நபர்களைக் கைதுசெய்ய விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (இ)

# பலவீனமடையும் நாட்டின் நிர்வாகம்

## கோத்தபாய சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நாட்டின் நிர்வாகம் பலவீனமடைந்து செல்வதை காண முடிவதாக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குளியாப்பிட்டி பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

திறமையானவர்கள் நீக்கப்பட்டுள்ளனர். தீர்மானம் எடுக்கும் பலம் இழக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக நாட்டின் நிர்வாகம் பலவீனம் அடைந்து செல்கின்றது.

பலமான நாடுகளின் அதிகாரப் போட்டியில் நாம் மத்தியஸ்தம் வகிக்க முடியாது. அவ்வாறான நிலையில், நாட்டை முன்னேற்ற முடியாது.

தற்போது இலங்கையும் அது போன்ற நிலையிலேயே இருக்கின்றது.

இதனிடையே, கடந்த அரசாங்கத்தில் நாம் சீனாவிலிருந்து உதவிகளை பெற்றுக் கொண்டோம்.

எனினும், எந்த வகையிலும், எமது இறைமையை விட்டுக் கொடுக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# மகிந்தவின் செயலாளர் குமாரசிறி ஏன் பிரதிப் பொலிஸ்மா அதிபரை சந்தித்தார்?

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாரா ளும ன்ற விவகார செயலா ளர் குமாரசிறி ஹெட்டிகே, சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்கிர மதுங்கவின் படுகொலை தொடர்பிலான விவகாரத்தில் விளக் கமறியலில் உள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரசன்ன நாணயக்காரவை உரிய முறைமைகளுக்கு அப்பால் சென்று சந்தித்துள்ளமையானது, அங்கு தகவல் பரிமாற்றம் ஒன்று இடம் பெறுகிறது அல்லது சந்தேக நபருக்கு ஏதோ அழுத்தம் பிரயோகிப்படுகிறது என தாம் சந்தேகிப்பதாக குற்றப் புலனாய்வுப் பிரிவு நேற்று முன்தினம் கல்கிஸை நீதவானுக்கு அறிவித்தது.

லசந்த விக்கிரமதுங்க படுகொலை விவகாரம் தொடர்பிலான வழக்கு விசாரணைகள் நேற்று முன்தினம் கல்கிஸை பிரதான நீதவான் மொஹம்மட் மிஹால் முன்னிலையில் விசாரணைக்கு வந்த போது, குற்றப் புலனாய்வு பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் பீ.எஸ். திஸேரா, பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வா, பொலிஸ் பரிசோதகர் சுதத் குமாரா ஆகியோரைக் கொண்ட சிறப்புக் குழு இதனை நீதவானுக்கு அறிவித்தது.

நேற்று முன்தினம் வழக்கு விசாரணைகள் ஆரம்பமான போது, இவ் விவகாரத்தில் பிணையில் உள்ள இராணுவ புலனாய்வு சார்ஜன்ட் மேஜர் உதலாகம மன்றில் ஆஜராகியிருந்தார். அத்துடன் சிறை அதிகாரிகள் ஊடாக விளக்கமறியலில் உள்ள 3 ஆம்சந்தேக நபரான முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரசன்ன நாணயக்கார ஆஜர் செய்யப்பட்டார். 2 ஆம்சந்தேக நபரான பொலிஸ் பரிசோதகர் திஸ்ஸ சுகந்த பால, மேல் நீதிமன்றில் வழக்கில் ஆஜராகியிருந்ததால் நேற்று முன்தினம் மன்றில் ஆஜர் செய்யப்படவில்லை.

இந் நிலையில் மன்றில் நேற்று முன்தினம் கருத்துக்களை முன்வைத்த குற்றப் புலனாய்வுப் பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் பி.எஸ். திஸேரா, லசந்த விக்கிரமதுங்க விவகாரத்தில் இராணுவத்தின் 112 ஆவது கட்டளைப் பிரிவில் கடமையாற்றிய 18 வீரர்களிடம் நாம் விசாரணை செய்தோம். அத்துடன் கல்கிஸை பொலிஸ் பதிவுப் புத்தகத்தில் உள்ள வாக்குமூலங்கள் மாற்றப்பட்டு சாட்சியங்கள் அழிக்கப்பட்டமை தொடர்பில் பொலிஸ் கான்ஸ்டபிளான தயாசிறி என்பவரிடம் விசாரணை செய்தோம். அவர் தான் உண்மை வாக்கு மூலத்தை எழுதியவர். அவரிடம் பொலிஸ் பதிவுப் புத்தகத்தையும், கிழித்து நீக்கப்பட்ட உண்மை வாக்கு மூலங்கள் அடங்கிய பக்கங்களையும் காட்டி விசாரணை செய்த போது அவர் அவற்றை அடையாளம்கண்டு வாக்கு மூலம் அளித்தார்.

அவர் இட்ட பதிவுகள் எதுவும் தற்போது பொலிஸ் பதிவுப் புத்தகத்தில் உள்ள மாற்றம் செய்யப்பட்ட பதிவுகளில் இல்லை என்பதை அவர் உறுதி செய்தார்.

இதனைவிட லசந்த விவகாரம் தொடர்பில் விசாரணை செய்த மிரிஹான விஷேட விசாரணைப் பிரிவின் அப்போதைய பொறுப்பதிகரியாக இருந்த பிரதான பொலிஸ் பரிசோதகர் அமரபந்துவிடம் முன்னெடுத்த விசாரணைகளில், லசந்தவின் களக் குறிப்புப் புத்தகம் 2009.01.16 அன்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரசன்ன நாணயக்காரவிடம் ஒப்படைக்கப்பட்டமையும், அதன்போது அங்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஹேமந்த அதிகாரி, பொலிஸ் பரிசோதகர் சுகந்தபால ஆகியோர் இருந்தமையும் உறுதியாகியுள்ளது.

இதனைவிட தற்போது இவ்விவகாரத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரசன்ன நாணயக்காரவுக்கும், பொலிஸ் பரிசோதகர் சுகந்தபாலவுக்கும் சிறையில் விஷேட பாதுகாப்பளிக்க நாம் கோரியிருந்தோம். ஏனெனில் கடந்த 2011.10.15 ஆம் திகதி லசந்த விவகாரத்தில் கைதாகி சிறையில் இருந்த சந்தேக நபரான பிச்சை ஜேசுதாசன் மர்மமாக உயிரிழந்தார்.

இந்த பின்ன ணியில் பாதுகாப்பை நாம் பலப்படுத்த கோரினோம்.

கடந்த 26 ஆம் திகதி பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா, பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரசன்ன நாணயக்காரவிடம் விசாரணை நடத்த சிறைக்கு சென்றிருந்தார். அப்போது அங்கு வந்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் பாராளும ன்ற விவகார செயலாளர் குமாரசிறி ஹெட்டிகே எந்த உரிய முன் அறிவித்தலும் இன்றி பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரசன்னவை சந்தித்துள்ளார்.

சிறையில் துமிந்த சில்வாவை சந்திப்பதற்காக அனுமதி பெற்று சிறைக்குள் வந்துள்ள அவர் இவ்வாறு பிரசன்ன நாணயக்காரவை சந்தித்தமையானது, சிறையில் இருந்து தகவல் பரிமாற்றம் இடம்பெறுகின்றதா அல்லது சந்தேக நபருக்கு அழுத்தங்கள் ஏதும் பிரயோகிப்படுகின்றனவா என எம்மிடையே சந்தேகங்களை தோற்றுவித்துள்ளது. இது தொடர்பில் அவதானம் தேவைப்படுகின்றது என்றார்.

இந் நிலையில் லசந்த விவகாரத்தில் ஏற்கனவே வெளிநாட்டு பயணத் தடை விதிக்கப்பட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஹேமந்த அதிகாரியின் பயணத் தடை அவரது சட்டத்தரணி துலிந்து சரத் சந்ரவின் கோரிக்கைக்கு அமைய நீக்கப்பட்டது.

அதன்படி விளக்கமறியலில் உள்ள இரு சந்தேக நபர்களின் விளக்கமறியலும் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

## மரண அறிவித்தல்

### அமரர் திருமதி. மகேஸ்வரி விவேகானந்தன்



பழைய புகையிரத வீதி, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் நவாலி வடக்கு மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி விவேகானந்தன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை (29.03.2018) இயற்கை எய்திவிட்டார்.

அன்னார் நவாலி வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற விவேகானந்தனின் (Agricola) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதியினரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், நிறைஞ்சலா, நிறைஞ்சன் (பணிப்பாளர் Euroville; ஆலோசகர் Bartleet Religare Securities (Pvt) Ltd) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நிற்குணானந்தன் (Retired Director of Customs,Consultant - Ministry of Finance (Department of Trade & Investment Policy), குரைஜனி (சிரேஷ்ட விரிவுரையாளர், தாவர வியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், லக்ஷ்மினி, மயூரேஷ், தனுரேஷ் (யாழ்.இந்து மாணவர்கள்) ஆகியோரின் அருமை பேர்த்தியும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, செல்வரட்ணம்,புவனேஸ்வரி மற்றும் கனகேஸ்வரி (Canada) ஆகியோரின் அன்பு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.04.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இல.46, செட்டித்தெரு, நல்லூரில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வி.நிறைஞ்சன்
077 304 3206

(3456)

தகவல்:
குடும்பத்தினர்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1373

Search for people, places and things

Nagendram Home

### கபில்

ஒரு முட்டாள் தன்னுடன் வாழமுடியாமல் விட்டுப் போனவர்களை நினைத்து வருத்தப்படுவான். ஆனால்



ஒரு புத்திசாலி,தன்னை விட்டுப் போனவர்கள் வருத்தப்படும் அளவுக்கு வாழ்ந்து காட்டுவான்...

### நிசா

சந்தேகம் உன்னை நெருங்கி வருகின்றதென்றால் புரிந்து கொள்...



சந்தோஷம் உன்னை விட்டு வெகுதூரம் சென்றுவிட்டது என்று...!

### சதீஷ்

வெற்றி தோல்வி என்பன முடிவல்ல. வெற்றி என்பது ஆரம்பம், தோல்வி என்பது அனுபவம்



அதிக அனுபவம் உள்ளவர்களே சிறப்பான வெற்றியைத் தழுவுகின்றனர்...!

### நிரோஷ்

வாழ்க்கையில் பிரச்சினைகளாக உள்ளதே என்று எண்ணும் போது...



உன்னை விட கஷ்டப்படுபவரை எண்ணிப்பார் பிரச்சினை நிம்மதியாகக் கடந்து போய்விடும்

### சந்திரன்

உன் மனைவியை குழந்தை போல் பார்த்துக்கொள், ஏனெனில்!



உன் கடைசிக் காலத்தில் உன்னைத் தாயைப் போல் பார்த்துக்கொள்பவள் அவள்தான்...!

### கமல்

முப்பது ஆண்டுகளின் சேமிப்பில் நீ கட்டிய உன் மாளிகையில்..



மூன்று நாட்கள்கூட உன் பிணத்தை வைக்க முடியாது! நினைவில் வைத்துக்கொள்...!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பிரதமர் பதவியை இராஜினாமா செய்வதா? ரணிலே தீர்மானித்து முடிவெடுக்கவேண்டும்

## அமைச்சர் சம்பிக்க நழுவல்



(கொழும்பு)

"பிரதமர் ரணில் விக்கிரம சிங்க மீதான நம்பிக்கை யில்லாப் பிரேரணை விவா திக்கப்பட முன்னர், அவர் பதவி விலகவேண்டுமா? இல்லையா? என்பதற்கப்பால் இப்போது உடனடி புத்துண ர்ச்சி நடவடிக்கையொன்று தேவை.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மக்கள் அரசுக்கு எதிராக நம்பிக்கை யில்லாப் பிரேரணை முன் வைத்துவிட்டனர். அதை மறந்துவிடக்கூடாது.

இந்த யதார்த்தத்தை மற ந்து செயற்பட்டால் ஐக்கிய தேசியக் கட்சி அரசியல் டைனோசராகிவிடும். அதை எவராலும் தடுக்கமுடியாது. என கொழும்பு ஊடகம் ஒன் றிடம் மேல் மாகாண மற்றும் பெருநகர அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க கருத்துத் தெரிவித்துள்ளார்.

"பிரதமர் பதவியை இராஜி னாமா செய்வதா? இல் லையா? என்பதை ரணிலே தீர்மானிக்க வேண்டும்" என் றும் அவர் சுட்டிக்காட்டியுள் ளார்.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்க பிரதமர் பதவியிலிரு ந்து விலகவேண்டுமென அமைச்சர்கள் மட்ட சந்திப் பொன்றில் நீங்கள் கூறியுள் ளீர்களே? அது உண்மை தானா? என்று குறித்த கொழு ம்பு ஊடகம் கேட்டபோதே சம்பிக்க மேற்கண்டவாறு தெரி வித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பிரதமர் பதவி விலக வேண்டும் என்று நான் கூற வில்லை. பிரதமர் பதவியை இராஜினாமா செய்வதா? இல் லையா? என்பதை ரணிலே தீர்மானிக்கவேண்டும். அதற்கு முன்னர் உடனடியாக சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்.

அது எப்படியான மாற்றங் கள் என்பதை ஐக்கிய தேசி யக் கட்சி தீர்மானிக்கவேண் டும். கடந்த உள்ளூராட்சிசபைத் தேர்தலில் மக்கள் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைத்து விட்டனர்.

அடுத்த மாகாண சபைத் தேர்தலுக்குள் உரிய நடவடி க்கை இல்லையேல் அதன் பின் பேரழிவொன்றே காத் திருக்கிறது. இப்போதைய நிலைமைக்கு ஏற்றவாறு மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்.

பிரதமருக்கு எதிரான நம் பிக்கையில்லாப் பிரேரணை வெற்றிபெற்றாலும் தோல்வி யடைந்தாலும் சில மாற்றங் களை செய்யவே வேண்டும்.

இதற்காகவே நான் உட னடியாக செய்யவேண்டிய மாற்றங்கள் என்ன என்பது பற்றி அமைச்சரவைக்கு ஒரு யோசனையை முன்வைத் துள்ளேன்.

பக்கங்கள் அடங்கிய அந்த யோசனையை ஆராய்ந்து அமுல்படுத்த விசேட தெரிவுக் குழுவொன்றும் அமைக் கப்படவுள்ளது.

இப்போது ஐக்கிய தேசியக் கட்சி செயற்படாவிட்டால் அது அரசியலில் டைனோசராகி விடும். அதன் எச்சங்களை ஒரு காலத்தில் தேடிக்கொண் டிருக்க வேண்டியிருக்கும்" என்று அவர் மேலும் தெரி வித்தார். (இ)

# சுகாதாரத்திற்கு முரண் உணவகத்திற்கு சீல்

(கரணவாய்)

சுகாதாரத்திற்கு முரணாக இயங்கிய உணவகம் ஒன்றி ற்கு 15000 ரூபா தண்டப் பணம் விதித்த நீதவான் அவ்வுணவகத்தை சீல் வைத்து மூடுமாறும் உத்தர விட்டுள்ளார்.

புலோலி சுகாதாரப் பரி சோதகரினால் தாக்கல் செய் யப்பட்ட வழக்கு கடந்த செவ் வாய்க்கிழமை 27.03.2018 எடுத்துக் கொள்ளப்பட்ட போது அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தண்டம் விதித்த நீதவான் சீல்வைக் குமாறு உத்தரவிட்டார்.

மேலும் அன்றையதினம் பருத்தித்துறை சுகாதார பரி சோதகரால் ஆறு வர்த்தக நிலை யங்களுக்கு எதிராக காலா வதியான உணவு விற்பனை செய்தமை, சுகாதார விதிமுறை களை மீறியமை தொடர்பில் தாக் கல் செய்த போது மொத்த மாக 45000 ரூபா தண் டப் பணம் விதிக்கப்பட் டது. (இ-60)

# இறைச்சி விற்போருக்கு மருத்துவச் சான்றிதழ்

(கரணவாய்)

இறைச்சிக்கடைகளில்வியா பாரம் மேற்கொள்வோர் மற் றும் இறைச்சி வெட்டுவோர் இனிவரும் காலங்களில் மருத் துவ சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் என பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி எஸ். சுதோஸ்குமார் அறி வித்துள்ளார்.

கரவெட்டி சுகாதார வைத் தியஅதிகாரி பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் உள்ள இறைச்சி விற்பனை நிலையங்களில் ஒவ்வொரு நாளைக்கு ஒவ் வொருவர் நிற்பதாகவும் சில இடங்களில் தொற்று நோய்க் குரியவர்கள் நிற்பதாகவும் தெரிய வந்ததையடுத்து இந் நடைமுறை கொண்டு வரப் படுகிறது. இறைச்சி விற் பனை செய்வோர் மற்றும் இறைச்சி வெட்டுவோர் கட் டாயம் மருத்துவச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (இ-60)

# ஐ.தே.கவில் யாரும் எதிர்பாராத மாற்றங்கள்

## அமைச்சர் ஹாசிம் தகவல்



(கொழும்பு)

ஏப்ரல் மாதம் யாரும் எதிர் பாராத மாற்றம் ஒன்றை ஐக் கிய தேசியக் கட்சியில் மேற் கொள்ளப்பட உள்ளதாக அதன் பொதுச்செயலாளர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியில் மறுசீர மைப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க கட்சியினர் தயா ராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத் தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், இவ்வாறு தெரிவித்தார்.

"பிரதமர் ரணில் விக் கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேர ணையை தாம் ஒரு கட்சியாக இருந்து முகம் கொடுக்கவுள் ளோம்.

இந்நிலையில் ஏப்ரல்மாதம் யாரும் எதிர்பாராத மாற்றம் ஒன்றை ஐக்கிய தேசியக் கட்சி யில் மேற்கொள்ளவுள்ளதாக" அவர் மேலும் தெரிவித் துள்ளார். (இ-7)

# அதிபருக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

யாழ். சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலய அதிபரும் காலையடி மறுமல ர்ச்சி மன்றத்தின் முன்னாள் தலைவருமான சு. திருக் கேஸ்வரனுக்கான அஞ்சலி நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கி ழமை பி.ப.4 மணியளவில் காலையடி, பண்டத்தரிப்பு என்ற முகவரியில் அமை ந்துள்ள மறுமலர்ச்சி மன்றத் தின் தியாகராசா மகேந் திரன் குடும்ப ஞாபகார்த்த உள்ளரங்கில் இடம்பெ றும்.

தென்மராட்சி வலயக் கல் விப் பணிப்பாளரும், மறுமல ர்ச்சி மன்றத்தின் தலைவரு மான சு. சுந்தரசிவத்தின் தலைமையில் இடம்பெற வுள்ள இவ் அஞ்சலி நிகழ் வில் சிறப்புரையை வலிகா மம் வலயக் கல்விப் பணிப்பா ளர் எஸ். சந்திரராஜா ஆற்ற வுள்ளார்.

மேலும் இந் நிகழ் வில் நினைவில் வாழும் திருக் கேஸ்வரன் நூல் வெளி யீடும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-ப)

# ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரில்லை

## ஐ.தே.க. செயற்குழு கூட்டத்தில் வலியுறுத்து

(கொழும்பு)

நம்பிக்கையில்லா பிரே ரணையை தோற்கடித்த பின்னர் கட்சியில் மறுசீரமை ப்பு நடவடிக்கைகள் கட்டாயம் செய்யப்பட வேண்டும் இல்லை யேல் அரசியல் ரீதியாக தீர்க்கமான முடிவினை எடுக்க நேரிடும் என ஐக்கிய தேசியக் கட்சியின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் செயற்குழு கூட்டத்தில் பிரதமரிடம் எடுத் துரைத்துள்ளனர்.

அத்துடன் அடுத்த ஜனாதி பதி தேர்தலின் போது பொது வேட்பாளர்களுக்கு ஆதரவு வழங்கக்கூடாது என்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஒருவ ரையே வேட்பாளராக களமிற க்க வேண்டும் என்றும் பாரா ளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தலைமையில் நேற்று முன்தினம் ஐக்கிய தேசியக் கட்சியின்செயற்குழுக்கூட்டம்கட்சி யின் தலைமையகமான சிறி கொத்தாவில் நடைபெற்றது.

இதன்போது தானும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர்களும் இவ்வாறு கட்சியின் தலைவ ருக்கு எச்சரிக்கை விடுத்த தாக இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க ஊடகங்க ளுக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நம்பிக்கையில்லா பிரே ரணையை தோற்கடிக்கும் யோசனைக்கு ஐக்கிய தேசி யக் கட்சியின் செயற்குழு பூரண அங்கீகாரம் வழங்கி யது. நம்பிக்கையில்லா பிரே ரணையை தோற்கடித்த பின் னர் கட்சியில் மறுசீரமைப்பு செய்வதற்கு தீர்மானித்தோம்.

நம்பிக்கையில்லாப் பிரே ரணை தோற்கடித்த பின்னர் ஏப்ரல் மாதம் 5,6,7 ஆம் திகதிகளில் மறுசீரமைப்பு குறித்து கலந்துரையாடப் படும். அதன் பின்னர் பூரண மறுசீரமைப்பு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

எவ்வாறாயினும் நம்பிக் கையில்லா பிரேரணைக்கு பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி யில் மறுசீரமைப்பு இல்லா விட்டால் அரசியல் ரீதியாக தீர்க்கமான முடிவினை எடுப்போம் என நானும் எமது கட்சியினர் பலரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எடுத்துரைத்தோம்.

அத்துடன் அடுத்த ஜனாதி பதி தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக வேட் பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும். இனி மேலும் பொதுவேட்பாளர்களை கள மிறக்குவது எமது கட்சிக்கு நல்லதல்ல. ஆகவே பொது வேட்பாளர்களுக்கு இனி மேல்ஆதரவு வழங்கக்கூடாது என அனைவரும் கோரி னோம். எத்தகையவராக இருந்தாலும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ஒருவ ரையே ஜனாதிபதி தேர்தலில் களமிறக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# சடலத்தைப் பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

ஏ-9 வீதியின் மிருசுவில் ஐயன்கோவிலடிப் பகுதியி லிருந்து கொடிகாமப் பிரிவு பொலிஸாரால் கொண்டு வரப்பட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்ட ஆணொருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையின் சத்திரசிகிச்சை அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் 24.03.2018 ஆம்திகதி காலை 6.30 மணியளவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை யளிக்கப்பட்டு வந்த நிலை யில் 28.03.2018 ஆம்திகதி மரணமடைந்துள்ளார்.

எனினும் இறந்தவரின் சடலத்தினை இதுவரை உற வினர்கள் எவரும் வந்து பொறுப்பேற்கவில்லை. இவர் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக் கப் படும் போது ஓரளவு சுதைத்த தாகவும் தனது பெயர் கிறி தரன் எனவும் வயது 60 என வும் குறிப்பிட்டுள்ளார். அவ் வேளையில் பெரியபெட்டி போட்ட நீலக்கோடு கொண்ட சாரமும் நீலக்கோடு போட்ட வெள்ளை சேட்டும் அணிந்தி ருந்தார். அத்துடன் ஓரளவு வளர்ந்த தாடி மீசையுடன் இருந்ததாகவும் அறிய முடி கின்றது.

எனவேஇவரதுசடலத்தினை உரியவர்கள் வந்து பொறுப் பேற்குமாறு யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப் பாளர் கேட்டுக்கொள்கிறார். (இ)

# காலாவதியான உணவுப் பண்டங்கள் விற்பனை

## மூன்று வர்த்தக நிலையங்களுக்கு 5ஆயிரம் ரூபா தண்டப்பணம்

(கரணவாய்)

காலாவதியான உணவுப் பண்டங்களை விற்பனை செய்த மூன்று வர்த்தக நிலை யங்களுக்கு தலா 5000 ரூபா தண்டம் விதித்து பருத்தித் துறை நீதவான் திருமதி நளினி சுபாகரன் உத்தரவிட்டார்.

கரவெட்டி சுகாதாரப் பகுதி யினரால் நெல்லியடி நகரில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது இனம் காணப்பட்ட மூன்று வர்த்தகநிலை யங்களிற்கு எதிராக கடந்த திங் கட்கிழமை பருத்தித் துறை நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட போதே அவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 5000 ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது. (இ-60)

# தனித்துவமுடைய தேசத்தின் மக்களாக தமிழ் மக்கள் கருதப்பட வேண்டியவர்கள்

## வடமாகாண முதலமைச்சர் சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

நாம் தனித்துவமுடைய ஒரு சமூகத்தின் மக்கள் என்ற வகையில் இந்த தேசத்தின் மக்களாகக் கருதப்பட வேண்டியவர்கள் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு மாகாண சுற்றுலாத்துறை ஒன்றிய அங்குரார்ப்பணம் கடந்த 28 ஆம் திகதி யாழ்.கிறீன் கிறாஸ் ஹோட்டலில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இவ்வாறான ஒன்றியம் ஒன்றை அமைப்பதன் மூலம், சுற்றுலா தொடர்புடைய நடவடிக்கைகளில் புதியதொரு வியாபாரப் போக்கினை மேம்படுத்தவும், இருதரப்பினரும் பரஸ்பரம் நன்மைகளைப் பெறக்கூடிய வகையில் தொடர்புகளை வலுப்படுத்துவதை உறுதிப்படுத்தவும் முடியும்.

கனடா உலகப்பல்கலைக் கழக சேவை மையத்தின் பங்குபற்றுதலுடன் வடமாகாண சபையும் இதனுடன் ஒத்துழைக்கக் கூடிய சந்தர்ப்பங்களும் உண்டு.

வடமாகாணத்தின் சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு உங்களுடைய வெளிப்பாடுகளும் உதவியாக இருக்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

வடமாகாணத்தில் வாழும் நாம் (கிழக்கையும் கூட இதில் இணைக்கலாம்) சுற்றுலாத்துறையைப் பொறுத்த வரையில், எமது தனித்துவத்தைப் பேண விரும்புகின்றோம். இலங்கையின் கலாசார விழுமியங்களுக்கு வடகிழக்கில் வாழும் மக்கள், ஒரு தனித்துவமான பங்களிப்பை வழங்கி வருபவர்களாக இருக்கிறார்கள்.

எமக்கென்று தனியான ஒரு மொழி, வேறான மதங்கள், கலாசாரம், புவியியல், காலநிலை, என்பவற்றில் மாறுபாடு. ஏன்? நிலப்பகுதி மண்ணியலிலும் கூட மாறுபாடான நிலைகளே காணப்படுகிறது. எனவே எமது தனித்துவத்தை மதித்து அங்கீகரிக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம்.

அண்மையில் மத்திய அரசின் நிதியுதவியுடன் எமது வடமாகாண சபையினால் அமைக்கப்பட்ட உணவகம் ஒன்றிற்கு "ஹெல போஜன்" என பெயரிட மத்திய அரசு விரும்பியது.

"ஹெல" என்ற சொல் ஈழம் என்ற தமிழ் சொல்லின் பாளி மொழி வடிவம் ஆகும். எனவே நான் அந்த உணவகத்தை ஈழ உணவகம்என்றோ அல்லது வடபகுதியெங்கும் அமைக்கப்பட்டு வரும் "அம்மாச்சி உணவகம்டு" என்பதன் தொடர்ச்சியாக இப்புதிய உணவகத்தையும் "அம்மாச்சி உணவகம்டு" என்ற பெயரிலேயே அமைக்க வேண்டும் எனத் தெரிவித்திருந்தேன். ஆனால் அரசாங்கம் அதற்கு மறுப்புத்தெரிவித்து எந்தப் பெயரையும் சூட்டாமலே அந்த உணவகத்தை திறப்பதற்குரிய அனுமதியைக் கொடுத்துள்ளது.

எல்லாவிதமான மத்திய அரசாங்கத்தின் செயற்பாடுகளிலும் தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்கும் கட்டுப்பாடுகளை விதிப்பதுமான முனைப்புத் தன்மை காணப்படுவதை இது சுட்டி நிற்கிறது. இது எமக்கு ஒரு பாடமாகும். நாம் தனித்துவமுடைய ஒரு சமூகத்தின் மக்கள் என்ற வகையில் இந்த தேசத்தின் மக்களாக கருதப்பட வேண்டியவர்கள். நாம் எவ்வாறு வேடுவ சமூகத்திற்கு ஒரு தனி இடம் கொடுத்திருக்கிறோமோ? அவ்வாறான வகையில் நாமும் எமது தனித்துவம் கருதி மதிக்கப்பட வேண்டும்.

பொது சர்வதேச முறைகளில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்யும் அதே நேரத்தில் எமது தனித்துவங்களையும்பேணக்கூடிய வகையில் அவற்றைப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இப்போது வடமாகாண சுற்றுலா ஒன்றியத்தின் விடயத்திற்கு வருவோமாயின் வடமாகாணத்தின் சுற்றுலாத் துறையில் அக்கறையுடையவர்களை ஒரே கூரையின் கீழ் கொண்டுவர எடுக்கப்படும் முயற்சிகள் வரவேற்கத் தக்கது.

பிளவுகள் வருவது தவிர்க்கப்பட வேண்டும். விருந்தோம்பலையும் சுற்றுலாத்துறையையும் ஊக்குவிக்கும் உங்கள் நோக்கம் எமது வடமாகாண சபையின் வேலைக்கு ஒரு பலமாக இருக்கும். அதனை நாம் வரவேற்கிறோம்.

எமது பொதுவான பிரச்சினைகளுக்கு நாம் நிச்சயமாக தீர்வுகள் காணமுடியும். நாம் கனடாவில் உள்ள உள்ளூர் அதிகார சபை அதிகாரிகளுடன் இருதரப்பு உடன்படிக்கை ஒன்றில் இணைந்திருப்பதனை நீங்கள் அறிவீர்கள்.

அந்தப்புரிந்துணர்வு உடன்படிக்கையில் தனியார் துறை அபிவிருத்திக்கு ஒரு முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளது. சுற்றுலாத்துறையில் ஈடுபாடுள்ள கனடா வாழ் தமிழர்கள் வடபகுதி சுற்றுலாத்துறையின் மேம்பாட்டிற்கு தங்களது ஆதரவை ஆர்வத்தைத் தெரிவித்துள்ளார்கள். உண்மையில் ஹோட்டல் துறையில் பிரபலமான கனடா வாழ் பிரமுகர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் சர்வதேச தரப்பிலான ஐந்து நட்சத்திர விடுதி அமைப்பதற்குரிய காணியைப் பெற்றுக்கொண்டு அதற்குரிய நடவடிக்கைகளை ஏற்கனவே ஆரம்பித்துவிட்டார்.

கனடாவின் தன்னார்வ தொண்டர்களின் உதவியுடன் வடமாகாண சுற்றுலா சங்கத்தின் அங்கத்தவர்களின் திறமைகளை சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறைகளில் மேலும் விருத்தி செய்ய முடியும். எமது சபையின் கீழுள்ள சுற்றுலா சம்பந்தப்பட்ட துறைகளில் பணிபுரியும் ஊழியர்களிடமும் இத்தகைய திறன் அபிவிருத்தியையே நாம் எமது நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

சுற்றுலாத்துறையில் ஒருங்கிணைக்கப்பட்ட தொழில் நுட்பத்தையும் புதிய உற்பத்தி சார் மூலதனத்தையும் ஊக்குவிப்பதன் மூலம் தனியார் மூலதனத்துடன் வடமாகாணத்தை ஒரு சுற்றுலாமையமாக மாற்றுவதற்கான சாத்தியப்பாடுகளை நாம் ஆராய வேண்டும்.

அத்துடன் திறன் அபிவிருத்தியை கட்டியெழுப்பவும் சந்தைப்படுத்தவும் ஸ்ரீலங்காவின் சுற்றுலாத்திறன் அதிகாரிகளின் ஆதரவை பெறுவதன் மூலம் வடமாகாண சுற்றுலாச் சங்கத்தின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் அடையமுடியும்.

எமது சித்த ஆயுள் வேத வைத்தியமுறையை அடிப்படையாகக் கொண்ட மரபுரிமை வைத்திய சுற்றுலாவை எமது விசேட சுற்றுலாத்தெரிவுகளில் ஒன்றாகக் கருதமுடியும். மரபுரிமை பிரதேசம், சமய சுற்றுலாப்பிரதேசம் சூழலுக்கிசைவான சுற்றுலாப் பகுதி, கடல் வாழ் உயிரினங்கள் சுற்றுலாப்பகுதி, இயற்கை சுற்றுலாப்பகுதி என பல்வேறு சிறப்பு தெரிவுகள் எமது பகுதியில் காணப்படுகின்றன. பொதுத்துறையினரின் உதவியுடன் அவற்றை நாம் விருத்தி செய்ய முடியும்.

எமது சித்த வைத்திய முறையை அடிப்படையாகக் கொண்டு உடற்சோர்வை போக்கும் உடல் வலுவூட்டும் (spa) மையங்களை அமைப்பது ஒரு நல்ல முயற்சி. இதன் மூலம் எமது இளைஞர்களுக்கு சிறந்த வேலை வாய்ப்பை வழங்க முடியும். எமது சித்த ஆயுள்வேத வைத்திய துறையிலும் ஒரு பரிணாமத்தை ஏற்படுத்தி அதிகம் செய்ய முடியும்.

சேதன விவசாய முறைகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். சூழலை மாசடையாமல் பாதுகாத்து அளவை விட தரத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் நாம் கூடிய வருமானத்தை ஈட்ட முடியும்.

மொத்தத்தில் நீங்கள் சுற்றுலாத்துறையில் அபிவிருத்திக்கு எல்லாத்தரத்திலும் பயிற்றப்பட்ட ஆட்களை உருவாக்குவதில் முனைப்புடன் உள்ளீர்கள். மேலும் இத்துறை சம்பந்தப்பட்ட பலவிதமான பாடநெறிகளையும் உள்ளடக்கி உள்ளீர்கள். வடமாகாண சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கு இவை அவசியமானவை, வரவேற்கத்தக்கவை.

நிலைபேறான சுற்றுலாத் துறையின் அபிவிருத்திக்கு வல்லுநர்களை உள்ளீர்த்து அதன் முக்கிய பங்காளர்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டு நாமும் எமது அமைச்சில் தனியான அலகு ஒன்றை அமைத்து ஆவன செய்து வருகிறோம்.

உள்ளூர் வெளியூர் தனியார் துறை முதலீட்டாளர்களின் உதவியுடன் அடுத்த தசாப்தத்திற்கு வடமாகாணத்தின் நிலைபேறான சுற்றுலாத்துறை அபிவிருத்தியை மையமாகக் கொண்டு ஐக்கிய நாடுகள் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் உலக சுற்றுலா மையத்தின் கொள்கை திட்டங்கள், நடைமுறைகள் என்பவற்றை கூட்டிணைந்து செயற்படும் நோக்கமும் எம்மிடம் உள்ளது.

சுற்றுலாத்துறையின் பல்வேறு பிரிவுகளான ஹோட்டல் அபிவிருத்தி.சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு போன்றவை தொடர்பில் பல்வேறு குழுக்களை ஸ்தாபித்து கூட்டங்கள், மாநாடுகள் பொருட்காட்சிகள் (Mice) போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு புலம்பெயர் உறவுகளுடன் இரு தரப்பு உடன் பாடுகளை செய்து ஒரு சிறப்பான வியாபார நடவடிக்கைக்கு ஏற்ற பிரிவுகளை அமைக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# சிதைந்த நாணயத்தாள்களுக்கான தடை நீக்கம்; இலங்கை மத்திய வங்கியின் முடிவில் மாற்றம்

(கொழும்பு)

வேண்டுமென்று சேதப்படுத்தப்பட்ட நாணயத்தாள்களை மாற்றும் சேவையை இன்று 31 ஆம் திகதிக்குப் பின்னரும் தொடர்ந்து முன்னெடுப்பதென இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில்மேலும் தெரிவித்துள்ளதாவது,

வேண்டுமென்று சேதப்படுத்தப்பட்ட நாணயத்தாள்களை இன்று 31ஆம் திகதிக்குப் பின்னர் மாற்றிக் கொள்வது தொடர்பில் கிடைக்கப் பெற்றுள்ள பாரியளவான கோரிக்கைகளையும் பொது மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளையும் கருத்திற் கொண்டு இலங்கை மத்திய வங்கியானது வேண்டுமென்று சேதப்படுத்தப்பட்ட, மாற்றம் செய்யப்பட்ட மற்றும் உருச்சிதைக்கப்பட்ட நாணயத்தாள்களை மாற்றும்சேவையினை மறு அறிவித்தல் வரை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, அத்தகைய நாணயத்தாள்களை இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்தில் அல்லது அநுராதபுரம், மாத்தளை, மாத்தறை, திருகோணமலை, நுவரெலியா மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களில் அமையப் பெற்றுள்ள பிரதேச அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறு அல்லது முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் சேர்த்து நாணயத்தாள்களை பதிவுத் தபால் மூலம் அனுப்புமாறும் விண்ணப்பப் படிவத்தை இலங்கை மத்திய வங்கியின் வெப் தளத்திலிருந்து (www.cbsl.gov.lk), பிரதேச அலுவலகங்களிலிருந்து அல்லது ஏதேனும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிக் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும், சிறிய புள்ளியொன்றின் அல்லது கோடொன்றின் வடிவில் அடையாளமிடப்பட்டுள்ள நாணயத் தாள்கள் வேண்டுமென்று உருச்சிதைக்கப்பட்ட நாணயத்தாள்களாக கருத்திற்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் அத்தகைய நாணயத் தாள்களை கொடுக்கல்- வாங்கல்களுக்காக தொடர்ந்தும் பயன்படுத்த முடியும்.

சாதாரணமாகத் தேய்வடைதல், சாதாரணமாக கிழிதல் அல்லது இயற்கை அனர்த்தங்களின் காரணமாக சேதமடைந்த நாணயத்தாள்களை உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் பெற்றுக்கொள்ளும் சேவை எவ்வித மாற்றங்களுமின்றி தொடர்ந்தும் இடம்பெறும்.

மேலும், வேண்டுமென்று சேதமாக்கப்பட்ட, மாற்றம் செய்யப்பட்ட அல்லது உருச்சிதைக்கப்பட்ட நாணயத்தாள்களை கண்டுபிடிப்பதற்காக நாணயத்தாள் செயன்முறைப்படுத்தல் இயந்திரங்களை அளவுத்திருத்தம் செய்வதற்கு அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

எனினும், தன்னியக்கக் கூற்றுப் பொறி (ATM) அல்லது வேறு நாணயத்தாள் கையாளுகின்ற இயந்திரங்களிலிருந்து பொதுமக்கள் உருச்சிதைக்கப்பட்ட நாணயத்தாளொன்றினைப் பெற்றுக்கொள்கின்ற சந்தர்ப்பங்களில் அத்தகைய நாணயத்தாளை அருகிலுள்ள வங்கிக் கிளையில் மாற்றிக் கொள்ளலாம் என்று இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ)

# பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

லிற்றில் மாஸ்ரஸ் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலைக்கு முன்பாகவுள்ள லிற்றில் மாஸ்ரஸ் முன்பள்ளி மைதானத்தில் கி.சதீஸ்குமார் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி சி.பாரதி, சிறப்பு விருந்தினர்களாக ஆளுநர் செயலக தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் திருமதி க.மதுராந்ததி, திருஞானசம்பந்தர் பாடசாலை அதிபர் செல்வி பொ.தவறஞ்சினி, சுன்னாகம் சணச அபிவிருத்தி வங்கி முகாமையாளர் க.இலட்சுமணசர்மா, தெல்லிப்பழை பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் சி.சிவபாலன், உடுவில் மகளிர் கல்லூரி ஆரம்பக் கல்வி ஆசிரியை யு.மேரிஸ்ரெலா, சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொ.றஞ்சன்எதிரிசிங்க மற்றும் மல்லாகம் பொதுச் சுகாதார உத்தியோகத்தர் யோ.ரவீந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10-105)




# யானை பல் விளக்குமா?



புத்தக மூட்டையுடன் பள்ளிக்குக் கிளம்பிய அப்பு அம்மாவுக்கு டாட்டா சொல்லிக் கொண்டு புறப்பட்டான்.

"ஏண்டா இன்னைக்கு குளிச்சியா" என்றாள் அப்புவின் அம்மா.

"நேரமாச்சும்மா, நாளைக்கு குளிக்கிறேன்" என்று சொல்லிவிட்டு ஓடினான். அப்பு ஐந்தாவது படித்துக் கொண்டிருந்தான்.

வகுப்பில் அவன்தான் முதல் மாணவன். அப்புவின் அம்மாவிற்குப் பெருமையாக இருந்தது.

அடுத்த நாள் வகுப்பிற்குள் நுழைந்ததும் ஆசிரியர் அப்புவிடம்தான் வந்தார்.

"ஏன் அழுக்கு சட்டையை போட்டுக் கொண்டு வந்திருக்கிறாய். துவைத்துப் போடக்கூடாதா?" என்று இரகசியமாக அவனிடம் கேட்டார்.

"மறந்திட்டேன் சார்" சமாதானம் சொன்னான் அப்பு. படிப்பில் கெட்டிக்காரனாக விளங்கிய அப்பு ஏனோ தன்னை சுத்தமாக வைத்துக் கொள்வதில் அக்கறை காட்டவில்லை. பல நாட்கள் அப்பு பல் விளக்காமலேகூட பள்ளிக்குப் போயிருக்கிறான்.

அப்போது பையன்கள் இவனிடம் கேட்டால், "யானை பல் விளக்குகிறதா" என்று கிண்டலாகப் பதில் சொல்வான்.

அப்புவின் அம்மாவும் வகுப்பு ஆசிரியரும் பலமுறை கூறியும் அவன் தன்னை சுத்தமாக வைத்துக் கொள்வதில் கவனம் செலுத்தவே இல்லை.

அவன் கவனம் முழுவதும் படிப்பிலேயே இருந்தது.

ஆனால்பையன்கள்இவனை "அழுக்குமாமா" என்று அழைத்தனர்.

அரையாண்டுத் தேர்வு வந்தது. அப்பு விழுந்து விழுந்து படித்தான். முதல் மார்க்கை வேறு யாரும் தட்டி போய்விடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தான்.

"டேய் குளிச்சிட்டுப் போய் படிடா" இது அப்புவின் அம்மா.

"குளிக்கிற நேரத்துல ஒரு பாடம் படிக்கலாம்மா" என்பான் அப்பு.

பரீட்சைக்கு இன்னும் இரண்டு நாள் இருந்தது. அப்போது அப்புவுக்கு திடீரென்று பல்வலி வந்தது. வலியோடு பள்ளிக்கூடம் சென்றான்.

மாலை வீட்டிற்கு வருவதற்குள் அவன் முகத்தில் தாடைப் பகுதி பெரியதாக வீங்கிவிட்டது. விண் விண் என்று வலித்தது. உடம்பு அனலாக கொதித்தது.

அப்புவின் அம்மாவும் அப்பாவும் கை வைத்தியமாக ஏதோ செய்தார்கள். எதுவும் சரிப்படவில்லை.

விடிந்தால் அரையாண்டுத் தேர்வு. அப்பு புலம்பிக் கொண்டே இருந்தான். அவனால் வலியைத் தாங்க முடியவில்லை. ஆசிரியர் அவனை மதுரை அரசு வைத்தியசாலைக்கு அழைத்துச்செல்லும்படி கூறினார்.

அடுத்த நாள் மதுரையில் அப்புவுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

"பல்வலிக்கு காரணமாக இருந்த சொத்தைப் பல்லை உடனடியாக எடுக்கவில்லை என்றால் உயிருக்கே ஆபத்து" என்றார் டாக்டர்,

அப்பு அரையாண்டுத் தேர்வுக்கு போகமுடியவில்லையே என்று அழுது கொண்டிருந்தான்.

"தினந்தோறும் பற்களை சுத்தம் செய்தால் இப்படிப்பட்ட பிரச்சினையெல்லாம் வரவே வராது" என்றார் டாக்டர்.

அப்பு ஒருவாரம் வைத்தியசாலையில் இருந்தான்.

அரையாண்டுத் தேர்வு முடிந்து அன்றுதான் பள்ளிக்கூடம் திறந்தது.

அன்று வகுப்பில் ரேங்க் கார்ட் கொடுக்கப்பட்டது. "முதல் மார்க் ரங்கராஜன்" என்று ஆசிரியர் பெயரைப் படித்த போது அப்பு தேம்பி அழுதான்.

ஆசிரியர் அவனை சமாதானப்படுத்தினார்.

"சுவற்றை வைத்துதான் சித்திரம் எழுத வேண்டும் நமது உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொண்டால்தான் எதையும் வெற்றிகரமாகச் செய்ய முடியும்" என்றார். அப்பு மௌனமாக இருந்தான்.

அடுத்தநாள் அவன் பள்ளிக்கு "பளிச்" என்று வந்தான்.

"அழுக்குமாமா இப்போ உஜாலாவுக்கு மாறிட்டாண்டா" என்று ஒருவன் பையன் சொல்ல "கொல்" லென்று சிரித்தனர். அப்புவுக்கும் சிரிப்பு வந்தது.




- 1885-இலங்கையில் தமிழ், சிங்கள, இஸ்லாமிய வருடப்பிறப்பு நாட்கள் விடுமுறைகளாக அறிவிக்கப்பட்டது.
- 1889-ஈபெல் கோபுரம் தொடக்க விழா கொண்டாடப்பட்டது.
- 1909-பொசுனியா எர்செகோவினா மீதான ஆஸ்திரியாவின் கட்டுப்பாட்டை சேர்பியா ஏற்றுக் கொண்டது.
- 1917-ஐக்கிய அமெரிக்கா டானிஷ் மேற்கிந்தியத் தீவுகளை டென்மார்க்கிடம் இருந்து கூ25 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்குக் கொள்வனவு செய்து அமெரிக்க கன்னித் தீவுகள் எனப் பெயர் மாற்றியது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியர்கள் கிறிஸ்துமஸ் தீவை பிரித்தானியாவிடம் இருந்து கைப்பற்றியது.
- 1959-திபெத்தின் 14வது தலாய் லாமா, டென்சின் கியாட்சோ, எல்லையைக் கடந்து இந்தியாவினுள் நுழைந்து அரசியல் தஞ்சம் கோரினார்.
- 1990-இந்திய அமைதிப் படை ஈழத்தில் இருந்து முற்றாக விலக்கப்பட்டது.

**பிறப்புகள்**

- 1865-ஆனந்தி கோபால் ஜோஷி, இந்திய மருத்துவர் (இ. 1887)
- 1898-சா. ஜே. வே. செல்வநாயகம், இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (இ. 1977)
- 1912-ஏ.ஆர்.ஏ.எம்.அபூபக்கர், இலங்கை அரசியல்வாதி
- 1934-கமலா தாஸ், மலையாள கவிஞர் (இ. 2009)
- 1950-ஹல்தர் நாக், இந்தியக் கவிஞர்
- 1962-ராம்கி, தென்னிந்தியத் திரைப்பட நடிகர்

**இறப்புகள்**

- 1751-பிரெடரிக், வேல்சு இளவரசர் (பி. 1707)
- 1861-என்றி மார்ட்டின், ஈழத் தமிழ் எழுத்தாளர், ஓவியர், மதப் போதகர்
- 1917-எமில் அடால்ஃப் வான் பெர்ரிங், நோபல் பரிசு பெற்ற செருமானிய உயிரியலாளர் (பி. 1854)
- 1965-தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், தமிழகத் தமிழறிஞர் (பி. 1904)
- 1972-மீனாகுமாரி, இந்தியத் திரைப்பட நடிகை (பி. 1932)
- 1980-ஜெசி ஓவென்ஸ், அமெரிக்க தடகள வீரர் (பி. 1913)
- 1981-சி.கதிரவேலுப்பிள்ளை, இலங்கை அரசியல்வாதி (பி. 1924)
- 1995-செலெனா, அமெரிக்கப் பாடகி (பி. 1971)
- 1997-இலைமன் சுட்டிராங் சுபிட்சர், அமெரிக்க இயற்பியலாளர், வானியலாளர் (பி. 1914)

**சிறப்பு நாள்**

- விடுதலை நாள் (மால்ட்டா)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 40 | 50 | 40 | 60 |
| உருளைக்கிழங்கு | 70 | 65 | 90 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 40 | 40 | 40 | 50 | 60 |
| தக்காளி | 20 | 20 | 30 | 30 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 25 | 40 | 40 | 40 |
| கோவா | 20 | 30 | 30 | 50 | 40 |
| கரட் | 80 | 80 | 80 | 100 | 160 |
| பூசணி | 40 | 30 | 30 | 40 | 40 |
| புடோல் | 60 | 25 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 45 | 60 | 30 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 110 | 180 | 100 | 160 |
| பெரிய வெங்காயம் | 70 | 55 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 100 | 160 | 140 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 50 | 60 | 60 | 100 |
| கருணைக்கிழங்கு | 40 | – | 60 | 50 | 60 |
| பயற்றங்காய் | 100 | 30 | 80 | 50 | 60 |
| லீக்ஸ் | 140 | 110 | 160 | 180 | 200 |
| பீற்றூட் | 20 | 30 | 30 | 30 | 60 |
| கறிமிளகாய் | 50 | 40 | 80 | 50 | 80 |
| முருங்கைக்காய் | 400 | 380 | 400 | 300 | 300 |
| போஞ்சி | 120 | 50 | 160 | 140 | 160 |
| கத்தரிதும்புள்ள | 60 | – | 50 | – | 40 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 40 | 40 | 30 |
| தேசிக்காய் | 200 | 110 | 200 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 35-90 | 100 | 75 | 75 |
| இராசவள்ளி | 160 | 130 | 180 | 260 | 160 |
| வெங்காயப்பூ | 100 | 110 | – | 140 | 160 |
| முள்ளங்கி | 30 | 30 | 40 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 10 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | – | 60 | – | 80 |

அனுகுண்டின் முன் அஞ்சாது நிற்பவன்; இரக்கம் கொண்ட நெஞ்சத்தின் முன் நிற்க முடியாது.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P: 021 567 1530
website : www.valampurii.lk

## ஆனந்தசுதாகரனை விடுதலை செய்வதாக ஜனாதிபதி அறிவித்தபோது...

ஆயுள் தண்டனை பெற்று சிறையில் அடைபட்டிருக்கும் ஆனந்தசுதாகரன் விரைவில் தன் பிள்ளைகளோடு சேர்ந்து கொள்வார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அறிவிப்பை அறிந்தபோது இதயம் கசிந்து கண்ணீர் மல்கியது.

ஆம், கிளிநொச்சியைச் சேர்ந்த ஆனந்த சுதாகரன் அரசியல் கைதியாக ஆயுள் தண்டனை பெற்றுச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அவரின் மனைவி அண்மையில் நோய்வாய்ப்பட்டு இறந்து போனார். மனைவியின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக மூன்று மணித்தியால அனுமதியுடன் ஆனந்தசுதாகரனை சிறைக்காவலர்கள் அவரின் வீட்டுக்கு அழைத்து வருகின்றனர்.

தாயை இழந்த இரண்டு சின்னஞ்சிறு பிள்ளைகள் தந்தையைக் கண்டதும் ஓடிச்சென்று அவர் மடியில் அமர்ந்து கொண்டனர். இறுதிச் சடங்குகள் முடிவுற்று தாயின் உடலம் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட,

தந்தை ஆனந்தசுதாகரன் சிறைச்சாலையின் வாகனத்தில் ஏறிக் கொள்கிறார். இந்நேரத்தில் அவரைப் பின் தொடர்ந்து சென்ற அவரின் பச்சிளம் பாலகி சிறைச்சாலை வாகனத்தில் கால் வைத்து ஏற முற்பட்ட சம்பவம் அங்கு நின்றவர்களை ஓவென்று கதறி அழ வைத்தது.

என்னே துன்பம்! தாய் மயானம் போகிறார்; தந்தை மகசின் சிறை செல்கிறார். எங்களுக்கு இனி யார் துணை என்ற ஏக்கத்தோடு தந்தையிருக்கும் சிறையில் இருப்பதே தமக்கு துணை என்ற நினைப்போடு அந்தக் குழந்தை சிறைச்சாலை வாகனத்தில் ஏறிய சம்பவம் அங்கு நின்ற அத்தனை பேரையும் நெக்குருக வைத்தது.

போதாக்குறைக்கு அந்தச் சம்பவம் ஊடகங்களில் பதிவாகியபோது உலகமே அழுது கொண்டது.

எங்கே நீதி! எங்கே தர்மம்! என்ற கோசம் ஒவ்வொருவர் மனதிலும் எழுந்து கொள்ள அதன் எதிரொலிப்பு பலவாறாக வெளிப்பட்டு ஆனந்த சுதாகரனை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையாக மாறியது.

தாயை இழந்த பிள்ளைகள் தந்தையோடு வாழ வழி செய்யுங்கள் என்ற மனிதநேய வேண்டுதலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்றுக் கொண்டு ஆனந்தசுதாகரனுக்கு பொதுமன்னிப்பு வழங்கி அவரை விடுதலை செய்வதாகக் கூறியிருப்பது மனதுக்கு ஆறுதலைத் தந்துள்ளது.

தாயை இழந்த பிள்ளை தந்தையோடு சிறை செல்ல ஆயத்தமான சம்பவம் அறிந்த நாள் முதல் இதயத்தால் அழுதவர்களுக்கு இச்செய்தி நிச்சயம் ஒத்தடம் கொடுக்கும்.

இதற்கு மேலாக தமது தந்தையோடு இணைந்து கொள்வது அந்தப் பிள்ளைகள் படும் துன்பத்தைக் குறைக்கும்.

ஆக, ஒட்டுமொத்தத்தில் ஆனந்தசுதாகரனின் விடுதலை ஈவு இரக்கம் என்ற உயர்ந்த மனிதநேயம் இன்னமும் உயிர்ப்போடு இருக்கிறது என்பதை உறுதி செய்திருக்கிறது.

இந்த மனிதநேயம்; எங்கெல்லாம் துன்பம் இருக்கிறதோ, எங்கெல்லாம் அழுகை இருக்கிறதோ, எங்கெல்லாம் ஏக்கமான வாழ்வு இருக்கிறதோ அங்கெல்லாம் தன் இரக்கத்தைக் காட்ட வேண்டும் என்பதே நம் பெருவிருப்பம்.

# ஒட்டுக்குழு, கொலைகாரர்கள் என்றவர்கள் எங்களது ஆதரவை கோரி நிற்கின்றனர்

## முன்னணி ஆதரவை கேட்கவில்லை - ஈபிடிபியின் ஜெகன்

எங்களை ஒட்டுக்குழு, கொலைகாரர்கள் என்றவர்கள் இன்று எங்கள் ஆதரவை கேட்டு நிற்கின்றார்கள்.

அதன்மூலம் அவர்கள் எங்கள் மீது சுமத்திய குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய் என்பது வெளிப்பட்டுள்ளது என தெரிவித்துள்ள ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் யாழ்.மாவட்ட நிர்வாக செயலாளரும் யாழ்.மாநகர சபையின் உறுப்பினருமான வி.கே.ஜெகன், காலம் எங்களை குற்றமற்றவர்களாக்கியுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எங்கள் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தியவர்கள் இன்று எமது ஆதரவு வேண்டி நிற்கின்றார்கள். அதன்மூலம் அவர்கள் எம்மீது குற்றச்சாட்டுக்களை அரசியல் காழ்ப்புணர்ச்சியால்தான் சுமத்தினார்கள் என்பது வெளிவந்துள்ளது.

எங்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் பொய் என நிரூபணமாகியுள்ளது.

அதேவேளை உள்ளூராட்சி சபைகளில் பெரும்பான்மை பெற்ற கட்சிகள் ஆட்சி அமைக்க நாம் வெளியில் இருந்து கொண்டு ஆதரவு வழங்குவது என தீர்மானித்திருந்தோம்.

இந்த நிலையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் எம்மோடு பேசியிருந்தது. அதனால் நாங்கள் ஆதரவு வழங்கியிருந்தோம்.

தீவகம் எமது இதய வாசல் நேற்று (நேற்று முன்தினம்) வேலணை பிரதேச சபையை கூட்டமைப்பு கைப்பற்ற முயற்சித்தது. எனினும் எமது இதய வாசலில் தொட முயற்சித்தால் நாம் விடமாட்டோம். அதனால் நாம் ஏற்கெனவே தேசிய கட்சியான சிறிலங்கா பெரமுன கட்சியுடன் பேசியிருந்தோம். அவர்களின் ஆதரவுடன் ஆட்சி அமைத்துள்ளோம்.

ஏனைய சபைகளில் ஆட்சி அமைக்க தமக்கு ஆதரவு தாருங்கள் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எம்மிடம் கோரவில்லை. அதனால் அவர்களுக்கு ஆதரவு வழங்கவில்லை என தெரிவித்தார். (ம-4)

# மீண்டுமொரு யுத்தத்தில் எதிர்கால சந்ததி ஈடுபடக்கூடாது

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

யுத்தத்தில் ஈடுபட்டவர்கள் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றுவிட்டார்கள். அப்பாவி மக்கள் தான் இங்கு இருந்து கொண்டு கஷ்டப்படுகிறார்கள் என தெரிவித்துள்ள இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க மீண்டுமொரு யுத்தத்தில் எதிர்கால சந்ததியினர் ஈடுபடக்கூடாது என்றும் கூறியுள்ளார்.

நல்லிணக்கபுரம் வீடமைப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட வீடுகள் நேற்றையதினம் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கீரிமலைப் பகுதியில் அமைக்கப்பட்ட இவ் வீடுகளை இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மகேஸ் சேனாநாயக்க மற்றும் யாழ் அரச அதிபர் நா.வேதநாயகம் ஆகியோரால் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தேசிய பாதுகாப்பின் பொருட்டு அண்மையில் விடுவிக்கப்பட்ட வீதி ஊடாக பொதுப் போக்குவரத்துக்கே அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

எனினும் அந்த வீதி மிக விரைவில் பொதுமக்களும் செல்ல அனுமதிக்கப்படும். தேசிய பாதுகாப்பினை கருத்திற் கொண்டு காணிகள் விடுவிப்பு நடைபெறும். மீணடும் ஒரு தடவை ஒரு யுத்தத்தில் ஈடுபட கூடாது என்பதை பெற்றோர்கள் உங்கள் பிள்ளைகளுக்கு கூறுங்கள்.

யுத்தத்தில் ஈடுபட்டவர்கள் வெளிநாடு சென்றுவிட்டார்கள். அப்பாவி மக்கள் இங்கு கஷ்டப்படுகின்றார்கள். மேலும் இந்த வீட்டை வழங்குவது போன்று மீள பெறவும் முடியும். அந்த நிலைக்கு எம்மை தள்ளி விடாதீர்கள் எனவும் இரா ணுவத் தளபதி மக்களை மிரட்டும் பாணியில் பேசினார். (ம-4)

# நொதேன் வி.க நடத்தும் இரத்ததான முகாம் இன்று

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு நொதேன் விளையாட்டுக்கழகம் நடத்தும் இரத்ததான முகாம் இன்று (31.03.2018) சனிக்கிழமை கல்வியங்காடு செங்குந்தா இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணி தொடக்கம் மதியம் ஒரு மணி வரை நடைபெறும் மேற்படி இரத்த தானமுகாமில் கலந்து குருதிக் கொடையாளிகளையும் கலந்து கொள்ளுமாறு இரத்த தான முகாம் ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (ம)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### தண்ணீர் செல்லும் வழி எப்படி இருக்க வேண்டும்?

மழைநீர், குளியல் நீர், ஈசானியம்: நலம்

வீட்டு நீர் அனைத்தும் கிழக்கு முகம்: சுபம்

வீட்டு நீர் தெற்கு செல்லுதல்: பாதிக்கும்

நைருதியில் செல்வது: ஆரோக்கிய கேடு

மேற்கு திக்கில் செல்வது: ஆணுக்கு கெடுதி

வடக்கு திக்கில், செல்வது: பெண்ணுக்கு கேடு

தெற்கு நைருதியில் செல்வது: பெண் நலம் *(தொடரும்)*

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** சட்டநாதர் வீதி, பருத்தித்துறை வீதியில் கல்வியங்காட்டு சந்தையிலிருந்து நல்லூர் கோவில் வரை, நல்லூர் குறுக்கு வீதி, செம்மணி வீதி, கச்சேரி நல்லூர் வீதி, கனகரட்ணம் வீதி, திருமகள் வீதி, மலர்மகள் வீதி, கலைமகள் வீதி, பூமகள் வீதி,சாஸ்திரியார் வீதி, நடுத்தெருலேன், நாவலர் வீதி, நொத்தாரிஸ் லேன், வேலப்பர் வீதி, புவனேஸ்வரி அம்மாள் வீதி, புறூடி லேன், ஸ்ரான்லி கல்லூரி வீதி, சுப்பிரமணியம் வீதி, முதலியார் வீதி, பாரதி லேன், புங்கன்குளம் வீதி புகையிரத கடவை வரை, நாயன்மார் வீதி, குகன் வீதி, பொன்னம்பலம் வீதி, நாவலர் வீதியில் மாம்பழம் சந்தியிலிருந்து நல்லூர் குறுக்கு வீதி வரை, ஏ9 வீதியில் பாரதி வீதியிலிருந்து செம்மணி வளைவு வரை, நெடுங்குளம் வீதி புகையிரதக் கடவை வரை, முள்ளி, நாவலடி, பூம்புகார், அரியாலை கிழக்கு, பளை ஒருபகுதி, அரசர் கேணி, கச்சாய்வெளி, தர்மக்கேணி, முகமாலை, இத்தாவில், எழுதுமட்டுவாழ் உசன், விடத்தற்பளை, கெற்பலி, மிருசுவில் தெற்கு, தவசிக்குளம், நாவற்குழி, இணுவில் ஒரு பகுதி, மல்வம், உடுவில், சங்குவேலி, பிப்பிலி, கட்டுடை, மானிப்பாய், ஆனைக்கோட்டை ஒரு பகுதி, மானிப்பாய் **Gargills Food City, Cey-Nor** பவுண்டேஷன் லிமிடட், மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், **SOS** சிறுவர் பூங்கா, அரியாலை டீசல் அன்ட் மோட்டார் எஞ்ஜினியறிங் பி.எல்.சி நாயன்மார் கட்டு **Carlton Sports Network (CSN)** ஆகிய பிரதேசங்களில் மின் தடைப்படும். (இ-9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- கடவுளை அவருடைய அருளால் பார்க்க முடியும். கடவுள் நமக்கு அருகில் இருந்தாலும், தேடினால் மட்டுமே காணக்கூடியவராக இருக்கிறார்.
- உயர்ந்த மனநிலைக்கு ஒருவனை அழைத்துச் செல்வது அறிவாற்றலே. அப்போது இதயம் தெய்வீக நிலையை அடைகிறது.
- பண்புடையவர்களிடம் நம்பிக்கை, நேர்மை, பக்தி ஆகிய குணங்கள் தானாகவே வந்துவிடும். இந்த குணங்கள் உள்ளவர்களுக்கு எந்த அபத்தும் நிகழ்வதில்லை.
- உண்மை, தூய்மை, சுயநலமின்மை ஆகிய மூன்றையும் பெற்றுள்ள ஒருவனை, உலகமே எதிர்த்து நின்றாலும் அதை எதிர்த்து நிற்கக்கூடிய ஆற்றல் அவனுக்கு உண்டு. அவன் எதிலும் வெற்றி பெறுவான்.
- அறிவு, உள்ளம் இவ்விரண்டில் எதைப் பின்பற்றுவது என மனதில் போராட்டம் எழும் போது, உள்ளம் சொல்வதையே பின்பற்றுங்கள். உள்ளமே மனிதனின் கண்ணாடியாக இருக்கிறது.

# நியூசிலாந்திற்கு எதிரான டெஸ்ட்; சரிவிலிருந்து மீண்டது இங்கிலாந்து

இங்கிலாந்து கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் மோதும் 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி கிறிஸ்ட் சர்ச் நகரில் தொடங்கியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி விக்கெட்டுகளை இழந்து திணறியது. அந்த அணி 94 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டை இழந்தது. டிம் சவுத்தி, போல்ட் அபாரமான பந்துவீச்சில் ஓட்டங்கள் எடுக்க திணறியது.

அதன்பின் பேர்ஸ்டோவ்- பென் ஸ்டோக்ஸ் நிதானமாக ஆடினர். ஸ்டோக்ஸ் 25 ஓட்டங்களுடனும் ஸ்டுவர்ட் பிராட் 5 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். மறுமுனையில் இருந்த பேர்ஸ்டோவ் சிறப்பாக விளையாடினார். அவருக்கு மார்க் வுட் உறுதுணையாக இருந்தார். இருவரும் அரைச்சதம் அடித்தனர். மார்க்வுட் 52 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பேர்ஸ்டோவ் ஆட்டத்தால் இங்கிலாந்து அணி சரிவில் இருந்து மீண்டது. கடைசியாக முதல் நாள் ஆட்டம் முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 290 ஓட்டங்கள் இங்கிலாந்து குவித்தது. பேர்ஸ்டோவ் 97 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளார். இன்றைய ஆட்டம் தொடங்கியதும் சதமடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)



# மிட்செல் ஸ்டார்க் விலகல் கொல்கத்தாவுக்கு இழப்பு

தென்னாபிரிக்கா - அவுஸ்திரேலியா இடையிலான 4-வது டெஸ்ட் ஜோகன்னஸ்பர்க்கில் இன்று தொடங்கியது. வோர்னர், ஸ்மித், பேன்கிராப்ட் ஆகியோர் இல்லாத நிலையில், வேகப்பந்து வீச்சின் முக்கிய வீரரான மிட்செல் ஸ்டார்க் பந்து வீச்சின் மூலம் அணியை வழி நடத்திச் செல்வார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், போட்டி தொடங்குவதற்கு முன் வலது காலில் காயம் ஏற்பட்டுள்ளதால் களம் இறங்கவில்லை.

காயத்தால் விளையாடாத மிட்செல் ஸ்டார்க் சொந்த நாடு திரும்புகிறார். அங்கு காயம் குறித்து மதிப்பீடு செய்ய பின்னர்தான் அவரது காயத்தின் வீரியம் குறித்து தெரியவரும். இதனால் ஐபிஎல் தொடரில் இருந்து ஸ்டார்க் விலக வாய்ப்புள்ளது .

மிட்செல் ஸ்டார்க்கை கொல்கத்தா அணி 9.4 கோடி ரூபாய்க்கு ஏலம் எடுத்துள்ளது. அந்த அணி 19 வீரர்களை மட்டுமே ஏலம் எடுத்துள்ளது.

சர்வதேச அளவில் முன்னணி பந்து வீச்சாளரான ஸ்டார்க், ஐபிஎல் தொடரில் பங்கேற்காவிடில் கொல்கத்தா அணிக்கு அது பெரிய இழப்பாகும்.




அந்த அணியில் வினய் குமார், மிட்செல் ஜான்சன், அந்த்ரே ரஸல் ஆகியோருடன் கம்லேஷ் நகர்கோடி, ஷிவம் மவி ஆகிய இளம் வீரர்கள் உள்ளனர். (க)

# ஸ்மித் இடத்தை நிரப்ப வருகிறார் ஹெய்ன்ரிச்

அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்மித்திற்குப் பதிலாக தென்னாபிரிக்க விக்கெட் கீப்பர் ஹெய் ன்ரிச் கிளாசனை எடுக்க விரும்பு கிறது ராஜஸ்தான் றோயல்ஸ்.

கேப்டவுன் நியூலேண்டில் நடைபெற்ற தென்னாபிரிக்காவிற்கு எதிரான 3-வது டெஸ்டில் அவுஸ்திரேலியா தொடக்க வீரர் பான்கிராப்ட் பந்தை சேதப்படுத்தியது தெள்ளத்தெளிவாக தெரிந்தது. பான்கிராப்ட் பந்தை சேதப்படுத்தியது தனக்குத் தெரியும் என்று ஸ்மித் குற்றத்தை ஒப்புக்கொண்டார். வோர்னர்தான் இதற்கு மூளை யாக இருந்தார் என்பது தெரியவந்தது.





இதனால் ஸ்மித், வோர்னருக்கு கிரிக்கெட் விளையாட அவுஸ்தி ரேலியா ஓராண்டு தடை விதித்துள்ளது. இதனால் ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கு தலைவராக இருந்து ஸ்மித்தும், சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிக்கு தலைவராக இருந்து வோர்னரும் தங்களது பதவியை இராஜினாமா செய்தார்கள். அத்துடன் இருவருக்கும் தடைவிதிக்கப்பட்டது.

இதனால் முக்கியமான வீரர்களை இழந்துள்ள இரண்டு அணிகளும் தரமான வீரர்களை கொண்டு அந்த இடத்தை நிரப்ப வேண்டும் என்று நினைக்கிறது. தற்போது ராஜஸ்தான் றோயல்ஸ் அணி தென்னாபிரிக்க விக்கெட் கீப்பரான ஹெய்ன்ரிச் கிளாசனை ஸ்மித்திற்குப் பதிலாக சேர்க்க விரும்பு கிறது.

தென்னாபிரிக்க அணியின் முன்னணி விக்கெட் கீப்பரான குயின்டான் டி காக் காயம் காரணமாக இந்தியாவிற்கு எதிரான ஒருநாள் தொடரில் இருந்து விலகினார். அவருக்கு மாற்று விக்கெட் கீப்பராக இணைந்தவர்தான் கிளாசன்.

இந்தியாவிற்கு எதிராக நான்கு ஒருநாள் போட்டியில் 110 ஓட்டங்கள் அடி த்தார். 3 இருபது-20 போட்டியில் 92 ஓட்டங்கள் அடித்தார். 2-வது இருபது-20 போட்டியில் 69 ஓட்டங்கள் அடித்தார். இந்த போட்டி யில் இந்தியாவின் முன்னணி சுழற் பந்து வீச்சாளரான சாஹல் பந்தை நேர்த்தியாக எதிர்கொண்டார். பந்தை சிக்சருக்கும் பவுண்டரிக்கும் விரட்டினார்.

ஐபிஎல் தொடரில் சுழற்பந்து வீச்சு முக்கிய பங்காற்றும். சாஹல் பந்தை சிறப்பாக எதிர்கொண்டதால், கிளாசன் மீது ராஜஸ்தான் அணிக்கு அதிக நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இதனால் அவரை எடுக்க விருப்பம் தெரிவித்துள்ளது. இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. (க)

# அரச திணைக்கள கால்பந்தாட்டம் சிறைச்சாலை அணி சம்பியனானது



அரச திணைக்களுக்கிடையில் நடைபெற்ற கால்பந்தாட்டத்தில் இலங்கை சிறைச்சாலை அணி சம்பியனாகியது.

அரச திணைக்கள அணிகளுக்கிடையிலான இறுதிப்போட்டி இராஜகிரிய மொரகஸ்முல்ல இரணவன மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் இலங்கை சிறைச்சாலை அணியை எதிர்த்து காலி மாநகர சபை அணி மோதியது. இதில் சிறைச்சாலை அணி, 04:00 என்ற கோல்கள் கணக்கில் வென்றது.

சிறைச்சாலை அணி, 25 வருடங்களின் பின்னர் திணைக்களச் சம்பியனாகியது. சிறைச்சாலை அணியின் வடமாகாணத்தைச் சேர்ந்த கஜகோபன், வின்சன், கனிஸ்ரன் மற்றும் பிரதீப் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

இவர்களில், த.கஜகோபன் இந்தத் தொடரில் மொத்தமாக 18 கோல்களை அடித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-26)

## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

# அராலி சனசமூக நிலையத்தின் மாபெரும் விளையாட்டுப் போட்டிகள்

அராலி ஸ்ரீமுருகன் சனசமூக நிலையம் வருடம் தோறும் சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு சைக்கிளோட்டம்,மரதனோட்டம் ஆகிய போட்டிகளை நடத்தி வருகின்றது. இப் போட்டிகள் இன்று காலை. 6 மணிக்கு அராலி மத்தி நிலைய முன்றலில் சைக்கிள் , மரதனோட்டம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இப் போட்டிகள் போட்டியாளர்களின் திறமைகளை வெளிக்கொணரும் களமாக அமைகின்றது. எனவே போட்டியாளர்கள் தங்கள் பங்களிப்பினை நல்குவதுடன் போட்டிகளை தொடர்ந்து நடத்த ஒத்துழைக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (க)

# கொக்குவில் ச.ச.நிலையத்தின் கிரிக்கெட் சுற்றுப் போட்டி

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில், யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் 30 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றை வருடாவருடம் நடத்தி வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியின் 25 ஆவது வருடச் சுற்றுப்போட்டி எதிர் வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை முதல் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

1991 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வரும் இந்தச் சுற்றுப்போட்டியில், 1996, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில், நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக போட்டிகள் நடைபெறவில்லை.

இதுவரையில் நடைபெற்ற 24 சுற்றுப்போட்டிகளில், சென்றலைட்ஸ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் ஆகிய அணிகள் தலா 4 தடவைகளும், ஜொனியன்ஸ், ஜொலிஸ்ரார்ஸ், பற்றீசியன் அணிகள் தலா 3 தடவைகளும், மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழகம் 2 தடவைகளும், திருநெல்வேலி விளையாட்டுக்கழக அணி 1 தடவையும் சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டன.

இம்முறையில் சுற்றுப்போட்டியில் மொத்தமாக 24 அணிகள் பங்குபற்றுகின்றன. 31 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள போட்டிகளில், காலை நடைபெறும் போட்டியில் கிறாஸ்கொப்பர்ஸ் அணியை எதிர்த்து றெஜின்போ விளையாட்டுக்கழகமும், மாலை நடைபெறும் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விக்டோறியா விளையாட்டுக்கழக அணியும் மோதியது.



முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலையில் நடைபெறவுள்ள போட்டியில், யூனியன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து றைரோன் அணியும், மாலை நடைபெறவுள்ள போட்டியில் ஸ்கந்தா ஸ்ரார்ஸ் அணியை எதிர்த்து ஹாட்லி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (க-26)

## வடக்கில் இராணுவம்...

யிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், பிரதேச செயலாளரின் வேண்டுகோளுக்கு அமைய எதிர்வரும் ஏப்ரல் புத்தாண்டு மாதத்தில் வடக்கில் 500 ஏக்கருக்கு அதிகமான நிலப்பரப்பை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப் படும்.

நாட்டினதும், நாட்டு மக்களதும் பாதுகாப்பு உறுதிபடுத்தப்பட்ட பின்னரே இவ்வாறான தீர்மானங்கள் எட்டப்படுகின்றன. இந் நாட்டின் பாதுகாப்பு என்பது உங்களது பாதுகாப்பு. எனவே உங்களது பாதுகாப்பிற்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களாக இராணுவ வீரர்கள் காணப்படுகின்றனர்.

இதுவரை காத்திருந்தது போல, இன்னும் கொஞ்ச காலம் பொறுத்துக் கொள்ளுங்கள். நாம் எமது இடங்களுக்கு சென்ற பின்னர், எம்மால் பொதுமக்களுக்கு வழங்கக்கூடிய அனைத்து பகுதிகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுப்போம்.

அதற்கு மேலதிகமாக வளலாய், பருத்தித்துறை, காங்கேசன்துறை வீதிகளில் காலை வேளைகளில் இதுவரை இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகளின் போக்குவரத்திற்கே அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், எதிர்வரும் புத்தாண்டு காலத்தில் காலை வேளையில் பொது மக்கள் தங்கள் சொந்த வாகனங்களில் பயணிக்க இடமளிக்குமாறும் நான் இத்தருணத்தில் அறிவுறுத்துகின்றேன் எனத் தெரிவித்தார். (ம)

## பிரதமர் ரணிலை...

உட்பட சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனிடம் தெரிவித்துள்ளனர்.எதிர்க்கட்சித் தலைவருக்கு இவர்கள் அனுப்பியுள்ள கடிதத்தில் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

அந்த கடிதத்தில் நீங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மாத்திரம் எதிர்க்கட்சித் தலைவர் அல்ல. முழு நாட்டுக்குமான எதிர்க் கட்சித் தலைவர். முழு நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதே எதிர்க்கட்சித் தலைவரின் கடமை. கடுமையான குற்றச்சாட்டுக்களுடன் கூடிய யோசனை ஒன்றை தோற்கடிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்களிக்குமாயின் கூட்டமைப்பு பாரதூரமான அனர்த்தத்தை எதிர்நோக்க நேரிடும். இதனால், நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களிப்பதை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம் என அதில் கூறப்பட்டுள்ளது.

இதனிடையே அத்துரலியே ரதன தேரர் இன்று விசேட அறிவிப்பு ஒன்றை வெளியிட உள்ளதாக கூறப்படுகிறது. (ம)

## ரணிலை காப்பாற்...

தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், ரணில் என்ற தனி மனிதரை காப்பாற்ற வேண்டிய அவசியம் தமிழ் தரப்புக்கு அவசியமற்றது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ரணிலுக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் கூட்டமைப்பின் நிலைப்பாடு குறித்து அவரிடம் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்வரும் நான்காம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் எமது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் 16 பெரும் எதிர்வரும் தினங்களில் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவிருக்கின்றார்கள். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க இணைந்திருந்த போது அவர்களுக்கு ஆதரவாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு செயற்பட்டது, பல இடங்களில் ஆதரவாக வாக்களித்திருந்தது.

தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை இரு பெரும் கட்சிகளும் தீர்த்து வைக்கும் என்ற எதிர்பார்ப்பில் தான் நாங்கள் இரு தரப்பும் ஒன்றிணைந்திருந்த அரசிற்கு வாக்களித்திருந்தோம். ஆனால் அவர்களுக்குள்ளே இரு தரப்பாக பிரிந்து நிற்கும் நிலையில் தனி நபர் ஒருவருக்கு ஆதரவாக நாங்கள் வாக்களிப்பதில் எந்த அர்த்தமும் இல்லை. எதற்காக நாங்கள் அவர்களுக்கு ஆதரவு வழங்கினோமோ அந்த விடயங்களை அவர்கள் நிறைவேற்றவில்லை.

குறிப்பாக தமிழ் மக்களின் நிலங்கள் விடுவிக்கப்படவில்லை, அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவில்லை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட மக்களுக்கு நியாயமான தீர்வை வழங்கவில்லை, பொறுப்புக்கூறலை வழங்கவில்லை, பொருளாதார ரீதியில் தமிழ் மக்கள் முன்னேறவில்லை.

இந்த நிலையில் ஒரு தேசிய கட்சியை நாங்கள் ஆதரிப்பது என்பது ஏற்றுக்கொள்ள கூடியது ஒன்றல்ல.

மைத்திரி - ரணில் கூட்டரசாக இருந்தால் அதற்கு நாங்கள் ஆதரவு வழங்குவது என்பது எமது அரசியல் பயணத்தில் ஒரு அத்தியாயமாக இருக்கும். ஆனால் இவர்கள் பிரிந்து நிற்கும் நிலையில் ரணில் என்ற தனி மனிதனை காப்பாற்ற வாக்களிப்பதென்பது ஏற்றுக்கொள்ள கூடியதொன்றல்ல என சிறீதரன் தெரிவித்தார்.

இதேவேளை மேற்படி விடயம் தொடர்பில் எதிர்வரும் இரண்டாம் மூன்றாம் திகதிகளில் கூட்டமைப்பு ஆராயவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

## பிரதமருடன் உடன்...

துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி- பிரதமர் இடையே இரகசிய சந்திப்பு இடம்பெற்றதாக வெளியான தகவல்களையும் அவர் மறுத்துள்ளார்.

இந்நிலையில், இது குறித்து விளக்கமளிப்பதற்கான விசேட ஊடக சந்திப்பொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## அரசாங்கத்திற்கு...

யாழில் வைத்து தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக ஒன்றிணைந்த எதிரணி உள்ளிட்ட மூன்று தரப்புகளிலிருந்து எதிர்ப்பு கிளம்பியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையில்லா பிரேரணையினால் அரசாங்கத்தின் ஸ்திரமற்றதன்மை மேலும் வலுவடைந்துள்ளதென அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று வெள்ளிக்கிழமை விஜயம் செய்த வாசுதேவ நாணயக்கார, அங்கு செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது, யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தமைக்கான காரணம் குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பினர். இதற்கு பதிலளித்த வாசுதேவ,

விசேட நிகழ்வொன்றிற்காகவே யாழ்ப்பாணத்திற்கு வந்தேன். விசேட நிகழ்விற்கு வந்தாலும், அரசியல் ரீதியான தேவையும் உள்ளது. யாழ்ப்பாணத்தில் புதிதாக ஏற்பட்டுள்ள அரசியல் ரீதியான மாற்றத்தை உணரக்கூடியதாக உள்ளது என்றார்.

எதிர்க் கட்சித் தலைவர் சம்பந்தனின் அரசியல் செயற்பாடுகள் குறித்து வினவப்பட்ட போது, அரசாங்கத்தாலேயே அவரை நியமித்தனர். ஆகவே, அவர் அரசாங்கத்திற்கு மாத்திரமே உதவிக்கொண்டிருக்கின்றார் என்றார்.

இதன்போது, பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பாக கேள்வியெழுப்பப்பட்டது. இதற்கு பதிலளித்த வாசுதேவ, நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக மூன்று தரப்பினர் செயற்படுகின்றனர். ஒருபுறம் ஒன்றிணைந்த எதிரணியினரான நாம், மறுபுறம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஒரு பகுதியினர் உள்ளனர். அத்தோடு, ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளேயே அவருக்கு எதிர்ப்பு வெளிப்பட்டுள்ளது. இந்த மூன்று தரப்பிற்கு மத்தியில் பிரதமர் சிக்கியுள்ளார்.

நம்பிக்கையில்லா பிரேரணை வெற்றி பெறுமென நான் நினைக்கின்றேன். வெற்றி பெற்றாலும் தோற்றாலும், இந்த நம்பிக்கையில்லா பிரேரணையின் பின்னர் அரசாங்கத்திற்குள் சூறாவளி ஏற்பட்டுள்ளது. அதனூடாக அரசாங்கத்தின் ஸ்திரமற்ற தன்மை மேலும் வலுப்பெற்றுள்ளது, என்றார். (ம-4)

## பேரினவாத கட்சிக...

எடுக்கப்பட்டு கட்சியில் இருந்து நீக்கப்படுவார் என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை திருக்கோவில் பிரதேச சபையில் தமிழ்த் தேசிய பேரவையில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சின்னத்தில் போட்டியிட்ட கட்சி உறுப்பினர் ஒருவர் மேற்படி பிரதேச சபையின் தவிசாளர், உப தவிசாளர் தெரிவில் பேரினவாத கட்சிகளுக்கு ஆதரவாக வாக்களித்திருந்தார். இந்த முடிவு கட்சி ரீதியாக எடுக்கப்படவில்லை.

ஆகவே இது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு கட்சியில் இருந்து சம்பந்தப்பட்ட நபர் நீக்கப்படுவர் ,என அவர் அறிவிப்பு செய்துள்ளார். (ம-4)

## ஆசிரியையின் சங்...

அறுத்துக்கொண்டு தப்பியோடியுள்ளனர். இந்த சம்பவம் ஆவரங்கால் கிழக்கு யாழ் பருத்தித்துறை வீதியில் நேற்றுஇடம்பெற்றுள்ளது.

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்தில் கற்பிக்கும் ஆசிரியை பாடசாலை முடிந்து தனது வீட்டுக்கு சென்றுகொண்டிருக்கும் போதே அவரை பின் தொடர்ந்த இருவர் மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதியில் வைத்து சங்கிலியை அறுத்து சென்றுள்ளனர்.

இதன்போது மோட்டார் சைக்கிளுடன் விழுந்த ஆசிரியை காயமடைந்துள்ளார். சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம)

## அப்பாவை ஜனாதி...

யல் கைதியான ஆனந்தசுதாகரனின் பிள்ளைகள் எதிர்பார்த்து உள்ளனர்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட ஆனந்தசுதாகரனின் இரு பிள்ளைகளும், தமது எதிர்பார்ப்பை வெளிப்படுத்தி இருந்தனர்.

அது தொடர்பில் ஆனந்தசுதாகரனின் மூத்தமகனான கனிதரன் தெரிவிக்கையில், நாங்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஜனாதிபதியை சந்தித்து எங்கள் அம்மா உயிரிழந்துவிட்டா, அப்பாவை சிறையில் அடைத்து வைத்துள்ளார்கள். அவரை விடுதலை செய்ய வேண்டும் என கேட்டோம். அவர் தான் அதற்கு நடவடிக்கை எடுப்பதாக கூறினார் என மூத்தமகன் தெரிவித்தார்.

அதேவேளை இளையமகளான சங்கீதா தெரிவிக்கையில், நாங்கள் அப்பாவை விடுதலை செய்ய கேட்டோம் ஜனாதிபதி சித்திரை புதுவருடத்திற்கு முதல் விடுவதாக கூறியுள்ளார். புதுவருடத்திற்கு அப்பா எங்களிடம் வருவார் என நம்பிக்கையுடன் காத்திருக்கிறோம் என தெரிவித்தார்.

அதேபோன்று ஆனந்தசுதாகரனின் இரு பிள்ளைகளுக்கும் உதவ பலர் முன்வந்துள்ளனர். தற்போது அந்த பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கே அனைவரும் உதவ வேண்டும். அதேவேளை ஆனந்தசுதாகரன் சிறையில் இருந்து மீண்டு வந்தால் அவரின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப உதவ வேண்டும் என தெரிவித்தார். (ம)

## அதிகார பரவலாக்...

வரவு செலவுத்திட்டத்தில் வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட விசேட நிதி தொடர்பில் நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமர வீர, மத்திய வங்கி ஆளுநர் குமார சாமி இந்திரஜித் உள்ளிட்ட குழுவினர் வட மாகாண முதலமைச்சரை நேற்று திண்ணை தனியார் விடுதியில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இந்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்

மேற்குறித்த சந்திப்பில் எம் தரப்பிலான சில விடயங்களை எடுத்துக்கூறியிருந்தேன். எந்தவொரு செயற்திட்டத்தையும், தயாரிக்கும் போது அந்த நிலையிலேயே எமது உள்ளீட்டையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என தெரிவித்திருந்தேன். மத்திய அரசு செயற்திட்டங்களை தயாரித்து விட்டு நாங்கள் இவ்வாறு செய்கிறோம் நீங்கள் வந்து ஏற்றுக்கொள்ளுங்கள் என்று கூறுவது பொருத்தமாக தெரியவில்லை. உண்மையிலேயே அதிகாரப் பரவலாக்கல் இருப்பதை ஏற்றுக்கொண்டால் எம்மை பங்குதாரர்களாக ஏற்று அதை தயாரித்து நடைமுறைப்படுத்துங்கள் என கேட்டிருந்தேன். அதிகார பரவலாக்கத்துக்கு முழு ஒத்துழைப்பை வழங்கும் அமைச்சர் என்ற வகையில் அதை கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டார்.

மகாவலி அதிகாரசபையின் அதிகாரம் முழு நாட்டுக்கும் பரவி இருப்பதால் 1987 இல் தரப்பட்ட அதிகார பரவலாக்கம் அதில் கருத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை இதன் காரணத்தினால் தான்தோன்றித்தனமாக மகாவலி அதிகார சபை தனக்கு தேவையானதை செய்துகொண்டு செல்கிறது.

அதனை நிறுத்த வேண்டும் என்றால் மகாவலி அதிகார சபை சட்டமூலம் கை வாங்கப்பட்டு அதற்கு பதிலாக வேறு ஒரு சட்டம் கொண்டுவரப்படவேண்டும் என தெரிவித்தேன்.

மேலும் 1992 ஆம் ஆண்டின் 58 ஆவது சட்டத்தின் படி 1987 ஆம் ஆண்டு மாகாண சபைகளுக்கு கொடுக்கப்பட்ட உரித்துக்களில் சிலவற்றை எடுத்து அரச அதிபர் மற்றும் கிராம சேவகருக்கு கொடுத்து எமது அதிகாரங்களை குறைத்தது.

அவ்வாறு குறைக்காமல் அந்த சட்டத்தையும் கைவாங்கி விட்டால் மீண்டும் 1987 ஆம் ஆண்டு மாகாண சபைகளுக்கு தரப்பட்ட முழு அதிகாரமும் எமது கைவசம் இருக்கும் என சுட்டிக்காட்டியுள்ளதாக தெரிவித்தார்.(ம-9)

## வடக்குக்கு முன்மொ...

யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை விஜயம் செய்த அமைச்சர், ஊடகங்களிடம் இவ்விடயத்தைக் குறிப்பிட்டார். இதுகுறித்து அமைச்சர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி, திறைசேரியின் செயலாளர், நிதியமைச்சின் உயரதிகாரிகள் உள்ளிட்டோர் எதிர்வரும் இரு தினங்களுக்கும் யாழில் தங்கியிருந்து வரவு செலவுத்திட்ட யோசனைகளை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆராய்வார்கள்.

கடந்த வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு அமைவாக, இப்பிரதேசத்தில் முன்னெடுக்கப்படவேண்டிய அபிவிருத்தி மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு வருகின்றது. அதன் முதற்கட்டமாக வடக்கு மாகாணத்தின் சகல அரசாங்க அதிபர்களையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளோம். அதனையடுத்து, குறித்த திட்டங்களை விரைவில் நடைமுறைப்படுத்துவோம் என்றார். (ம-9)

## யாழ்ப்பாணத்திற்கு...

நல்லிணக்க செயலணியால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் ஆராயவே அவர் இந்தப் பயணத்தை மேற்கொள்கிறார்.

யாழ்ப்பாணத்துக்கு இன்று பிற்பகல் வருகை தரும் சந்திரிகா பண்டாரநாயக்க, யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் இன்று மாலை இடம்பெறும் மத்திய வங்கியின் ஒழுங்கு செய்யப்பட்ட கலந்துரையாடல்களில் பங்கேற்கிறார்.

யாழ்ப்பாணமாவட்ட செயலகத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெறும் கலந்துரையாடலிலும் அவர் பங்கேற்கிறார். இதன்போது வாழ்வாதார உதவிகள் பயனாளிகளையும் அவர் சந்திப்பார்.

தெல்லிப்பளை வீமன்காமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சுகாதார நிலையத்தை நாளை பிற்பகல் சந்திரிகா பண்டாரநாயக்க திறந்து வைக்கிறார். அன்று மாலை கீரிமலையில் அமைக்கப்பட்ட பாரம்பரிய உணவு நிலையத்தையும் அவர் ஆரம்பித்துவைப்பார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க, வரும் திங்கட்கிழமை முற்பகல் அராலி பெரியகுளத்தின் நீர்ப்பாசனத் திட்டத்தை ஆரம்பித்துவைப்பார். சங்கானை நகரில் அமைந்துள்ள மண்டிகைக் குளத்தின் நீர்ப்பாசனத் திட்டத்தையும் அன்றைய தினம் நண்பகல் அவர் ஆரம்பித்துவைப்பார்.

காரைநகரில் புதிதாக அமைக்கப்பட்ட கடற்றொழிலாளர் ஓய்வு மண்டபத்தை வரும் திங்கட்கிழமை பிற்பகல் சந்திரிகா திறந்து வைப்பார். அல்லு மாலை மருதங்கேணி, அம்பனில் அமைக்கப்பட்ட முன்பள்ளிக் கட்டடத்தையும் அவர் திறந்துவைக்கவுள்ளார்.(ம)

**கடந்த 2017 ஆம் ஆண்டின் சாதனையுடன்...**

A/L 2020 தொழில்நுட்பபிரிவு மாணவர்களை

**TECHNO WORLD**

வெலிங்டன் சந்தி (லிங்கன் கூல்பார் அருகாமை), யாழ்ப்பாணம்.

**அன்புடன் வரவேற்கின்றது**

**புதிய பிரிவு - A/L 2020**

**28.03.2018**

**முதல் அனுமதிகளை பெற்றுக்கொள்ளலாம்**

வெளிமாவட்ட மாணவர்களுக்காக சனி, ஞாயிறு தினங்களில் விசேட நேர சூசிகள் ஒழுங்கமைக்கப் பட்டுள்ளன.

**30.03.2018 (வெள்ளிக்கிழமை)**

**காலை 8.30 வகுப்புக்கள் ஆரம்பம்**

**எமது கடந்தகால சாதனைகள்**

மாவட்ட ரீதியில் முதல் நிலை சாதனையாளர்கள்

பொறியியல் தொழில்நுட்பப்பிரிவு - தமிழின்யன் (1) கோகுலன் (3)

Z - புள்ளி 2.9808 - தேசிய நிலை 20 (2A,B)

உயிர்முறைமைகள் தொழில்நுட்ப பிரிவு - கேசனா (1) , சரண்சனா (3)

எமது நிறுவனத்தில் கல்வி கற்று 65 மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்கின்றனர்.

**077 017 5346**

(C-2064)



**பொருளியல்**

A/L 2020

**DMI** Jaffna

**S.S.சிறி**

**07.04.2018 ஆரம்பம்**

புதிய பாடத்திட்டத்திற்கான 2000 பல்தேர்வு வினாவிடை நூல் வெளிவருகின்றது. (2019/ 2020 மாணவர்களுக்காக)

(C-2025)


## காணாமல்...

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் அரசு தொடர்ந்தும் மௌன போக்கை கடைப்பிடித்து வருகின்ற நிலையில் எங்கள் போராட்டம் ஒரு வருடத்தை தாண்டி நேற்று 400ஆவது நாளாக நடை பெற்றது. இந்த நிலையில் தமிழ் அரசியல்வாதிகளோ மற்றும்வடக்கு மாகாண சபையினரோ இந்த விடயம் குறித்து பேசாமல் இருந்து வருகின்றனர்.

இந்த நிலையிலேயே அனைத்து தரப்பினரும் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் குரல் கொடுத்து அதற்கான ஏற்றுக்கொள்ளத் தக்க தீர்வை பெற்று தர கோரி மேற்படி போராட்டம் நடைபெறறது. இந்த போராட்டத்தின் போது புலனாய்வு பிரிவினர் கடும் கண்காணிப்பில் ஈடுபடிருந்ததோடு போக்குவரத்தின் போதும் இடையூறுகளை ஏற்படுத்தியிருந்ததாக உறவினர்கள் தெரிவித்தனர். (ம-4)


**மாலைதீவு வேலைவாய்ப்பு**

றைல் மேசன், பிளாஸ்டர் மேசன், எலெட்ரீஷியன், பிளம்பர், காபென்றர், கட்டட தொழிலாளர், கம்பி வேலையாள்

குறிப்பு : உணவு, தங்குமிடம் இலவசம்

டுபாய் - பாதுகாப்பு ஊழியர் (ஆண் / பெண்) Hotel Waiter, Steward, Cooks, Commis

விபரங்களுக்கு **0777 324 004**

இலங்கையின் முதன்மை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் Emerald Isle Manpower & Travel Services The Sri Lankan Recruitment Specialists — 407-2/1, Galle Road Mt.Lavinia

வடக்கு மாகாண ஏக முகவர் SIKARAM ACADEMY FAST TRACK to CAREERS — 221 - 1/1, மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம் தொ.பே.: 021 - 222 00 11

(C-2065)



**வேலைவாய்ப்புக்கள்**

| | | | |
|---|---|---|---|
| டுபாய் | சுப்பர் மார்க்கட் பணியாளர் விற்பனை பிரதிநிதிகள் | 65,000/- தொடக்கம் 90,000/- | +OT |
| டுபாய் | துப்பரவு பணியாளர்(ஆண்/பெண்) தொழிலாளர்கள் அச்சக பணியாளர் - பெண்கள் | 46,200/- தொடக்கம் | +OT |
| கட்டார் | தண்ணீர் போத்தல் தொழிற்சாலை தொழில்நுட்ப பணியாளர்கள் | 56,000/- தொடக்கம் 120,000/- | |
| சவுதி | பிளாஸ்ரிக் தொழிச்சாலை இயந்திர இயக்குனர்கள் | 56,000/- தொடக்கம் | |
| குவைத் | ஹொட்டேல் பணியாளர்கள் Dish Washer/Steward | 46,350 /- தொடக்கம் | |

குறிப்பு - பணி ஒப்பந்தம் பெற்ற பின்னரே பயணக் கட்டணம்

விபரங்களுக்கு **0777 324 004**

TGL SINCE 1990 Trans Gulf (Pvt) Ltd., 90, First Floor, Chatham Street, Colombo 1 T.P.: 0114 426 222

SIKARAM ACADEMY FAST TRACK to CAREERS — 221 - 1/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம் தொ.பே.: 021 - 222 00 11

(C-2065)



**SATHAPONS**

**சதாபொன்ஸ் கல்வி நிலையம்**

மாலுசந்தி - அல்வாய்

**O/L மீட்டல் வகுப்புக்கள்**

**04.04.2018**

**காலை 7.30 மணிக்கு ஆரம்பம்**

**A/L புதிய வகுப்புக்கள்**

**கலை, வர்த்தகம்**

**ஆரம்பம்**

**04.04.2018**

**மாலை 3.30 மணிக்கு**

**பதிவுகள் இன்று முதல்**

(C-2044)



**வேலையாள் தேவை**

பிரபலமான ஹோட்டல் ஒன்றுக்கு

- சமையல் கோக்கி
- ரொட்டி மேக்கர்
- சாப்பாடு பரிமாறுபவர்

T.P **0774368218,0771926181**

(3449)



**அண்ணா பொதிகள் சேவை**

976,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

லண்டன், ஜேர்மனி, கனடா மற்றும் சில நாடுகளுக்கு விலை குறைக்கப்பட்டுள்ளது

வெளிநாடு, உள் நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

**021 221 5656** **070 330 5500**

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும் நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | வேலணை | ஊர்காவத்துறை | சாவகச்சேரி |
| கிளிநொச்சி | வவுனியா | கனகராயன்குளம் | முல்லைத்தீவு |



**உடனடி வேலை வாய்ப்பு**

**V2 TRAVELS**



**விமானப் பயணச்சீட்டுக்கள்**

**விரைவுப் பொதிகள் சேவை**

நீண்ட காலமாக வேலை தேடுபவரா? எமது அலுவலகத்திலேயே இலவசமாக கற்பித்து வேலையும் கொடுக்கின்றோம்

5,000/=(பயிற்சியின் போது) //15,000/=(பயிற்சியின் பின்னர்)

தகுதி :-40 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)

இதுவரை சரியான வாய்ப்புக்கள் மற்றும் தொழில் அனுபவங்கள் கிடைக்காத வாழ்கையில் முன்னேற துடிக்கும் கடின உழைப்பாளிகளை எதிர்பார்க்கின்றோம்.

நேர்முகத்தேர்வு - 31-03-2018 சனிக்கிழமை காலை 10 மணி

49A சப்பல்லேன்,யாழ்ப்பாணம் (யாழ் பொது நூலகம் முன்னால்) **0768226241**

(C-1987)



**Deutsch and Italian வகுப்புக்கள்**

JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPARTMENT, No.464, Hospital Road, Jaffna.

Tel:- 021 222 3382

மேலதிக தொடர்புகளுக்கு

077 078 2022

(C-2006)



**விரைவு பொதிகள் சேவை**

**விசேட விலை குறைப்பு**



UK-550/=Kg

கனடா-1050/=Kg

DELIVERY IN 3-5 DAYS

தொடர்புகளுக்கு **0768226240**

- மானிப்பாய் - யாழ்ப்பாணம் - கிளிநொச்சி - சாவகச்சேரி - நெல்லியடி - பருத்தித்துறை - வல்வெட்டித்துறை

V2 TRAVELS

(C-1982)



**விக்னா கல்வி நிறுவனம்**

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

T.P. 077 662 9137

அன்றும் இன்றும் என்றுமே O/L Day Class தனித்துவம் வாய்ந்தது

**O/L Day Class**

8 மணி To 2 மணி ஆரம்பம் 04.04.2018 கா.நே. 8 மணி

- கடமை, கட்டுப்பாட்டுடன் நடத்தும் ஒரே நிறுவனம்
- யாழ். நகரில் Day Class இங்கு மட்டுமே
- பிரிவு I 60 மாணவர்களுக்கு மட்டும்
- 40 வருட தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழாம்
- 03.04.2018 முன் அனுமதிகளை பெற்றுக் கொள்ள வேண்டும்
- பிரிவு II மிக விரைவில்
- பாடசாலை மாணவர்களுக்கு சனி, ஞாயிறு ஆண்டு 06 தொடக்கம் O/L வரை 8.00 மணி தொடக்கம் 2 மணி. அனுமதிகள் வழங்கப்படுகிறது.

(C-2043)


## மாவட்ட நீதிமன்றம் யாழ்ப்பாணம்
## பகிரங்க பிஸ்கால் ஏல விற்பனை

கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் (PLC) இல.21, சேர் றசீக் பறீட் மாவத்தை கொழும்பு-01, அதன் சுன்னாகக் கிளை அலுவலகம் இல. 87, "Raja Complex" கே.கே.எஸ். றோட், சுன்னாகம்.

வழக்காளி

வழ. இல. ஈடு/ 25/2016

எதிர்

01. சோதிநாதன் சண்முகதாஸ்
02. சண்முகதாஸ் பெண் உஷாமதி

இருவரும் கோவில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

எதிராளிகள்

2018.03.15 ஆம் திகதி இந்நீதிமன்றினால் இடப்பட்ட கட்டளையின்படி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற பிஸ்காலாகிய துரைச்சாமி சிறீமோகன் ஆகிய என்னை அங்கீகரிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கமைவாகவும் எனக்களிக்கப்பட்ட விற்பனை அதிகாரத்திற்கமைவாகவும் இவ்விற்பனையை நடாத்த மன்று நியமித்துள்ளதால் அதன் கீழுள்ள ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனத்தை குறித்த கொக்குவில், கொக்குவில் கிழக்கு, நந்தாவில் லேன், இல. 23/2:3 இல் அமைந்துள்ள ஆதனத்தில் நின்று 2018 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 02 ஆம் திகதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறியத்தருகின்றேன்.

தீர்வைத் தொகை

எதிராளிகள் வழக்காளிக்கு ரூபா எட்டு இலட்சம் (ரூபா 800, 000) கொடுக்க வேண்டியுள்ளது.

ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று கொக்குவில் இறை : "நொச்சொல்லை காரைக்காடு" நிலப்பரப்பு 4 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.சுப்பிரமணியம் அவர்களால் 28.09.2004 திகதியில் 0548ம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தின்படி நிலப்பரப்பு 3 மூன்று குளி 15.95 பதினைந்து தசம் ஒன்பது ஐந்து. இதில் 2ம் துண்டு எனச் சுட்டப்பட்ட நிலப்பரப்பு 2 இரண்டு கிணறும் வீடும் வான் பயிர்களும் இதற்கெல்லை கிழக்கு : கனகசிங்கம் சத்தியசீலனின் ஆதனம், வடக்கு : குறித்த படத்தின் 1ம் துண்டு மேற்கும் தெற்கும் : ஒழுங்கை இதடங்கலும்

வாங்கற்காரன் கொள்விலையில் நாலிலொரு பங்கை (1/4) உடன் அவ்விடத்திலேயே செலுத்துவதுடன் பின்வரும் செலவுகளையும் மேலதிகமாக செலுத்த வேண்டும்.

அரச இறை (பவுண்டேஜ்)- 1 %

பிஸ்கால் செலவு சிவில் நடைமுறைக் கோவையின்படி

விளம்பரச் செலவுகளும் பிரசித்த செலவுகளும்

விற்பனை சம்பந்தமான போக்குவரத்து செலவுகள்

விற்பனை கமிஷன் 2 1/2 %

விற்பனை ஒப்பந்தக் கட்டணம் (நொத்தாரிஸ் தயாரித்த பட்டியலின்படி)

2018ம் ஆண்டு மார்ச் மாதம் 28ந் திகதி

து. சிறீமோகன்,

பதிவாளர்/ பிஸ்கால், மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

(3447)


**உடனடி வேலை வாய்ப்பு Export Manager**

எங்கள் ஸ்தாபனத்திற்கு Export Manager ஒருவர் உடனடியாகத் தேவை. யாழ்ப்பாண உற்பத்திப் பொருட்களை (விவசாய கைவினைப் பொருட்கள்) வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடியவர்கள் தங்களது திறமைகளை 10.04.2018 முன்பாக அனுப்பி வைக்கவும்.

Mail: vijayalankaexport@gmail.com

தொலைபேசி இல : 021 722 3228

Vijayalanka Exports & Contracts Co. Pvt.Ltd.

No.06, Maniyam Building,

Point Pedro Road, Puttur East, Puttur.

(3441)



**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.03.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.